திரட்டு

Vol. 2. பொருளடக்கம் No. 9.

காமன்வெல்த்தும் இந்தியாவும்	...	5
தமிழ் மறை கண்ட தூது	...	9
மாணவ 'டிராபிக்' போலீஸ்	...	17
இதுதான் தீப்பறவை	...	19
ராமாயணம் தரும் பாடங்கள்	...	22
குள்ளர்களை நம்பலாம்	...	25
சேவையின் மூன்று அங்கங்கள்	..	28
உயிர்க்கனல்	...	33
முகலாயர்களும் கலைகளும்	...	38
ஈசுவர தரிசனம்	...	41
மேவாரின் வீழ்ச்சி	...	44
எதிர்ப்பொருள் கொண்ட பழமொழிகள்	...	49
தூதுப் பிரபந்தம்	...	51
எப்போது வருவார்?	...	53
ஏன் நீரிழிவு?	...	59
ராஜ ஜகத்வீர ராம வெங்கடேசுவர எட்டப்ப மகா ராஜா்	...	61
பொருளின் பொருள்	...	65
மாணவர்களுக்கு அழகு.........மடமை!	...	68
ஹிமாசலப் பிரதேச வாசிகள்	...	73
"ஞாயிற்றுக்கிழமை"	...	76
கர்ப்போபநிஷத்	...	85
கொலைகாரக் கணபதி	...	87
கர்மவீரன் அல்லது பீஷ்ம பிரதிக்ஞை	...	89



Photo] சர்தார் கே. எம். பணிக்கர் [PIB

" அறிவு, ஆற்றல், துணிச்சல், தூய்மை, சொல்வன்மை "

தமிழ்நாடு ... சென்னை 600 0..
198762

"THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

செப்டம்பர் 1955

ஆசியா நாடுகளில் பிரிட்டிஷ் ஆட்சிப் பரவுவதை மிகத் தீவிரமாக எப்போதுமே எதிர்த்துள்ள சர்தார் கே. எம். பணிக்கர் இந்தியா, பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கம் வகிப்பதன் நன்மைகளை விளக்குகிறார்.

காமன்வெல்த்தும் இந்தியாவும்

(சர்தார் கே. எம். பணிக்கர்.)

காமன்வெல்த் ராஜ்யத்தில் இந்தியாவும் ஒன்றாக இருப்பது எவருக்கும் வியப்பைத் தருகிறது. அரசியலில் கரை கண்ட அனைவரும் இந்தியா காமன்வெல்த்தை சேர்ந்திருப்பது மூலம் இந்தியா பலவிதத்தில் பலனடைகிறதென அபிப்பிராயப் படுகின்றனர். இந்தியாவின் சுதந்திரத்திற்கே இந்தத் தொடர்பு ஒரு பலத்த ஆதாரமளிக்கிறது. உலக அரங்கில் இந்தியாவின் அந்தஸ்து இந்த தொடர்பால் உயர்ந்து கொண்டிருக்கிற தெனவும் கூறலாம்.

குடியரசு ஆட்சியைக் கொண்ட இந்தியா தன் விருப்பப்படியே தான் காமன்வெல்த்திலும் அங்கத்தினராயிருக்கிறது. அதனால் காமன்வெல்த்தில் அங்கத்தினராயிருப்பதன் சாதக பாதகங்களை இந்தியா நன்கு பரிசீலனை செய்துவிட்ட தென்பதில் ஐயமில்லை.

பிரிட்டன் 'தாய்', பிரிட்டிஷ் ஆட்சியிலுள்ள மற்ற ராஜ்யங்கள் இந்தத் தாயின் 'குமரி'கள் என்றெல்லாம் பிரசாரமிருந்த காலத்தில் இந்தியாவிற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது வெறுப்பாயிருந்தது. ஆனால் அந்த நிலைமை மாறி காமன்வெல்த்திலுள்ள அனைவரும் சம அந்தஸ்து பெற்றவர்கள் என்ற நிலைமை

வந்துவிட்டது. இப்போது காமன்வெல்த்தைச் சேர்ந்த ராஜ்யங்களுக்கிடையே பொது அரசியல் நோக்கங்கள், உலகப்பிரச்னைகளைப்பற்றி ஏகமனதான அபிப்பிராயங்கள் முதலியன நிலவி வருகின்றன.

உலகமெங்கும் அங்கிகாரம் பெற்ற அரசியல் கொள்கைகள், சமூக நோக்கங்கள், பொருளாதார சுதந்திரம் முதலியவற்றை ஆதாரமாய் வைத்துத்தான் இந்தியா தன் போக்கை அமைத்துள்ளது. இதுதான் இந்தியா காமன்வெல்த்தில் ஒரு அங்கம் வகிப்பதற்கு முக்கிய காரணம். இதனுல் இந்தியாவிற்குப் பிரத்தியேகமான ஆதாயங்கள் பல இருக்கின்றனவென்பதையும் நாம் மறக்கக்கூடாது. இந்தியாவில் ஜாதி மதப்பிரச்னைகளே தனிப்பட்டவை. ஆசிய நாடுகள் ஒன்ருகச் சேரவேண்டுமென்ற கொள்கைக்கும் இந்தியா அளவற்ற ஆதரவை அளிப்பதுண்டு.

பொருளாதாரம், உற்பத்தி, தொழில் முதலிய துறைகளில் இந்தியாவிற்கும் விசேஷமான வேற்றுமைகள் உண்டென்பது உலகப் பிரசித்தம். இப்படியிருக்க இந்தியாவிற்கும், பிரிட்டனுக்கும், மற்ற வெள்ளையர் நாடுகளுக்குமிடையே நிலவியிருப்பது போலி ஐக்கியம்தானே என்றும் சிலர் விவாதிப்பதுண்டு. நீண்டகாலமாக பிரிட்டன் பாடிக்கொண்டு வந்த பாட்டை இந்தியாவும் இப்பொழுது பாடுகிறது. அதனுல் காலப்போக்கில் இந்தியாவிற்கும், பிரிட்டனுக்கும், மற்ற வெள்ளையர் நாடுகளுக்கும் இன்றுள்ள ஐக்கியம் மறைந்துபோகும் என்று கூறுவதில் நியாயமுண்டு. ஆசியாவைச் சேர்ந்துள்ள இந்தியாவிற்குத் தன் தனிப்பட்ட தன்மையும், தன் ஜாதி மதப் பிரச்னைகளையும் அறவே மறந்து இம்மாதிரி பிரச்னைகளில்லாத ராஜ்யங்களோடு எவ்வாறு உறவு கொண்டாட முடியும்.

இம்மாதிரி சந்தேகங்களுக்குக்கெல்லாம் திட்டமான பதில்கள் இன்று அளிக்க முடியாதுதான். ஆனுல் இன்றுள்ள நிலைமைகளிலிருந்து நாளை என்னென்ன நடைபெறுமென்று ஒருவாறு கூறலாம். இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் உள்ள ஐக்கியம் போலி என்று நினைப்பது தவறு. சுமார் இரண்டு நூற்றண்டுகள் இந்தியாவில் பிரிட்டன் ஆட்சி புரிந்ததால் இந்தியர் வாழ்க்கையில் பல அம்சங்களில் பிரிட்டிஷ் உறவு கலந்துள்ளது. இன்றைய இந்தியா மனுநீதியை ஒட்டி வாழ்க்கை நடத்தவில்லை.

ஹிந்து நோக்கங்களை நம் மனத்திலிருந்து அகற்ற முடியாவிடினும் நூற்றண்டுகளாய் இந்தியாவில் அமலிலிருந்த மேல் நாட்டு கருத்துக்களும், கல்வி முறைகளும் கல்வி பெற்றவர்களை எவ்வாறு பாதிக்காமலிருக்க முடியும்? இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்திய மண்ணில் ஊறியுள்ள ஹிந்து மனப்பான்மை நம்மில் குடி கொண்டிருந்தும் சமூகப் பிரச்னைகளில் மேல் நாட்டுக் கருத்துக்கள் ஆதிக்கஞ் செலுத்த வொட்டாமல் செய்ய முடி

கிறதா? ஹிந்துக்களுக்கு மிகப் புராதனச் செல்வம் தங்கள் மதம் தானென்றாலும் அந்த மதத்திற்குப் புத்துயிர் அளித்தது பிரிட்டிஷாரும், பிரிட்டிஷ் கொள்கைகளுமே. இப்படி தனக்கு அநேக நூற்றாண்டுகளாக நிலவியிருக்கும் ஹிந்து பாரம்பரியமிருந்த போதிலும் பிரிட்டிஷார்களிடமும் அவர்கள் கொள்கைகளிடமும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் இந்த அரசியல் விஷயத்தில் பிரிட்டிஷாருடன் காண்பிக்கும் ஒற்றுமை போலி ஒற்றுமை அல்ல என்து நான் திட்டமாய்க் கூறுவேன்.

இது இன்றைய நிலைமை.

அயலிலுள்ள பெரிய ராஜ்யமான சீனா கம்யூனிஸத்தில் மூழ்கி விட்டது. மற்றொரு புறம் கம்யூனிஸத்திற்கெதிராக அமெரிக்கா மிகப் பெரிய மூஸ்தீபுகளைச் செய்து வருகிறது. இவ்விரண்டு பேர்களுக்கும் பலியாகாமலிருப்பதற்கு ஒரே சஞ்சீவி காமன்வெல்த் உறவைப் பலப்படுத்திக் கொள்வதுதான்.

அரசியல் துறையில் அவ்வளவாக அனுபவமில்லாத இந்தியாவிற்கு காமன்வெல்த்தில் ஒரு அங்கம் வகிப்பதின் மூலம் அரசியல் விஷயங்களில் பழுத்த ஞானமுள்ள பிரிட்டனின் உதவி கிடைக்கிறது. இது போன்றே பொருளாதாரம் உற்பத்தி, வியாபாரத் துறைகளிலும் காமன்வெல்த்தில் அங்கத்தினராயிருப்பதால் பிரிட்டனிலிருந்தும் மற்ற காமன்வெல்த் ராஜ்யங்களிலிருந்தும் அளவற்ற ஆதரவு இந்தியாவிற்கு கிடைக்கிறது.

இந்தியா காமன்வெல்த்தில் ஒரு அங்கம் வகிப்பதைப் பற்றி பிரிட்டனுக்கு என்ன அபிப்பிராயம்? இந்தியாவிற்கு அரசியல், பொருளாதார, உற்பத்தித் துறைகளில் தான் அளிக்கும் உதவிக்கு ஈடாக இந்தியாவால் ஒன்றும் அளிக்கமுடியாதென்று பிரிட்டனுக்குத் தெரியும். ஆனால் இந்தியா காமன்வெல்த்தில் ஒரு அங்கத்தினராயிருப்பதன் மூலம் காமன்வெல்த் பிரிட்டிஷார் ஆட்டி வைக்கும் ஒரு ஸ்தாபனம் என்று குறை கூறமுடியாது. இதுதான் இந்தியா காமன்வெல்த்தில் அங்கம் வகிப்பதால் பிரிட்டன் அடையும் சாதகம்.

இந்தியா ஒரு அங்கத்தினராயிருப்பதால் காமன்வெல்த் ஒரு விசேஷச் சிறப்புள்ள ஸ்தாபனமாக விளங்குகிறது. இம்மாதிரி ஸ்தாபனத்தை அமைக்க எந்த ராஜ்யங்களும் எந்த இனத்தாரும் இது வரை முயற்சித்தது கிடையாது. 1947-ம் ஆண்டு வரையிலும் ஐரோப்பிய இனத்தார்களை மட்டும் அங்கத்தினராய்க் கொண்ட காமன்வெல்த் 1947-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா, இலங்கை போன்ற ஆசியா நாடுகளின் தொடர்பு மூலம் மிக உன்னத அரசியல் பிணைப்பிற்குச் சின்னமாக விளங்குகிறது. பிரிட்டனுக்கு போதுமான அரசியல் செல்வாக்கும் பொருளாதார பலமுமிருந்தாலுங்கூட இன்றும் பிரிட்டன் உலக ராஜ்யங்

களுக்குக்கெல்லாம் தலைமை ஸ்தானம் வகிப்பதற்குக் காரணம் அநேக ஜாதி மதங்களைக் கொண்ட ஆசிய நாடுகளின் பிணைப்பேயாகும்.

காமன்வெல்த்தின் அங்கத்தினர்களான ராஜ்யங்களனைத்தும் பரிபூரண சுதந்திரம் பெற்றவை. இதனாலேயே இந்த ராஜ்யங்களுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. இந்தியா, தென் ஆப்பிரிக்கா சச்சரவு இந்தச் சுதந்திரத்திற்கு பரிதாபகரமான ஒரு உதாரணம். தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளை அதிகாரிகளும், வெள்ளையர்களும் கருப்பரை விடத் தாங்கள் சிருஷ்டியில் உயர்ந்தவர்களென்று அபிப்பிராயங் கொண்டவர்கள். அதனால் கருப்பர்களை ஆள்வதற்குத் தங்களுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்ட உரிமையைச் செலுத்தித் தான் தீருவோமென்று சாதிக்கின்றனர். இம்மாதிரி முரணான அபிப்பிராயத்தைக் கொண்ட ஒரு அங்கத்தினரைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தில் தானும் எவ்வாறு அங்கம் வகிப்பதென்று இந்தியாவும் இன்று அல்லது நாளை தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய விஷயம்தான். ஆப்பிரிக்காவில், மற்றும் சில நாடுகளில் பிரிட்டன் கையாண்டு வரும் முறைகளைப் பற்றியும் இந்தியாவிற்கு அபிப்பிராய பேதங்களுண்டு. பொதுவாக ஆப்பிரிக்காவைப் பற்றி இந்தியாவின் ஒரே கொள்கை என்னவென்றால் ஆப்பிரிக்காவை ஆப்பிரிக்க மக்களே ஆளவேண்டுமென்பது தான் இன்று ஆசியா நாடுகளின் அரசியல் பிரச்னைகளில் பிரிட்டிஷ் காமன்வெல்த்திற்கு ஒரு முக்கிய ஸ்தானமுண்டு. இந்த ஸ்தானத்திற்கு ஆதாரமாயிருப்பது பிரிட்டனுக்கும் இந்தியாவிற்குமிடையேயுள்ள உறவுதான். இந்த உறவு படிப்படியாக வளருவதற்கு அநேக அரசியல், பொருளாதாரக் காரணங்களுண்டு. இந்த உறவு அடையும் உறுதிக்கு ஏற்றவாறே இருக்கும் ஆசியாவில் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் ஸ்தானம். காமன்வெல்த்தைச் சேர்ந்த கானடா, ஆஸ்திரேலியா நாடுகளுடனும் இந்தியா நேசமுடனிருக்கிறது. இந்த நேசத்திற்கு ஆதாரமான பிரிட்டிஷ் காமன்வெல்த்தை இந்தியா பாராட்டும்.

காமன்வெல்த் என்ற கொள்கை கண்டனத்திற்குரியதல்ல. அது இந்தியாவிற்குச் சில நன்மைகளை விளைவிக்கும் ஒரு சக்தி தான்.

—*English Speaking World* (Courtesy : *Magazine Digest.*)

தமிழ் மறை கண்ட தூது

★

முன் காலத்தில் முடியாட்சியிருந்த போதிலும் சரி, தற்போது நடைமுறையில் இருந்து வரும் ஜனநாயக அல்லது சர்வாதிகார ஆட்சிகளிலும் சரி, தூதுவர்கள் இன்றியமையாத அரசாங்க உறுப்பினராகயிருக்கிறார்கள். பண்டு அரசர்கள் ஆண்ட காலத்தில், ஒரு அரசனின் செய்திகளை மற்ற அரசரிடம் அல்லது அரசர்களிடம் சென்று கூறுதல் அக்காலத்திய தூதுவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கடமையாகும். அவ்வாறு அவர்கள் தூது செல்லுகின்ற நேரத்தில் அவர்களைப் பல்வேறான அபாயங்கள் காத்துக் கிடந்தன. அவர்கள் கொண்டு வரும் 'செய்தி கேட்கும் அரசர்களுக்குப் பிடிக்காததாக இருக்கலாம். சில சமயங்களில் எதிரிகளிடத்திற்கே செல்லும்படியாகவுமிருக்கலாம். சிற்சில சமயங்களில் அவர்கள் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.

ஆனால் தூது வந்தவனைக் கொல்லுதல் கூடாது என்பது தான் தொன்று தொட்டு வந்துள்ள தர்மம். இராமாயணத்தில் தூது சென்ற அங்கதனை, இராவணன், இம்சிக்காமல் செல்ல அனுமதித்ததும், அனுமானைக் கொல்ல இராவணன் நினைத்த போது, விபீஷணன், தர்மத்தை யெடுத்துக் கூறி அனுமானின் உயிரைக் காத்ததுமான நிகழ்ச்சிகள், இதை நன்றாக உணர்த்துகின்றன.

ஆனால் இன்றைய நாகரிக உலகத்திலும் அவர்கள் நிலை ஆபத்தற்றது என்று கூற இயலாது. இன்று நம் சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகள் உலகத்தின் பல நாடுகளிலும்—சிறிதும் பெரிதும்—தங்கள் பணிகளையாற்றி வருகிறார்கள். அவர்கள் செல்லும் நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் அமைதியான உறவு இருந்தால் அவர்கள் நிலையைப் பற்றிக் கவலை கொள்ளக் காரணமில்லை. ஆனால் இதற்கு மாறாக, இரண்டு அரசாங்கங்களிடையேயும் வேற்றுமைகள் உண்டாகி, அதனால் அந்நாட்டு மக்களின் கோபமும் ஆத்திரமும் தூண்டப்பட்டால் நம் தூதுவர்களின் நிலை கவலைக்குள்ளாகிறது.

சமீப காலத்தில், காபூலில், ஆப்கானிய சர்க்காருக்கும் பாகிஸ்தான் சர்க்காருக்குமிடையே யிருந்த மனஸ்தாபத்தால் பாகிஸ்தான் தூதராலயம் தாக்கப்பட்டதையும், பாகிஸ்தான் கொடி கிழிக்கப்பட்டதையும், அதற்கு பதிலாக கராச்சியில் ஆப்கானிய தூதராலயம் தாக்கப்பட்டதையும் நம் அன்றாட தினசரிகளில் படிக்கின்றோம். தெற்கு வியட்நாமில், இந்தியாவின்

தலைமையில் நடக்கும் யுத்த நிறுத்த மேற்பார்வைக் குழுவிற்கு எதிராக அங்குள்ள காலிகள் அந்நாட்டு சர்க்காரின் ஆதரவுடன், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, அக்குழுவின் காரியாலயத்தை தாக்கி பலத்த சேதம் விளைவித்திருக்கிறார்கள். இதே மாதிரி, கொரியாவிலும் இயங்கி வரும் குழுவிற்கெதிராகவும், அந்நாட்டு சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

இவ்வளவு ஆபத்திற்கிடமளிக்கக் கூடிய பதவியான தூதுவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அப்பதவிகளுக்கு, அந்தந்த நாட்டின் நிலைமைக்கேற்றவாறு தூதுவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு இன்றியமையாத தூதுவர்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும். அவர்களுக்குச் சிறந்த தகுதிகள் யாவை, அவர்கள் கடமைகள் என்ன, எத்தகைய குணங்கள் அவர்களுக்கு வேண்டியவை, என்பவைகளைத் தமிழ் மறை கண்ட தெய்வ வள்ளுவர் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட அது இன்றைய நிலைமைகளுக்கும் பொருந்துவது, திருவள்ளுவரின் ஞான சக்திக்கும், அவருடைய அறிவிற்கும் ஆற்றலுக்குமோர் உதாரணமாகயிருக்கிறது.

முதலில் தூது செல்பவருடைய தகுதிகளைப் பற்றி ஆராய்வோம்:

"அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றின்
செறிவுடையான் செல்க வினைக்கு."

வள்ளுவர் வகுத்த முதல் தகுதி அறிவு. அதுவும் இயற்கை அறிவு. எத்தகைய சிக்கலான விஷயமாகயிருந்தாலும் தானாகவே உண்டாகும் மனத் தெளிவினாலும், அறிவினாலும் அச் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இயற்கை அறிவு மட்டும் இருந்தால் போதாது, உருவமும் வேண்டும். உருவம் எத்தகையதாக இருக்க வேண்டும்! அன்னியர்களை ஆகர்ஷிக்கக் கூடியதாகயிருக்கவேண்டும்; எதிரிகளின் நெஞ்சத்தில் அச்சத்தையும் சஞ்சலத்தையும் உண்டு பண்ணக் கூடியதும், நண்பர்களின் உள்ளத்தில் நம்பிக்கையை உண்டாக்கக் கூடியதாகவும், கம்பீரமாகவும் இருத்தல் வேண்டும்.

இவையிரண்டுமிருப்பினும், ஆராய்ந்த கல்வி இல்லையேல் இவைகள் பயனற்றதாகிவிடும். அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம், கலைகள், இவைகளைத் திறமையுடன் ஆராய்ந்து அதனால் பெற்ற அறிவு வேண்டும். மேலும் தூது செல்பவர்கள் தாங்கள் தூதுவர்களாக செல்லவிருக்கும் நாட்டின் சரித்திரம்

பூகோளம், அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், அங்குள்ள அரசியல் பொருளாதார நிலை இவைகளை நன்ருக அலசிப் பார்த்து அதற்கேற்றபடித் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும்.

அடுத்த குறளில் மேலும் விளக்குகிருர் வள்ளுவர் :

" தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது."

இயற்கை ஞானம், ஏற்ற உருவம், ஆராய்ந்து அறிந்த அறிவு இவைகள் இருந்தும் தன் கருத்துக்களைப் பிறர் அறியும் வண்ணம் சொல்ல முடியாவிட்டால், அது குடத்திற்குள் ஏற்றப்பட்ட விளக்கு போலத்தான் இருக்கும். தன் அரசாங்கத்தின் கருத்துக்களை வெளிநாடுகளில், வெளியிடும்போது ஒரே கோர்வையான முறையில், நன்ருக ஆராய்ந்து, எதை முதலில் கூறவேண்டும், எது கடைசியில் வரவேண்டும் என்பதை முன்னதாகவே தீர்மானித்து தங்கள் அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும். அது மட்டுமல்ல. எவைகளை வெளியிட்டால், அல்லது சேர்த்தால், தங்கள் நாட்டிற்கு பயனளிக்காமல் விரோதத்தையும் பகைமையையும் வளர்க்குமோ, அவைகளை மிக்க கவனத்துடன் நீக்குதல் மிக அவசியம். அவ்வாறு அறிக்கைகளை வெளியிடும்போது, அந்தந்த நாட்டு மக்களின் மனோபாவத்திற்கேற்றவாறும், அவர்களின் மனதில் நட்பையும் ,அன்பையும் சந்தோஷத்தையும் வளர்க்குமாறு தகுந்த வார்த்தைகளால் அமைத்தலே சிறந்த தூதுவனின் கடமையும் திறமையும் ஆகும். அறிக்கைகளை வெளியிடும்போது, அவைகளினுல் தன் சர்க்காருக்கு, எவ்வளவு சாதகமான பலனைத் திரட்ட முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அடுத்த குறளில் என்ன கூறுகிருர் பாருங்கள் :

" கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது."

தன்னுடைய கடமைகளைத் திறமையாகவும், சரிவரவும், செலுத்துவதற்குதவும் எல்லா விஷயங்களையும் செவ்வனே கற்க வேண்டும். எதிரிகளின் கண்களைக் கண்டு அஞ்சாமல், பதட்டமடையாமல்—இக்காலத்தில், எதிர்க் கோஷ்டிகளின் ஆர்ப்பாட்டங்களையும், எதிர்க் கட்சிப் பத்திரிகைகளின் தாக்குதல்களையும் கண்டு தளராமல்—கருமமே கண்ணு யிருத்தல்தான் தூதுவரின் சிறந்த அணிகலன். அங்ஙனம் எதிர்ப்புகள் தலை தூக்குகின்ற காலத்தில், அந்நாட்டு மக்களின் மனதில்—முடிந்தால் எதிரிகளின் மனதிலும்—பசுமரத்தாணிபோல் பதியுமாறு, தன் சர்க்காரின் கொள்கைகளைத் துணிவுடனும் சாகசத்துடனும் எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு எதிர்ப்புகள் ஏற்படும் நேரத்தில், நன்ருக

தீர ஆலோசித்து, காலத்திற்கு பொருத்தமானதை—அதாவது எக்காலத்தில் எதை எவ்வாறு செய்தால், தன் நாட்டிற்கு பலனதிகமாக கிடைக்குமோ அவ்வாறு—அறிபவனே தகுதியான தூதுவன்.

அடுத்த பாட்டைக் கவனிப்போம்:

"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை."

தன் கடமைகள் என்னவென்று முதலில் நன்ருக தெரிய வேண்டும். தன் கடமைகள் இன்னவையென்று வரையறுத்து அறிந்துகொண்டு பிறகு அதைச் செயலில் காட்டுவதற்கேற்ற காலத்தை நோக்கி யிருந்து, தகுந்த காலம் கிட்டியவுடன், அக் கடமைகள் வெற்றியுடன் நிறைவேறத் தக்க இடத்தையும் ஆராய்ந்து அறிந்து, தன் சர்க்காரின் கட்சியை எடுத்துரைப் பவனே சிறந்த தூதுவன்.

மேலும் தொடருகிருர் வள்ளுவர்:

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு."

ஒரு நாட்டின் பிரதிநிதியாக இன்னெரு நாட்டிற்கு செல்லும் தூதுவன், நல்ல தூய ஒழுக்கத்தில் நின்றல் இன்றியமையாத தாகும். ஏனெனில், அத்தகைய தூதுவரின் ஒழுக்கத்தால், அவருடைய நாட்டிற்கு நல்ல பெயரும், அவர் ஒழுக்கத்தில் தவறினல் கெட்ட பெயருமுண்டாகிறது. அவர் ஒழுக்கந் தவறி நடந்தால், அத் தூதுவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்படி, அந் நாட்டு சர்க்கார், தூதுவரின் சர்க்காரைக் கேட்கும். அதன்படி அவர் திருப்பி அழைக்கப்படுவார், அதனல் அவருக்கும் அவர் நாட்டிற்கும் தீது விளைகிறது. அடுத்தது துணைமை. அதாவது தனக்குச் சிறந்த துணைவர்களைத் தேடிக்கொள்ளுதல். தனக்கு என்ருல் அது அவர் நாட்டிற்கு என்று பொருளாகும். தூய ஒழுக்கத்தில் நின்று ஒரு தூதுவர் தம் கடமைகளை அஞ்சாமல் திறமையுடன் நிறைவேற்றினல் அவரைச் சார்ந்து நின்று அவருக்கு ஆபத்து காலத்தில் உதவ அந் நாட்டிலேயே முன்வருவார்கள். தூய்மை இருந்தால் துணைமை தாஞகவே வந்துவிடும்.

தூய்மையும் துணைமையும் ஒன்றுசேர்ந்தால் துணிவுடைமையைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. தான் செய்யப் போகும் காரியங்கள், இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை கொண்டு, தன்னுடைய உயர்ந்த பழக்க வழக்கங்களினலும், குணங்களாலும் கொள்கைகளாலும், பல ஆதரிப்பாளர்களைச் சேர்த்து கொண்டிருக்கும், எந்த தூதுவருக்கும், துணிவும், தைரியமும் தாஞகவே உண்டாவதில் ஆச்சரியம் அதிகமில்லை. தான் எடுத்த காரியத்தைத் திறமையுடனும், தைரியத்துடனும்,

வெற்றியில் முடிக்கும் உறுதி அவருக்கிருத்தல் அத்யாவசியம். இதுமட்டுமா !

"விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய் சோரா வன்கணவன்."

குற்றமான சொற்களை—பிற நாட்டு மக்களிடையே கொதிப்பையும், எதிர்ப்பையும் உண்டு பண்ணுகின்ற—வாய் தவறியும் கூருதவனே, பிற நாடுகளில் தன் நாட்டுச் சர்க்காரைப் பிரதிபலிக்கத் தகுந்தவன். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை, ஜப்பானில் அமெரிக்க இராணுவ தளபதியாயிருந்து, சிறிது நாள் கொரியாப் போரையும் நடத்திய ஜெனரல் மக்ஆர்தர், பார்மோஸாவைப் பற்றிப் பேச, அதனல் அவர் ஜனதிபதி ட்ரூமனல் பதவியினின்றும் நீக்கப்பட்டது உள்ளங்கை நெல்லிக் கனி போல காட்டுகிறது.

மேலும் ;

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு."

அன்புடையவருதல் என்பது, இக்காலத்தில், தான் செல்லும் நாட்டு மக்களின் மதத்தையும், கலாசாரத்தையும், அருங் கலைகளையும், நன்ருக ஆராய்ந்து, அவைகளைப் பாராட்டி, அவற்றின் வளர்ச்சிக்குத் தன்னலான உதவியை யளித்து, அவர்களிடம் அன்பைச் செலுத்தி, அதனல் அவர்களின் நன்றியையும், அன்பையும் நூறு மடங்காக தான் நாட்டிற்குத் திரும்பிப் பெறல் என்று கூறலாம். சிறந்த குடிப் பிறப்பும் வேண்டும். சிறந்த குடி பிறப்பென்ருல், உயர்ந்த ஜாதிப் பிறப்போ, அல்லது பணம் படைத்த குடும்பத்தில் பிறப்போ, அல்லது பிரபுக்களின் வாரிசாகப் பிறத்தலையோ குறிப்பதல்ல. ஆனல், எந்தக் குடும்பத்தின் முன்னேர்கள் தங்கள் செய்கைகளினல் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்களோ, அத்தகைய குடி பிறப்பே வேண்டும். இதை வள்ளுவர் சற்றுக் கடைசியில் பாடியதே, அத்தகைய குடிப் பிறப்பும் அவ்வளவு அவசியமல்ல. ஆனலும் இருந்தால் நல்லது என்பதையே குறிக்கிறது.

அக்காலத்தில் அரசன் விரும்பும் பண்புகள் என்று கூறினலும் உண்மையில், தான் யாருக்குப் பிரதிநிதியாக செல்லுகிருனே, அவர்கள் விரும்பும் குணங்கள் என்றேதான் அர்த்தம். அதனல், அது இக்காலத்திய ஜனநாயக ஆட்சியில், மக்கள் போற்றும் பண்புகள் அவனுக்கிருத்தல் அவசியம்.

அடுத்த பாட்டில் :

"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று."

என்று முன்னம் கூறியதையே மேலும் அழுத்தம் திருத்த மாகக் கூறுகிருர். காரணம், அவைகள்தான் முக்கியம் என்று அக்காலத்திலேயே அவர் கண்டறிந்து கூறினர். என்றும் உல கில் அமைதி நிலை பெறவேண்டும் என்ற, எண்ணத்துடன், மக்க ளிடம் அன்பும், விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நல்லவைகளை எடுத்துத் தீயவைகளை அகற்றும் அறிவும், எத்தகைய சிக்கலான விஷயத்தையும் ஆராய்ந்து சிக்கல்களகற்றி, கேட்பவர்களிடத்தில் பதியுமாறு உரைக்கும் சொல் வன்மையும் இல்லாதவன், தூது ரைக்கச் செல்வானேல், அதனுல் தீங்குதான் நேரிடுமே யன்றி நன்மை ஒருபோதும் உண்டாகாது. சுருங்கச் சொல்லின் இம் மூன்றும் இல்லாதான் தூதுவனுகை யிருக்கத் தகுதியற்றவன்.

மேலும் வருகின்ற குறளில் :

"நூலாருள் நூல்வல்லான் ஆகுதல் வேலார்முன்
வென்றி வினையுரைப்பான் பண்பு."

நூலாருள் நூல்வல்லன் ஆதல் வேண்டும். நன்ருக படித்து தேறிய அறிஞர்களுள் சிறந்த அறிஞன் ஆக இருத்தல் அவசியம். சாதாரண மக்களைவிட அறிவுடையவனுகவோ, அல்லது படிப்புள் ளவனுகவோ இருந்தால் மட்டும் போதாது. படித்த பெருமக்க ளிடையே சிறந்த அறிவாளியாகத் திகழ வேண்டும். அவ்வாறு இருப்பவன்தான், வெற்றிகரமாக தன்னுடைய நாட்டிற்கும், மக்க ளுக்கும், சர்க்காருக்கும் நன்மையையும் ஜயத்தையும் தேடுவான்.

கடைசிக் குறளில் சொல்லுகிருர் :

"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு
உறுதி பயப்பதாம் தூது."

மேலே கூறிய குணங்கள் அத்தனையும் படைத்தவனுகை யிருந் தும், தன்னுயிரையே பெரிதாகக் கருதுகிறவன் தூதுவனுகச் செல்லக் கூடாது, செல்லவும் விடக்கூடாது. தனக்கு அழிவே வருவதாக யிருந்தாலும், தன்னுயிர் இழக்கும்படி நேரிட்டாலும், அதற்காக அஞ்சாமல், அஞ்சி விட்டுவிடாமல், தன் நாட்டிற்கும், தன் சர்க்காருக்கும் நன்மையைத் தேடுகின்றவனே தூதன். தன் னுயிரைத் துறந்தால், அதனுல் தன் நாட்டிற்கு பலன் கிடைக் குமேயானுல், அதை இழப்பதற்குத் துணிய வேண்டுமே யல்லாது, தன்னுயிரைக் காக்க, தன் நாட்டைக் காட்டிக் கொடுத்தல் அவ னுக்கழகல்ல.

வள்ளுவர் வகுத்துள்ள தகுதிகள் படைத்த தூதுவர்களை இந்திய மக்கள் தேடிப் பிடித்து, உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பினுல், அதனுல் இந்தியாவின் புகழ் எங்கும் விரிந்து பரவு

வது மட்டுமல்லாமல், இந்தியாவின் கலாசாரத்தையும், அருங்கலைகளையும், அங்கெல்லாம் பரப்பி உலகத்திற்கே ஒரு உதாரணமாக இருக்கலாம். உலகில் அமைதிக்காக இன்று நாம் நிற்கிறோம். நம் நாட்டு தூதுவர்கள் அனேகம் பேர் இன்று உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றிருக்கிறார்கள். ஆங்காங்கு, இந்தியாவின் பெயருக்கு இழிவு நேரிடாமல் இருக்க வேண்டுமானால், அவர்களுக்கு வள்ளுவர் சொல்லிச் சென்ற தகுதிகள் உண்டா என்பதை ஆராய்ந்து, அத்தகைய தகுதிகள் உள்ளவர்களையே அனுப்புதல் இந்திய சர்க்காரின் மட்டுமல்ல, இந்திய மக்களின் கடமையுமாகும்.

வாழ்க வள்ளுவர்! வாழ்க செந்தமிழ்!

தொகுத்தவர் : எஸ். கிருஷ்ணன்.

SMART TAILORING HOUSE

"SMART" is our key note. We have specialised ourselves in making clothes for men and we guarantee a perfectly cut close-fit modern style. Moreover we have been doing this work for the last 14 years in Madras city. Tweed, Woollen, Silk, Linen and Cotton Suits are being stitched in a most decent manner.

We possess certificates and Testimonials to speak about our ability and prompt execution of orders.

A trial will convince you of our workmanship. Our charge is moderate, reasonable and nominal.

Prop : **K. M. THOMAS**

No. 136, Bazaar Road

Royapettah, MADRAS-14.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

ஒவ்வொரு இதழிலும் அரசியல், சமூகம், விஞ்ஞானம், சுகாதாரம் முதலிய அநேக விஷயங்களைப் பற்றி சுவையான பல கட்டுரைகள் வெளி வரும். 100 பக்கங்கள். தனிப் பிரதி 6 அணா. வருஷ சந்தா ரூபாய் 4—8—0

அபிப்பிராயங்கள்

This Journal is a Digest of some of the best articles, skits and essays culled from Tamil and other languages...........brings to the Tamil raaders the best that has been thought out and expressed in different periodicals and other media.

—*"Sunday Times"*

★

உலகப் பிரசித்திபெற்ற அமெரிக்க 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற மாஸிகையை மனத்தில் கொண்டே இந்த மாஸிகையை இதன் ஆசிரியர் தொகுத்திருக்கிறார். அரசியல், சமூகம், தத்துவம், விஞ்ஞானம் சம்பந்தமான கட்டுரைகளும், பிறநாட்டறிஞர்களின் வரலாறுகளும், அறிவுரைகளும் ஆங்கில மூலங்களிலிருந்து தெளிவாகத் தமிழாக்கப்பட்ட கட்டுரைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பெண்களும் பிள்ளைகளும் வாசித்துப்பயன்படக்கூடிய நல்ல வெளியீடு இது. —**'நாரதர்**

★

மாதந்தோறும் சிறந்த கட்டுரைகளைத் தேடி யெடுத்து ரஸிகர்களுக்கு வெண்ணெயாக உருட்டித் தருவது தமிழுக்கும் அறிவுப் பசியுள்ளவர்களுக்கும் செய்யும் சிறந்த தொண்டாகும். அறிவுச்சுடர் திரட்டு முழுவதும் ஒளி பரப்புகிறது.

—**"பாரத தேவி"**

★

'திரட்டை' வரவேற்கிறோம். உலகப் புகழ்பெற்ற ரீடர்ஸ் டைஜஸ்ட் போல இதில் பல சுவையுள்ள விஷயங்கள் காண்கின்றன. விஷயங்களில் பல ஆங்கில மூலங்களிலிருந்து எடுக்கப்பட்டு தெளிவான தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

—**"சுதேசமித்திரன்"**

மானேஜர், **திரட்டு**

22-A, நரசிங்கபுரம் தெரு,

மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற் கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

மாணவ 'டிராபிக்' போலீஸ்

★

வீதிகளிலும், பொது ரஸ்தாக்களிலும் வெகு வேகமாக ஓடும் மோட்டார் வண்டிகள் மூலம் சிறுவர்களுக்கு ஏற்படும் விபத்துகள், நகரங்களுக்குள்ள பெருந் தலைவலிகளில் ஒன்று. போலீஸ்காரர்களின் வழக்கமான பந்தோபஸ்திருந்தாலும் அநேக சிறுவர்கள் விபத்துக்காளாவதை எப்படி தடுப்பதென்று நீண்ட காலமாக மேல் நாடுகளில் யோசிக்கப்பட்டு வந்துள்ளது. இம்மாதிரி தீவிர யோசனையின் விளைவாக நார்வே ராஜ்யத்தின் தலை நகரமான ஆஸ்லோவில் சில திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் பாதைகளைத் தாண்டும்போது அவர்களுக்குத் துணை புரிவதற்கு பாதைகளைக் கடக்குமிடங்களில் மாணவர்களை போலீஸ்காரர்களைப்போல், போக்கு வரத்து பந்தோபஸ்தைக் கவனிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படி செய்ததன் மூலம் விபத்துக்களின் எண்ணிக்கை ஒருவாறு குறைந்துள்ளதாகத் தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

பம்பாய் போக்குவரத்து போலீஸ்காரர் ஒருவரிடம் ஒரு மாணவர் பயிற்சி பெறும் காட்சி.

ஆஸ்லோ நகரத்தில் சென்ற ஆண்டு வரையிலும் வருஷந்தோறும் சுமார் 280 சிறுவர்கள் விபத்துக்குள்ளாகி வந்தனர். இந்தப் புது ஏற்பாட்டின் மூலம் சென்ற வருஷத்தில் 240 சிறுவர்களே விபத்தினால் மாண்டுள்ளார்களாம்.

இரண்டு வருஷங்களுக்கு முன் ஆஸ்லோ நகர அதிகாரிகளுக்கு இந்த யோசனை தோன்றிற்று. உடனடியாகச் சில பள்ளிக்கூடங்களிலுள்ள சிறுவர்களுக்குப் பாதை — போக்கு வரத்து பந்தோபஸ்து முறைகளைப் பயிற்சியளித்தது பாதை போக்குவரத்து போலீஸ் இலாகாதான்.

பொம்மை மோட்டார், பொம்மை சாலை பொம்மை மனிதன் முதலியவற்றைக் கொண்டு போக்குவரத்து பாதுகாப்பு முறைகளைச் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. பிறகு விளையாட்டு நேரத்தில் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த விளையாட்டு மைதானத்தில் சிறுவர்களையே விளையாட்டு மோட்



பயிற்சி பெற்ற மாணவர்கள் போக்குவரத்தை
கண்காணிக்கும் காட்சிகள்.

டார், விளையாட்டு மூன்று சக்கர .சைக்கிள்களில் நடமாடச் செய்வதன் மூலமும் பயிற்சியளிக்கப்படுகிறது. பிறகு போக்குவரத்து பந்தோபஸ்து வேலையில் ஈடுபட்டுள்ள போலீஸ்காரர்களுடன் இச் சிறுவர்கள் போக்கு வரத்து பந்தோபஸ்து வேலையிலீடுபடுகிறார்கள். இந்தப் போக்குவரத்து பந்தோபஸ்துச் சிறுவர் படை காலையிலும், மாலையிலும் திரள் திரளாகம் சிறுவர்கள் பள்ளிகளுக்குச் செல்லும் போதும் வீடுகளுக்குத் திரும்புச் போதும் போக்குவரத்து நெருக்கடியாயுள்ள இடங்களில் நின்றுகொண்டு சிறுவர்கள் விபத்துக்காளாகாமல் பாதுகாக்கிறார்கள்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அருகேயுள்ள போக்குவரத்து அதிகமாயுள்ள சாலைகளில் அந்தந்த பள்ளியைச் சேர்ந்த சிறுவர்கள் இவ்வாறு துணை புரிகிறார்கள். இவ்வேலையிலீடுபட்டுள்ள சிறுவர்களுக்குப் பிரத்தியேக 'யூனிபாரம்' உண்டு. பள்ளிக்கூடங்களின் வாசல்களிலுள்ள பாதைகளில் இருபுறமும் நின்று கொண்டு திரள் திரளாக வரும் சிறுவர்கள், மோட்டார் வண்டிகள் போக்குவரத்தை கண்காணித்துக் கொண்டிருப்பதைக் காணக் 'கண் கோடி' வேண்டும்.

போக்குவரத்து பந்தோபஸ்து வேலை புரியும் இச்சிறுவர்கள் கைகளை உயர்த்தும் போது மோட்டார் ஓட்டிகள் கூட வண்டிகளை நிறுத்தி விடுவார்கள். அப்போதுதான் சிறுவர்கள் பாதையைக் கடந்து போகலாம். சிறுவர்களுக்கு இந்தப் புது வேலை மிகுந்த உற்சாகத்தை யளிக்கிறது. வழக்கமான விளையாட்டுகளில் இதை ஒரு அம்சமாகவே கருதுகிறார்கள் இவர்கள். நம் நாட்டிலும், சமீப காலமாக பம்பாய் நகரத்திலும் சிறுவர்களுக்கு இந்த வேலையில் பயிற்சியளிக்கிறார்கள். இது சம்பந்தமாய் நடந்து வரும் முயற்சிகளை இங்கே வெளியிட்டுள்ள படங்களில் காணலாம்.

—*State Transport Review*, Bombay.

இதுதான் தீப் பறவை

★

> அல்லா தன் புனிதமான உதடுகளால் தீப் பறவையின் இறக்கைகளை முத்தமிட்டு அவை செல்வம் கொழிக்கச் செய்தார்.
>
> *அரபுப் பழமொழி.*

மிருகக் கண் காட்சி சாலையில் நீங்கள் தீப்பறவையைப் பார்த்த துண்டா?

இது ஒரு மனிதன் ஒரு துண்டு துணியைக் கிழிப்பதுபோல் தன் கால் நகத்தால் மனித உடலைக் கிழிக்கும் சக்தி பெற்றதென்று உங்களுக்குத் தெரியுமா? இவ்வளவு சக்தி வாய்ந்த பறவை மூளையேயில்லாத ஒரு பறவையுங்கூட என்பது உங்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கலாம். பறவையினத்திலேயே தீப் பறவை ஒரு கோமாளி.

இப்பறவை பறக்கவே முடியாதானும் நாற்பது மைல் வேகத்தில் ஓடச் சக்தி பெற்றது. இதன் பிறப்பிடம் ஆப்பிரிக்கா. இதன் மூடத்தனம் உள்பட அநேக காரணங்களால், இந்தப் பறவை பூண்டே அடியோடு அழிந்துவிடும்போலிருந்ததால் ஆப்பிரிக்க சர்க்காரே முயற்சி எடுத்து இதை காப்பாற்றியுள்ளார்கள்.

நரி, சில குரங்குகள் முதலிய மிருகங்கள் தீப்பறவைக்கு மிகப் பெரிய சத்துருக்கள். தினந்தோறும் தீப் பறவை இரு தடவை நீரில் முழுகப் போகும். அச்சமயம் பார்த்து நரி, குரங்குகள் முதலியன தீப்பறவையின் முட்டைகளை உடைத்துத் தின்றுவிடும். தீப்பறவையைக் கொன்று தின்னும் வேடர்கள் அதன் முட்டையிருக்கு மிடத்தருகே மணலில் தந்திரமாக ஒளிந்துகொண்டு நீரில் முழுகிவிட்டு திரும்பி வரும் பறவைகளை அம்பெய்திக் கொல்வார்கள். கால்களில் வெள்ளைச் சாயம் பூசிக்கொண்டு உடலின் மேல் பாகத்தை ஒரு செத்துப்போன பறவையின் இறக்கைகளால் போர்த்திக்கொண்டு தீப்பறவை கூட்டங்களுக்கிடையே புகுந்துகூட வேடர்கள் இவற்றைக் கொல்வதுண்டு.

இப்பொழுது தீப்பறவைகளை இவற்றின் இறக்கைகளின் வியாபாரிகள்தான் ஏராளமாய் வளர்க்கிறார்கள். இவற்றை வேறெங்கும் காண முடியாது. தென் ஆப்பிரிக்காவில் கேப் மாகாணத்தில் பாதி பாலைவனப் பிரதேசமான இடத்தில்தான் இவை இப்போது வசித்து வருகின்றன.

மனிதனை இரண்டாகக் கிழிக்கும் சக்தி வாய்ந்த இத் தீப்பறவையின் உயரம், கால் நகத்திலிருந்து தலை வரையிலும் எட்டு அடி. ஒரு ஆண் பறவையின் எடை முன்னூறு பவுண்டு.

பட்டுப்போன்ற மென்மையான கறுத்த இறக்கைகள் கொண்டது இப்பறவை. இதனுடைய நீண்ட கழுத்தைச் சுற்றி நிறைய சாம்பல் வர்ண ரோமமிருக்கும். முட்டையிடும் காலத்தில் இதன் மூக்கு சிவந்து விடுகிறது. அப்போது

இதன் அருகே எவரும் செல்ல முடியாது.

தீப்பறவை எளிதில் மிரண்டு விடும். மிரண்டால் அது ஓடும் ஓட்டத்தின் வேகத்தைப் பார்த்தவர்கள் தான் நம்புவார்கள். இடதுபக்கமும் வலதுபக்கமும் வளைந்து வளைந்து ஓடுவதைப் பார்த்தால் இதன் கழுத்து எந்தக்கணம் முறிந்து விடுமோ என்றே தோன்றும்.

இறக்கை வியாபாரத்திற்காக இப்பறவையை வளர்க்கு மிடங்களில் போட்டிருக்கும் கம்பி வேலிகளில் மோதும்போதுதான் தீப்பறவை தன் ஓட்டத்தை நிறுத்தும். இல்லாவிடில் அதுவாக சோர்வடைந்து கீழே விழும்போதுதான் ஓட்டம் நிற்கும்.

இந்த மூளையேயில்லாத பறவை எப்போதும் தப்பி ஓடுவதிலேயே கண்ணுயிருக்கும். அதன் கழுத்தைப் பலமாகப் பிடித்துவிட்டால் அது மிரண்டு பாயும் பாய்ச்சலில் தலையைக் கூட விட்டுவிட்டு ஓடிவிடும். கழுத்து எதில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது? அதினின்று எவ்வாறு தப்பித்துக்கொள்ளலாமென்றெல்லாம் நிதானமாய் யோசிக்கவே யோசிக்காது.

கண்மூடித் தனமாக ஓட்டம் பிடிப்பதேதான் இந்தப் பறவையின் முக்கிய லக்ஷணம். ஓடும் வழியில் பெரிய பள்ளங்களிருந்தால் இதன் உயிருக்கு ஆபத்து நேரிடுவது நிச்சயம்.

புல், இலைகள், பழங்கள், விதைகள், தானியங்கள் முதலியவை இதன் முக்கிய ஆகாரங்கள்.

ஜீரணசக்தி பெறுவதற்கு காகிதம், கண்ணாடித்துண்டுகள், சாவிகள், கைக்கடிகாரங்கள், 'புருச்சுகள்', பித்தான்கள், கூழாங் கற்கள், நாணயங்கள், ஸ்பூன்கள், முள் ஸ்பூன்கள், பழைய தகர டப்பிகள் மற்றும் தொண்டைக்குள் செல்லும் இதர பொருள்கள் யாவையும் வயிற்றுக்குள் தள்ளுகிறது!

ரோமாபுரியிலுள்ள மிருகக் கண்காட்சி சாலையில் ஒரு மாண்டு போன தீப்பறவையின் வயிற்றைக் கீறி நோக்கியபோது கீழ்க்கண்ட பொருள்கள் தென்பட்டன :—

எண்ணற்ற கற்கள், ஏழு ஆணிகள், ஒரு 'டை' கட்டும் ஊசி, ஒரு காகிதக் கவர், 13 செப்புக் காசுகள், 14 முத்துக்கள், 2 சாவிகள், 1 கைக்குட்டை, 1 வெள்ளி மெடல், 1 சிலுவை!!

மூளையில்லாத இப்பறவைக்கு காதலுமுண்டு. இரண்டு பெண் பறவைகள் ஒரே ஆண் பறவையின் காதலை நாடும். ஒரு பெண் பறவையை ஆண் பறவை ஒப்புக் கொண்டுவிட்டால் மற்ற பெண் பறவையை இந்த காதல் ஜோடி கொன்றுவிடும். நாற்பது தினங்கள் நீடித்த காதல் லீலைகள் புரிந்த பின்பு மணலில் அதிக ஆழமில்லாத குழியைத் தோண்டிப் பெண் பறவை முட்டையிடத் தொடங்கும். காதல் லீலைகள் புரியும் நாற்பது தினங்களில், இவை அருகே செல்வதுகூட மிகவும் ஆபத்தானது.

ஒன்றுவிட்ட தினங்களில் பெண் பறவை மூன்று பவுண்டு கனமுள்ள ஒரு முட்டையிடுகிறது. தீப்பறவையின் ஒரே முட்டை சாதாரண கோழியின் 24 முட்டைகளுக்குப் ஒப்பிடலாம். பத்து பேர் சாப்பிடக் கூடிய ஆகாரம் இதன் ஒரு முட்டையில் கிடைக்கும். இதன் முட்டையால் தயாரிக்கப்படும் 'ஆம்லெட்' முதலிய ஆகாரங்கள் மிகச் சுவையானதாம். பகல் முழுவதும் பெண் பறவை அடை காக்கும். இரவில் ஆண் பறவை அடை காக்கும். அடை காக்கும் காலத்தின்

முடிவில் இரு பறவைகளும் முட்டைகளை உடைத்து குஞ்சுகளை வெளியேற்றும்.

சிறிய குஞ்சுப் பறவைகளை இறக்கை வியாபாரிகள் பிரத்தியோகமாகயுள்ள கூடுகளில் வைத்து பாதுகாக்கிறார்கள்.

குஞ்சுகள் வெளிவந்த ஒரு மாதத்திற்குப் பிறகு பெண் பறவை திரும்பவும் முட்டையிடும். தீப்பறவை குஞ்சு ஒரு பெரிய வீட்டுக்கோழி அளவிற்கு இருக்கும். மூன்று மாதத்தில் மூன்று அடி உயரம் வளரும்.

தீப்பறவைகளின் இறக்கைகள் இயற்கையிலேயே மிகவும் விசேஷமானது. இறக்கைகளின் இரு பாகங்களும் ஒன்று போலிருக்கும். இயற்கையில் மற்றெல்லா இறக்கைகளிலும் பெரும்பாலும் ஒரு பக்கத்தில்தான் இறகுகளிருக்கும். ஒன்பது மாதங்களுக்கொரு தடவை தீப்பறவையின் இறக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு பறவையும் சுமார் இருநூறு ரூபாய் விலை மதிப்புள்ள நான்கு பவுண்டு இறக்கைகள் கொடுக்கிறது.

தீப்பறவை ஆத்திரமடைந்துவிட்டால், அதன் கால் நகத்தால் இரும்புத்தகட்டைக் கூடத் துளைத்துவிடும்.

நொண்டிச் சாக்குகள் கூறிக்கொண்டு கடுமையான பிரச்னைகளைச் சமாளிக்காதவர்களை “மணலில் தலையைப் புதைத்துக்கொள்ளும் தீப்பறவைகள்” என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இந்தப் பறவைக்குச் சற்றேனும் மூளையில்லாவிடினும், வேறு எவ்வளவோ மடமையான காரியங்கள் இது செய்வது வழக்கமானாலும் மணலில் தலையைப் புதைத்துக் கொள்ளும் பழக்கம் இதனிடம் கிடையவே கிடையாது. மூளை இல்லாதவர்களைப் பற்றிக்கூட இவ்வாறு அபவாதம் கூறுவது நியாயமா?

—Shooting Times and Country Magazine.

ASOKA SCENTED BETELNUT POWDER

ராமாயணம் தரும் பாடங்கள்

ராமாயணத்திலுள்ள ஒவ்வொரு சம்பவத்திலிருந்தும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாயுள்ள தத்துவங்களையும் கருத்துக்களையும் பெறலாம். வால்மீகி சிருஷ்டித்துள்ள பாத்திரங்களனைவரும் நாம் பின்பற்றவோ, நிராகரிக்கவோ தகுந்தவர்கள். குண விசேஷங்களை மனிதனிடம் வளரச் செய்வதற்கு சம்ஸ்கிருத பாஷையிலேயே ராமாயணத்தைப்போல் சிறந்த இதிஹாஸம் கிடையாது.

பெரியோர்களை மதிப்பது மனிதன் வாழ்க்கையிலேயே முக்கிய கடமையாகுமென்பதை ராமாயணம் வற்புறுத்துகிறது. மாணவர்கள் மரியாதை வரம்புகளை மீறி வீட்டிலும், பள்ளியிலும் அனுஷ்டிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து கொண்டுமிருக்கும் இக்காலத்தில் இக்கருத்து எவ்வளவு இன்றியமையாததென்று கூறவேண்டுமா? பெற்றோருக்கும் தன் குல குரு மகரிஷி வசிஷ்டருக்கும், விசுவாமித்திர மகரிஷிக்கும், தண்டகா வன முனிவர்களுக்கும் ராமன் செலுத்திய மரியாதைக்களவில்லை.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ' மென்ற அமுத மொழியைச் சிரமேற் தாங்கி நடந்தான் ராமன். ராமன் தன் பிதாவின் வாக்கைக் காப்பாற்றிய முறை எவ்வளவு உன்னதமானது! எவ்வளவு அனுதாபப் படக்கூடியது! தந்தை சொல்லுக்கு அளவுக்கு மீறிய பணிவை ராமர் தன் செயலில் காட்டிவிட்டார் என்று சிலர் சொல்வதுண்டு. கைகேயியின் தூண்டுதலால் விளைந்த தசரதரின் ஆக்ஞையை மறுத்து வனத்திற்குச் செல்லாமல், தான் மகுடாபிஷேகம் செய்துகொள்வது நியாயமாய்த்தானிருந்திருக்குமென்பதும் சிலரது அபிப்பிராயம். தர்மத்தை அனுசரிக்கும் முறை மிகக் கடினமாகிவிட்டால் அதன் விளைவு துன்பந்தான் அல்லவா? ஜாபாலி மகரிஷி ராமன் இவ்வாறு துன்பத்தை ஏற்றுக்கொள்வது சற்றும் பலனில்லை என்று ராமனுக்கு எடுத்துக் கூறி நியாயமாக நடந்துகொள்ள வேண்டியது மனிதனின் கடமையென்பதை வற்புறுத்தினார். தசரதரின் ஆக்ஞையைப் பற்றிக் கேட்டவுடன் லக்ஷ்மணன் மிகவும் ஆத்திரமடைந்து தன் பிதாவையும் ராஜ்யத்தையும் தொலைத்து விடுவதாகக் கங்கணங் கட்டிக்கொண்டான். ஆனால் இம்மாதிரி அபிப்பிராயங்களெல்லாம் கூறும் தருணத்தில் ராமன் கடைப்பிடித்தது தன் தர்மத்தையும், கடமையையும்தான். தான் அளித்த வாக்கைக் காப்பாற்றவில்லை யென்ற அபகீர்த்தியைத் தன் பிதாவிற்கு அளிக்கமாட்டேன் என்று சபதஞ் செய்துகொண்டான். தனக்கு எவ்வளவு துன்பம் நிகழ்ந்தாலும், தான் எவ்வளவுதான் தியாகஞ் செய்ய நேரிடினும் கொடுத்த வாக்கை காப்பாற்றி தன் தந்தையின் கீர்த்தியைக் காக்க வேண்டுமென்று ராமன் உறுதி பூண்டான்.

இவ்வாறு உறுதி பூண்டதன் மூலம் ராமனுக்கு நேர்ந்த மனோவேதனையையும் துன்பங்களையும் அளவிட முடியாது. சீதையைப் பறிகொடுக்க நேர்ந்தது பிதாவின் வாக்கைக் காப்பாற்றுவதில் கொண்ட அக்கறையின் விளைவே. லக்ஷ்மணனும் சீதாவும் ராமனுக்கு நேர்ந்த துன்பங்களில் வேண்டுமென்றே பங்கு கொண்டார்கள். வனத்திற்கு அவர்கள் தொடர வேண்டாமென்று எவ்வளவோ ராமன் வற்புறுத்தியும் அவர்கள் கேட்கவில்லை.

ராம லக்ஷ்மண பரத சத்ருக்னரிடையே இருந்த சகோதர பாசம் மனித இனத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாகும். லக்ஷ்மணனுக்கு ராமன் ஆண்டவனைப்போல; சத்ருக்கனனுக்கு பரதனும் அவ்வாறே. இளம் பிராயத்திலிருந்தே இவர்கள் இவ்வாறுதான் வளர்ந்து வந்தனர். இவர்கள் சிறுவர்களா யிருக்கும்போது லக்ஷ்மணன் தன்னுடன் போஜனம் செய்ய உடன் இருந்தால்தான் ராமன் உணவருந்துவான். ஒரு கணம்கூட ராமனைப் பிரிந்து லக்ஷமணன் இரான். இவ்வாறேதான் பரதனையும் விட்டுப் பிரியாமல் சத்ருக்கனன் இருந்து வந்தான.

ராமனுடன் காட்டுக்குச் செல்வதற்கும் துன்பங்களை அனுபவிப்பதற்கும் லக்ஷ்மணன் தயாராக இருந்தான். பரதனோ தன் தாயின் சூழ்ச்சியால் தனக்குக் கிடைத்த ராஜ்யத்தை ராமன் பாதங்களிலேயே சமர்ப்பிக்கச் சித்தமா யிருந்தான்; ராமன் அயோத்திக்குத் திரும்பி வர மறுத்தபோது பரதன், தன் தமையனின் பாதுகைகளை அயோத்திக்குக் கொண்டுவந்து பாதுகா பட்டாபிஷேகஞ் செய்து ராமனுடைய பிரதிநிதியாகவே ஆட்சியை நடத்தினான்.

ராவண யுத்தத்தில் லக்ஷ்மணன் காயமடைந்து வீழ்ந்தபோது ராமன் "சீதாவைப்போல ஒரு பத்தினியைச் சற்றுப் பாடுபட்டாவது தேடிக் கொண்டு வரலாம்; ஆனால் லக்ஷ்மணனைப் போன்ற ஒரு சகோதரன் கிடைப்பது அரிது, லக்ஷ்மணன் மரித்தால் யுத்தத்தை தொடருவதில் பயனில்லை" என்று முறையிட்டார்.

கைகேயிக்கு விஷ போதனை செய்த தாதியைச் சத்ருக்கனன் ஒழித்துவிடப் புறப்பட்டதும் பரதன்தான் அவனைச் சமாதானஞ் செய்து தடுத்தான்.

வானர வீரர்களான வாலி, சுக்ரீவன்—இவர்களிடையேயும், ராக்ஷசர்களான ராவண—விபீஷணர்களிடையேயும் இருந்த மனோபாவம் மேற்கூறியதிலிருந்து எவ்வளவு மாறுபட்டது?

குணத்திற்கும் துர்க்குணத்திற்கும் ஒற்றுமை யில்லாததால் தான் வாலி, சுக்ரீவர்களிடையேயும், ராவண—விபீஷணர்களிடையேயும் சகோதர பாசம் அற்றிருந்தது. ஆனாலும் சுக்ரீவன் தன்னுடைய சகோதரனான வாலியை ராமனின் துணை கொண்டு கொல்லலாமா வென்பதும், விபீஷணன் தன் உடன் பிறப்பான ராவணனை உதறித் தள்ளலாமா வென்பதும் நியாயமான கேள்விகள் தானே!

விஷ்ணு அம்சத்தையும் தேவி அம்சத்தையும் ஐக்கியப் படுத்துவதற்கு ஏற்பட்ட காரணம்தான் ராமனால் வளைக்கப்பட்ட சிவ தனுஸு.

ராமனுக்கும் சீதைக்குமிருந்த தாம்பத்ய உறவு உலகத்திலேயே எல்லோருக்கும் ஒரு சிறந்த படிப்பினையாக விளங்குகிறது. க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த மன்னன் என்ற முறையில் தன் னிஷ்டப்படி மணந்துகொள்ள உரிமை யிருந்தாலும் ராமன் ஏக பத்தினி விரதம் பூண்டவன். அவனை ராஜ்யத்திலிருந்து விரட்டிய கைகேயிகூட இந்தக் குணத்தைப் புகழ்ந்து பேசுவதா?

ராவணன் தன்னை மணந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை தெரிவித்த போதெல்லாம் சீதை "தன் கடவுள் ராமனே, மற்றெவரையும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க மாட்டேன்" என்று தீரமாய்க் கூறியுள்ளாள். தன்னைப் பற்றி அவதூறுகள் நாட்டில் மலிந்ததால் சீதையைச் சற்றேனும் தயக்கமின்றி காட்டுக்கு அனுப்பித்த போதும் சீதை "தான் மற்றொரு ஜன்மமெடுத்தால் அதிலும் ராமனையே கணவனாக வரிப்பேன்" என்றும் திடமாகக் கூறினாள். இந்தப் பதி பக்திதான் நம் நாட்டு ஸ்திரீகளுக்கு இன்றும் ஊக்கமளிக்கும் தெய்வீகச் சுடராக விளங்குகிறது.

எஜமான பக்திக்கு என்றும் சிறந்த உதாரணமாக விளங்குபவன் ஹனுமான். ராமனின் உள்ளத்தில் தோன்றும் விருப்பங்களையும் செய்து முடிக்க வல்ல தாஸன் ஹனுமான். ராமனுக்கு வெற்றி என்ற கொள்கைக்காக நீண்ட காலமாக உழைத்த உத்தமன் ஹனுமான்.

இவ்வளவு சிறந்த தொண்டு சன்மானத்திற்குரியதென்று ராமனும் கருதவில்லை. ஹனுமானின் தொண்டிற்குச் சன்மானம் கொடுப்பதென்ற நினைப்பே தவறு என்பது ராமனின் கருத்து. அதனால் ஹனுமனுக்குத் தான் கடமைப் பட்டிருப்பதையே ஒரு பெருமையாகக் கருதினான் ராமன். ஹனுமானோ தன் உழைப்புக்கெல்லாம் அவர் விரும்பிய ஒரே சன்மானம் ராமன் கதையைக் கூறுமிடத்திலெல்லாம் தானுமிருக்க வேண்டுமெனபதே.

ராமாயணத்தில் ராமனும் அவன் சகோதரர்களும் சந்தியாவந்தனம் செய்ததைப் பற்றி அடிக்கடி கூறப்பட்டிருக்கிறது. இன்றைய பரபரப்பான வாழ்க்கையில் சந்தியாவந்தனமும் அதைப் போன்ற பிற அனுஷ்டானங்களும் இடம் பெருவதற்கு நாம் பல காரணங்கள் கூறலாம்.

பிரபஞ்சத்திற்கே ஆதாரமான சக்திகளனைத்தும் உச்சத்திலிருக்கும் சந்தியா காலத்தில் செய்யும் பிரார்த்தனைக்கும் தியானத்திற்கும் மிகச் சிறந்த பலனுண்டென்பதுதான் ராமாயணத்தில் சந்தியாவந்தனத்தைப் பற்றிக் கூறியுள்ளதிலிருந்து கொள்ள வேண்டிய படிப்பினை.

எல்லோரிடத்தும், எப்போதும் ராமன் காண்பித்த கருணை, பிரஜா விசுவாசம், சகிப்புத் தன்மை, தாராளம், நண்பர்களான குகன், ஜடாயு இவர்களிடத்தில் காண்பித்த நட்பின் சிறப்பு முகலிய கணக்கற்ற குண விசேஷங்கள் ஆபரணத்தில் பதித்த மணிகள்போல் ராமாயணத்தில் விளங்குகின்றன. இந்த குண விசேஷங்களைப் பரிபூரணமாக அனுஷ்டிப்பதே இன்றைய மனிதர்களின் உத்தம கடமையாகும்.

(From article by N. Chandrasekhara Iyer in *BHAVAN'S JOURNAL*)

குள்ளர்களை நம்பலாம்

"கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே'' என்பது பழமொழி.

உண்மைக்கு முரணாகக்கூட சில பழமொழிகள் தோன்றிவிடுமென்பதற்கு இந்தப் பழமொழி தக்க உதாரணமாகும்.

ஏனென்றால் ஒரு கள்ளன், (அதாவது ஒரு திருடன்) நம்பிக்கைக்குத் தகுந்தவனாயிருப்பானாகில் ஒரு குள்ளன் ஏன் நம்பிக்கைக்கு பாத்திரமாகக் கூடாது?

குள்ளர் அபாக்கியவான். அவனை ஆண்டவன் கண்ணை மூடிக் கொண்டு அவலக்ஷணமாய் சிருஷ்டித்து விட்டார்! அதனால் நாம் அவர் மீது அனுதாபம்தானே கொள்ள வேண்டும்?

பெரும்பாலான சாதாரண மனிதருக்கெல்லாம் குள்ளர் போன்ற விசித்திர சிருஷ்டிகளைப் பற்றிப் பீதிதான். இதற்குக் காரணம் குள்ளரின் மனப்பான்மை; அவர் பிறந்து, வளர்ந்து வாழ்க்கை நடத்தும் சூழ்நிலைகள் முதலியவற்றைப் பற்றி பெரும்பாலோருக்கும் ஒன்றும் தெரியாது. இவற்றைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால் நம் மனப்பான்மை மாறி சாதாரண மனிதரென்று தான் கருதுவோம். எட்டு சித்திரக் குள்ளர்களின் புகைப்படத்தை இங்கு நீங்கள் காணலாம்.

இவர்கள் உயரத்தை மட்டும் வைத்துக்கொண்டு இவர்களை மதிப்பிடுவதில் அர்த்தமேயில்லை! அவர்கள் சாதாரண உயரம் கொண்ட நம்மைப் பற்றி ஏளனமாகக் கருதுகிறார்களென்பதை நாம் அறிவோமா? உயரம் குறைந்ததனால் குள்ளர்களுக்கு மூளையும் குறைவென்று கருதவேண்டாம். சாதாரண மனிதர்கள் செய்யும் வேலைகள் யாவும் இவர்களும் செய்வார்கள்.

முதலாவது புகைப்படத்தில் தோன்றும் பைஜீ என்பவர் 1 அடி 11 அங்குலம் உயரம் கொண்டவர். ஒரு மாகாண முதலமைச்சரை விட இவருக்கு வருமானமிருக்கலாம். ஒரே படத்தில் நடிப்பதற்கு இவருக்கு ரூ. 6,000 கிடைத்தது.

இரண்டாவது படத்திலுள்ளவர் பெயர் சாந்தாராம்; உயரம் 3 அடிகளுக்குக் குறைவுதான். இவருக்குப் புகைப்படம் பிடிப்பதன் மூலம் ஏராளமான வருவாய் கிடைக்கிறதாம். இவரிடம் நான் சென்றவுடன் தன் கையிலிருந்த விலை உயர்ந்த காமிராவில் (Rolli Flex) என்னைப் படம் பிடித்துவிட்டார்.

மூன்றாவது படத்தில் தோன்றுபவர் ஒரு பிச்சைக்காரர். பெயர் நாதா. கந்தைகளைத் தவிர வேறு உடை கிடையாது இவருக்கு. இதைக் கண்டு பரிதாபங் கொண்ட நான் ஒரு ரூபாயை இனாமாக

1

2

3

4

அவருக்குக் கொடுக்க முயன்றேன். அதை அவர் என்முகத்தில் விட்டெறிந்துவிட்டார்! இதைத் தவிர என்னை மாடு முட்டுவது போல் தன் தலையால் மோதவும் வந்துவிட்டார். அங்கிருந்து ஒரே ஓட்டமாய் ஓடித் தப்பித்துக்கொண்டேன் என்று கூறவும் வேண்டுமா!

நாலாம் படத்தில் தோன்றுபவர் அங்காடி ஊதுவத்தி வியாபாரி தவே யாவார். மனைவியில்லை; குடும்பமுமில்லை; தொந்தரவுமில்லை. 'ராமா, கிருஷ்ணா,' என்று வாழ்க்கையை நடத்துபவர். நான் கவனிக்கிறேன் என்று தெரிந்ததும் என்னிடம் ஓடோடியும் வந்து "ஊதுவத்தி வேண்டுமா, பாக்கெட் டன்னிரண்டணாத்தான்" என்று கூறினார். "ஊதுவத்தி எனக்குத் தேவையில்லை; ஆனால் உன்னிடம் ஒன்று கேட்கவேண்டும்" என்று பதிலளித்தேன் நான். "அதென்ன?" என்றார் தவே. "நீ விவாகஞ் செய்து கொள்ள போகிறாயா?" என்றேன் நான். தவேயின் கண்களில் தென்பட்ட கோபக்குறி என்னைத் திகிலடையச் செய்தது. மிகக் கோபத்துடனும், அருவருப்புடனும், "கலியாணமா?" என்று சீறினார் தவே. அவர் பிறவியில் குள்ளனாயிருப்பதைப் பற்றி நான் அவரை ஏளனஞ் செய்வதாக நினைத்து

8



7



6

5

விட்டார் போலும்! "உன் பெயரென்ன?" என்று என்னைக் கேட்டார். "என் பெயர் நாயர்" என்று கூறினேன். "ஸ்ரீமான் நாயர் அவர்களே, என் புகைப் படத்தை பிடித்து என்னை நீர் அவமானப் படுத்தியது போல் ஒரு ஸ்திரீயை நான் அவமானப்படுத்துவேன் என்று நினைக்கிறீர்களா?" என்று எனக்கு சூடு கொடுத்தார்.

ஐந்தாவது படத்தைப் பாருங்கள்! குள்ளனைகப் பிறந்ததால் ஒரு அதிருஷ்டக் கட்டை போல் தோன்றுகிருரா இவர்? ஒரே குதூகலத்தில் அல்லவா முழுகியுள்ளார் இவர்! முகத்தில் குரங்கின் ஜாடையும் தென் படலாம்! ஆனல் இதற்கு இவர் என்ன செய்வார்! வீட்டு வேலை செய்து பிழைப்பு நடத்துகிருர் இவர். 33 வயதுள்ள இவருக்கு நாலைந்து வயதுள்ள குழந்தைகளிடம் விளையாடிக் கொண்டிருப்பதே ஒரு பொழுது போக்கு. இவரை உற்றுப் பார்ப்பது மிகவும் ஆபத்து. திரும்பி இவர் நம்மை உற்றுப் பார்த்தால்.........பாக்கெட்டில் 'சார்மினர்' சிகரெட்டுகள், நெருப்புப் பெட்டி, வாயிலே சிகரெட்டு; இத்தியாதி ஆடம்பரத்துடன் தோற்றமளிக்கிருர் இவர்.

ஆருவது படத்தில் நீங்கள் காண்பது டிண்டு. இவர் குடிகாரப் பிரதேசத்தில் ஒரு பிரபல 'ரௌடி'. இவரை "நீ வயிற்றுப் பிழைப்புக்கு என்ன செய்கிருய்?" என்று கேட்டேன். "வாருங்கள் என்னுடன், காண்பிக்கிறேன்" என்ருர் முறுக்காக. அவருடன் செல்வதற்கு எனக்குப் பயமாக இருந்ததால் மெள்ள நழுவினேன்.

ஏழாவது படத்திலுள்ள பாபுராவ் தெய்வ பக்தி நிறைந்தவர்; ஆசாரக் காரருங்கூட. பம்பாய் தேவாலயங்களில் இவரை அடிக்கடி காணலாம். பிறருடன் சற்று நிதானமாய் பேசுவர் போல இவர் காணப்பட்டதால் நான் அவரை அனுகி குசலப்பிரச்னங்கள் செய்தேன். "மனிதர்களைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். இதற்கு பாபுராவ் "மனிதர்களா...தூ...தூ...எங்களுக்கு உடல் சிறிதானதால் கர்வம் சிறிது; உங்களுக்கு உடல் பெரிதானதால் கர்வமும் பெரிது" என்று கேலியாகக் கூறினர்.

எட்டாவது படத்திலுள்ள மற்றொரு குள்ளர் பம்பாயில் சார்னி ரோடு என்ற விடத்தில் நடைபாதையில் வசித்துக்கொண்டு வாய் திறவாமலே பிச்சை பெற்று காலக்ஷேபம் செய்து வருகிருர். ஹைதராபாத், நிஜாம் உபயோகிக்கும் 'சார்மினர்' சிகரெட்டை இவர் உபயோகிப்பதில் மிகவும் பெருமிதமடைகிருர்.

குள்ளரைக் கள்ளர் என்றெல்லாம் சொல்வது தவறு. மற்ற மனிதர்களுக்கு குள்ளரைப் பற்றி அபிப்பிராயங்களிருப்பது போல் குள்ளருக்கும் மற்றவர்களைப் பற்றி அபிப்பிராயங்களிருக்கின்றன. பொழுது விடிகிறதே என்று பீதியடைகிருர் குள்ளர். ஏனெனின் பகல் நேரத்தில்தான் புத்தி ஈனரான சாதாரண மனிதர்கள் இவரை உற்று நோக்குகிருர்கள்; ஏளனஞ் செய்கிருர்கள். தொந்தரவு கொடுக்கிருர்கள். அஸ்தமனம் ஆனலும் குள்ளனுக்கு நிம்மதி கிடையாது. ஏனென்ருல் இவருக்கு அப்போதுதான் சிருஷ்டியில் தனக்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலையைப் பற்றி கிலி ஏற்படுகிறது.

இயற்கையால் வெறுக்கப்பட்டும் மனிதர்களால் ஒதுக்கப் பட்டுமுள்ள குள்ளர்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு நடத்துகிருர்களென்பது கவனிக்க வேண்டிய விஷயமல்லவா?

—Based on article By K. P. NAIR in *ONLOOKER*.

சேவையின் மூன்று அங்கங்கள்

★

இவ்வுலகத்தில் நமக்கு அளவிலடங்காத பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளை மூன்று பர்கங்களாய்ப் பிரிக்கலாம். ஒரு பக்தன் காலையில் எழும்போது மூன்றே பொருள்கள் தான் அவன் கண்முன் வருகின்றன. முதலில் அவன் மனம் பகவானிடம் போகிறது; அப்பொழுது அவன் அவருடைய வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்கிறான். 'நான் ஊழியனான பக்தன், அவர் என் ஊழியத்தைப் பெறும் எஜமானர்.' இவை இரண்டும் அவனிடம் எப்பொழுதும் சித்தமாயிருக்கின்றன. இப்போது எஞ்சியுள்ள சிருஷ்டியிருக்கிறதே, அதுவே அவருடைய பூஜைக்கு வேண்டிய சாதனம். புஷ்பம், சந்தனம், தூபம், தீபம் ஆகியவற்றிற்காக இந்த சிருஷ்டி அனைத்தும் ஏற்பட்டுள்ளது. மூன்றே வஸ்துக்கள் தர்ன் இருப்பவை: சேவகனான பக்தன், சேவிக்கப் பெறும் பரம்பொருள், சேவைக்கு வேண்டிய சாதனங்களென்ற இந்த சிருஷ்டி. இப் போதனையே இவ்வத்தியாயத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு சேகவன் ஏதேனும் ஒரு மூர்த்தியைப் பூஜிக்கிறானெனில் அவனுக்குச் சிருஷ்டியின் எல்லாப் பொருள்களும் பூஜைப் பொருள்களாகத் தோன்றுவதில்லை. அவன் தோட்டத்திலிருந்து நான்கு புஷ்பங்களைப் பறித்துக் கொணர்ந்து எங்கிருந்தேனும் ஊதுவத்தி வாங்கி வந்து ஏதேனும் நைவேத்தியம் தயாரித்துப் படைக்கிறான். அவன் பார்த்துப் பொறுக்கிப் பொருள்களை வாங்க விரும்புகிறான். ஆனால் பதினைந்தாம் அத்தியாயத்தின் பரந்த போதனையின்படி இந்தத் தேர்வு அவசியமில்லை. தவத்திற்கும் கர்மத்திற்கும் எவை சாதனங்களோ அவையெல்லாம் ஆண்டவனுடைய சேவைக்கும் சாதனங்களே. அவைகளில் சிலவற்றை நாம் புஷ்பமென்றும் சிலவற்றைச் சந்தனமென்றும் சிலவற்றை நைவேத்தியமென்று சொல்லுவோம். இவ்வாறு எவ்வளவு கர்மங்களுண்டோ அவை அத்தனையையும் பூஜைப் பொருள்களாக்கிவிட வேண்டும். இந்த நோக்கு இத்தகையது. அதாவது உலகத்தில் இந்த மூன்று பொருள்களேயுள்ளன. கீதை எந்த வைராக்கிய மயமான சாதனை மார்க்கத்தை நம் மனதில் பதிக்க விரும்புகிறதோ அதற்கே அது

பக்திமயமான உருவத்தை அளித்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து உழைப்பை அகற்றிச் சுளுவாக்கிக் கொடுக்கிறது.

ஆசிரமத்தில் ஒருவர் அதிக வேலை செய்ய வேண்டிய வரும்பொழுது, 'நான் மட்டும் எதற்காக அதிக வேலை செய்யவேண்டும்?' என்ற எண்ணமே அவர் மனத்தில் உதிப்பதில்லை. இதில் மிகுந்த சாரம் அடங்கியிருக்கிறது. வழிபடுகிறவனுக்கு இரண்டு மணி நேரத்திற்கு பதிலாக நான்கு மணி நேரம் கிடைத்தால் அவன், "அட ராமா, இன்று நான்கு மணி நேரம் வழிபடவேண்டி வந்ததே!" என்று அலுத்துக் கொண்டு சொல்லுவானா? அதனால் அவனுக்கு அதிக இன்பமே தோன்றும். ஆசிரமத்தில் இத்தகைய அனுபவம் ஏற்படுகிறது. இதே அனுபவம் நமக்கு வாழ்க்கையில் எங்கும் ஏற்பட வேண்டும். வாழ்க்கை சேவைமயமாய்விடவேண்டும். அவன் சேவை பெறும் புருஷோத்தமன். அவனுடைய சேவைக்கு எப்பொழுதும் சித்தமா யிருக்கும் நான் அக்ஷரபுருஷன். அக்ஷரபுருஷன் என்பதற்கு என்றும் களைப்புறுது சிருஷ்டியின் ஆரம்ப முதல் சேவை புரிந்து வரும் சநாதனனான (அழிவில்லாதவன்) சேவகன் என்பது பொருள்; அனுமார் இராமர் எதிரில் எப்பொழுதும் கைகூப்பி நிற்பதைப்போல; அவருக்கு சோர்பல் என்பதே சிறிதும் கிடையாது. அனுமாரைப் போலவே சிரஞ்சீவியான இந்தச் சேவகன் சேவையிலேயே கண்ணுங் கருத்துமாய் நிற்கிறான்.

இவ்வாறு ஆயுள் முழுவதும் சேவை புரிந்து வருகிறவனுக்கே அக்ஷர புருஷன் என்று பெயர். பரம்பொருள் என்ற இந்த ஸ்தாபனம் இருந்து வருகிறது; அதனுடைய சேவகனா நானும் எப்பொழுதும் இருந்து வருகிறேன். எஜமானன் இருக்கிறானென்றால் நானும் இருந்து வருகிறேன். சேவை பெற்றுப் பெற்று அவன் சளைக்கிறானா, சேவை செய்து செய்து நான்தான் களைக்கிறேனா பார்ப்போம். அவன் பத்து அவதாரங்கள் எடுத்தான எனின் எனக்கும் தான் பத்து அவதாரங்கள் ஆயிருக்கின்றன. அவன் இராமனானால் நான் அனுமான்; அவன் கிருஷ்ணனானால் நான் உத்தவன். அவனுக்கு எத்தனை அவதாரங்களோ அத்தனை எனக்கும். இனிய போட்டா போட்டியே ஏற்பட்டிருக்கிறது! ஆண்டவனுக்கு இவ்வாறு யுக யுகாந்தரங்களிலெல்லாம் சேவை செய்து கொண்டு என்றும் அழிவுறுதுள்ள இந்த ஜீவனே அக்ஷர புருஷன் என்பது. அவன் புருஷோத்தமனான ஆண்டான்; நான் அவன் அடிமை, சேவகன். இந்த பாவனையை ஒரே வகையில் உள்ளத்தில் வைத்திருக்க வேண்டும். இந்த ஒவ்வொரு கணமும் மாறும், அளவிலடங்காத உருவங்களைத் தாங்கி விளங்கும் சிருஷ்டியை பூஜைச் சாமானாக, சேவைக் கருவியாகச் செய்து கொள்ள வேண்டும். செய்யும் ஒவ்வொரு காரியமும் புருஷோத்தமனுக்குச் செய்யும் வழிபாடு போன்றதே.

சேவை பெறும் பரம்பொருள் புருஷோத்தமன்; சேவகனுன ஜீவன் (அழிவில்லாத) அக்ஷர புருஷன்; ஆனல் சாதனமாயுள்ள இந்த சிருஷ்டி க்ஷரம் (அழிவது). இந்த 'க்ஷரம்' இருப்பதில் மிக்க பொருள் அடங்கி யிருக்கிறது. இது சிருஷ்டியிலுள்ள குறைபாடல்ல, ஒரு சிறப்பே. இதனல் சிருஷ்டியில் ஒவ்வொரு நாளும் எப்பொழுதும் புதுமை தோன்றிக் கொண்டேயிருக்கிறது. நேற்றைய பூக்கள், இன்று உதவா. அவை அகற்ற வேண்டியவை (நிர்மால்யம்) ஆய்விட்டன. சிருஷ்டி அழியக் கூடியதாயிருப்பதைப் பாக்கியமென்றே கருதவேண்டும். இது சேவையிலுள்ள சிறப்பாகும். ஒவ்வொரு நாளும் புதிய புஷ்பம் சேவைக்குச் சித்தமாய்க் கிடைக்கிறது. அவ்வாறே நான் இந்த உடலையும் புத்தம் புதிதாய் ஏற்று ஆண்டவனுக்குப் பணி புரிவேன். நான் என் சாதனங்களுக்கு அன்ருடம் புதிய உருவளித்து அவைகளைக்கொண்டே அவனை வழிபடுவேன். இந்த அழியும் தன்மையிலேயே இவ்வழகு ஏற்பட்டிருக்கிறது. சந்திரனுடைய கலை இன்றுள்ளது நேற்றிருக்கவில்லை. சந்திரனிடம் ஒவ்வொரு நாளும் புதிய வனப்பைக் காண்கிறது. திருதியை அல்லது மூன்ரும் பிறையில் அந்த வளரும் சந்திரனைக் காண எவ்வளவு இன்பமாயிருக்கிறது! சங்கரனுடைய நெற்றியில் அந்தப் பிறைச் சந்திரன் எப்படி மின்னுகிறது! அஷ்டமி சந்திரனுடைய அழகு வேறு வகையானதே. அன்று வானத்தில் பொறுக்கியெடுத்த சில முத்துக்களே காண்கின்றன. பூர்ணிமையன்று சந்திரனுடைய ஒளி காரணமாக நக்ஷத்திரங்களே தென்படுவதில்லை. பூர்ணிமை அனறு கடவுளுடைய முகசந்திரன் காணப்படுகிறது. அமாவாசையின் இன்பம் மிகவும் கம்பீரமானது. அன்றைய இரவில் எத்தகைய அமைதி, கலக்கமற்ற அமைதி பரவியிருக்கிறது! சந்திரனுடைய மாய ஒளி அகன்று விடுவதனல் சிறிதும் பெரிதுமான எண்ணிலடங்காத நட்சத்திரங்கள் மிகுந்த சுதந்திரத்துடன் இஷ்டம்போல் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. அமாவாசையன்று சுதந்திரம் தன் பூர்ண உருவில் விளையாடுகிறது. தன் ஒளியைப் பெருமையாய்க் காட்டிக் கொள்ளும் சந்திரன் இன்று அங்கே இல்லை; தனக்கு ஒளி யளிக்கும் சூரியனுடன் அது ஒன்றிப் போய்விட்டது. அது ஆண்டவனுடன் கலந்து விட்டது. அன்று ஜீவன் தன்னையே அர்ப்பணம் செய்வதனல் எவ்வாறு உலகத்திற்குச் சிறிதும் துன்பம் விளைவியாது என்பதை அது காட்டுவது போலிருக்கிறது. சந்திரனுடைய சொரூபம் க்ஷரம், மாறக்கூடியது. ஆனல் அது வெவ்வேறு உருவங்களில் இன்பமளிக்கிறது.

சிருஷ்டியின் அழியும் தன்மை, நிலையாமை எதுவோ அதுவே தான் அதன் அழியாத் தன்மையும். சிருஷ்டியின் உருவம் கலகலவென்று (அருவியைப் போல்) ஓடிக் கொண்டேயிருக்கிறது. அந்த உருவமென்ற கங்கை ஓடிக் கொண்டேயிராவிடில் அது ஒரு தேக்கமாய்விடும். ஆற்றின் வெள்ளம் இடையருது ஓடிக் கொண்டேயிருக்கும். அது தொடர்ந்து மாறிக் கொண்டே

யிருக்கும். ஒரு துளி போவதும் மற்றொன்று வருவதுமாயிருக்கும். ஆகையால் அந்த நீர் உயிருடன் விளங்குகிறது. பொருளில் காணும் இன்பத்திற்குக் காரணம் அதன் புதுமையே. கோடையில் பரம்பொருளுக்கு வேறு வகைப் புஷ்பங்கள் சாத்தப்படுகின்றன; மாரிக்காலத்திலோ பசிய அருகம்புல் அணிவிக்கப்படுகிறது; சரத் காலத்தில் அழகிய தாமரை மலர்கள். அந்தந்தக் காலத்தில், ருதுவில் தோன்றும் பழங்கள், புஷ்பங்களினால் பசவானுக்கு பூஜை செய்யப்படுகிறது. இதனாலேயே அந்த பூஜை ஒளி பொருந்தியதாய் ஒவ்வொரு நாளும் புதிதாய்த் தோன்றுகிறது. அதனால் மனத்திற்கு அலுப்புத் தோன்றுவதில்லை. சிறிய குழந்தைக்கு 'க' என்ற எழுத்தை எழுதிக் கொடுத்து, "இதன் மீதே எழுதிக்கொண்டிரு. இதை இன்னும் பருமனாக்கு" என்று சொன்னோமானால் இதைச் செய்து செய்து அவனுக்கு அலுத்துப் போகிறது. இதை எதற்காகப் பருமனாக்குவதென்றே அவனுக்குப் புரிவதில்லை. அவன் பென்சிலை தடிமனாகச் செய்து கொண்டு எழுத்தை விரைவில் எழுதிவிடுகிறான். ஆனால் பிறகு புதிய எழுத்துகளை, அவைகளின் தொகுதியைப் பார்க்கிறான்; வித விதமான புத்தகங்களைப் படிக்கத் தொடங்குகிறான்; பலவிதமான இலக்கிய மலர்களின் அனுபவம் அவனுக்கு ஏற்படுகிறது. அப்பொழுது அவனுக்கு எல்லையற்ற இன்பம் தோன்றுகிறது. இதுவேதான் சேவையிலும். சாதனங்கள் ஒவ்வொரு நாளும் புதிதாய் இருப்பதனால் சேவையில் உற்சாகம் பெருகிறது.

சிருஷ்டியின் இந்த அழியும் தன்மை ஒவ்வொரு நாளும் புதிய புஷ்பங்களை மலரச் செய்கிறது. கிராமத்தினருகில் மயானமிருக்கிறது; இதனால் கிராமம் அழகாய்த் தோன்றுகிறது. பழையவர்கள் போய்க்கொண்டிருக்க புதிய குழந்தைகள் பிறந்துகொண்டிருக்க சிருஷ்டி நவநூதனமாய் தினமும் போய்க்கொண்டேயிருக்கிறது. புறத்தேயுள்ள அந்த மயானத்தை அகற்றிவிடுவாயானால் அது வீட்டினுள் வந்து அமர்ந்துவிடும். அதே மனிதர்களை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பார்த்துப் பார்த்து உனக்கு அலுப்புத் தட்டிவிடும். கோடையில் வெயில் காய்கிறது; பூமி கொதித்துப் போகிறது. ஆனால் நீ இதைக் கண்டு அஞ்சாதே. இந்த நிலை மாறிவிடும். மழையின் இன்பத்தை அனுபவிப்பதற்கு இந்த எரிச்சல் தேவையாகும். பூமி நன்கு காய்ந்து கொதித்துக் கொண்டிராவிட்டால் மழை பொழிந்ததும் சேறாய்விடும். பிறகு அதில் புல்லும் தானியமும் முளைக்க மாட்டா. நான் ஒரு சமயம் வெயிலில் சுற்றிக் கொண்டிருந்தேன். தலை கொதித்துக் கொண்டிருந்தது; மிக்க இன்பமாயிருந்தது. என்னிடம் ஒரு நண்பர் "தலை கொதித்துப் போகும். பிறகு சிரமமேற்படும்" என்றார். நான், "கீழே மண்ணும் கொதித்துக் கொண்டு தானே இருக்கிறது; மண்ணாலான இந்த உடலும் சிறிது கொதிக்கட்டுமே!" என்றேன். ஆஹா! தலைகொதித்துக்

கொண்டிருக்கும் பொழுது அதில் நீர் வந்து பொழியுமானல் எவ்வளவு இன்பமாயிருக்கும்! ஆனல் கோடை வெயிலில் காயாதவன் மழை பெய்யும் பொழுதும் தன் புத்தகங்களில் தலையை நுழைத்துக் கொண்டுதான் அமர்ந்திருப்பான்; தன் அறையில், அந்தச் சவக்குழியில் புகுந்து கொண்டிருப்பான். வெளியிலுள்ள இந்த விசாலமான அபிஷேக பாத்திரத்தின் கீழே ஆனந்தமாய் நின்றுகொண்டு ஆடமாட்டான். ஆனல் நமது அந்த மனு மகரிஷி பெரிய ரசிகர், சிருஷ்டியில் பற்றுள்ளவர். அவர் தம் ஸ்மிருதியில், "மழை பொழிகையில் விடுமுறை யளித்துவிடு" என்று எழுதுகிருர். மழை பெய்து கொண்டிருக்கையில் ஆசிரமத்துள் அமர்ந்து 'ஸந்தை' *சொல்லிக் கொண்டிருப்பதா? மழையில் ஆடவும் பாடவுமல்லவோ வெண்டும்? சிருஷ்டியுடன் சலந்துவிட வேண்டும். மழையில் மண்ணும் விண்ணும் கலக்கின்றன. இந்த அழகிய காட்சி எவ்வளவு இன்பம் பயப்பது! இந்த சிருஷ்டியே நமக்குப் போதனை யளிக்கிறது.

கருத்தென்னவென்ருல், சிருஷ்டியின் மாறும் தன்மை, அழியும் தன்மையின் பொருள் சாதனங்களின் புதுமையாகும். இவ்வாறு புதிது புதிதாய் சாதனப் பொருள்களை உண்டாக்கித் தரும் சிருஷ்டியும், வரிந்து கட்டிக்கொண்டு சேவைக்கென நிற்கும் என்றென்றுமுள்ள சேவகனும், சேவை பெறும் பரம்பொருளும். இனி வேடிக்கை நடக்கட்டும்! அந்தப் பரம புருஷனை புருஷோத்தமன் புதிது புதிதான சேவா சாதனங்களை அளித்து என்னிடம் அன்பில் உதிக்கும் சேவைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிருன்; பல்வேறு சாதனங்களை யளித்து அவன் என்னைப் போஷித்துக் கொண்டிருக்கிருன்; விதவிதமான பிரயோகங்களை அவன் என் மூலம் செய்விக்கிருன். நமக்கு வாழ்க்கையில் இத்தகைய நோக்கு ஏற்பட்டுவிடுமானல் எவ்வளவு இன்பம் ஏற்படும்!

மூலம் :— ஆச்சார்ய விநோபாஜியின் கீதைப் பேருரைகள்,
சர்வோதயப் பிரசுரம், தஞ்சாவூர்.

* வேதம் ஓதுகையில் ஆசிரியர் ஒரு முறை சொல்லுவதை சீடர்கள் இரு முறை திரும்பச் சொல்லுதல்.

தொடர் நாவல்

உயிர்க் கனல்

"ஸ்ரீரா"

அத்தியாயம் 14

திருடுவதில் இரண்டு ரகம் உண்டு. ஒன்று அகப்பட்டுக் கொள்ள இடம் கொடுத்துத் திருடுவது. மற்றது அகப்பட்டுக்கொள்ளாமல் திருடுவது. பின்னது மறைக்கக் கூடியது. மற்றது மறைக்க முடியாதது. —திருட்டு வஸ்து தன் வீட்டுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டதிலிருந்து திருட்டுப் போகும் வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மை விளங்கிற்று. ஆனால் திருடினது யாராகத்தான் இருக்க முடியும் என்று "எதிரிகள்" முடிவு கட்டிவிடப் போதிய காரணங்கள் புலன் இருக்கலாம்.

சுந்தரி அம்மாளின் அக்கறை இப்போது இந்தப் பாதையில்தான் சென்றது. கையில் வைத்திருந்த பொம்மையுடன் வாயிற்படியின் பக்கம் நகர்ந்து வாயிற்பக்கம் யாராவது வருகிறார்களா என்று பார்த்துவிட்டு சியாமளி நின்ற இடத்துக்கு நகர்ந்து வந்தாள்.

"சியாமளி, நிஜத்தைச் சொல்லிவிடு. நீதானே இதை எடுத்துண்டு வந்தே. உன்னை அடிக்கல்லே, நிஜத்தைச் சொல்லு" என்று பொய்க் குரலில், அரைக் கொஞ்சலாக அதட்டினாள்.

சியாமளி "இல்லையம்மா எனக்கொன்னும் தெரியாது" என்று அரைத் தொண்டையில் பதிலளித்தாள். தன் தாயாருக்கு எழுந்திருக்கும் சந்தேகத்தைவிட தான் ஆசைப்பட்ட பொம்மை எதிர்பாராத அதிசய முறையில், விளங்காத வழியில் தன் வீட்டுக்கு வந்து குதித்திருக்கும் விஷயம் அவளது மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

தாய் கோபத்தை வரவழைத்துக் கொண்டாள். இரண்டடி கொடுக்காவிட்டால் கடமை தவறினதாகும் என்ற எழுச்சியில் செல்லமாக நான்கடி அடித்தாள். அடித்துவிட்டுத் தன் கையிலிருந்த பொம்மையை ஒரு முறை பார்த்தாள்.

சியாமளியின் குற்றம் ஒருபுறமிருக்கத் தானும் அதற்கு உடந்தையாயிருக்க வேண்டிய அவசியம் நிகழ்ந்திருப்பதையும் அவள் உணராமலிருக்க முடியவில்லை.

நடைமுறைக்காகவும், ஒரு சாக்குப் போலவும் அவளது மனச்சாட்சியின் மீதிக் கோருதலை அவள் ஒரு வாதத்தின் மூலம் திருப்தி செய்து கொண்டாள்.

"பொம்மையைத் திருப்பிக் கொண்டு கொடுத்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்புறம் திருடனைத் தானே காட்டிக்கொடுப்பதாக ஆகும். பெண்ணின் பாவம் குடும்பத்தையே கரி பூசிவிடும். தன் பெண்ணைப்போய் ஒருவர் பகிரங்கமாகக் குற்றவாளி என்று சொல்வதற்கு இடம் கொடுக்க எந்தத் தாய் தான் விரும்புவாள். ஆகவே பொம்மையைத் திருப்பிக் கொண்டு

கொடுக்கக்கூடாது எனத் தான் முடிவி செய்வது திருட்டைத் தான் விரும்புவதால் ஏற்பட்டதல்ல. ஆனால் தீராத பக்ஷமாக ஏற்பட்ட முடிவு''—இவ்வாறு அவளது மனம் சிந்தித்தது.

சரியாகச் சொல்லவேண்டுமானால் அவள் மனம் தானாகச் சிந்திக்க வில்லை. தனது மனச்சாட்சியை ஏமாற்றத் தூண்டப்பட்டது.

இந்த நிலைமைக்கு ஒப்பான ஒன்று முன்பு ஒரு முறை நேர்ந்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஒரு தடவை அவள் வீட்டு சலவைக்காரி வேறு வலைத்துண்டு ஒன்றைத் தவறாக சலவைத்துணிகளுடன் கலந்து கொண்டு வந்து கொடுத்துவிட்டாள். அந்த வலைத்துண்டு ரொம்ப அழகாகப் பின்னப்பட்டிருந்தது. நடுவே சித்திரிக்கப்பட்ட மயில் ரொம்ப விசேஷமாக இருந்தது.

இதைக் கண்டுபிடித்தவள். அவள் இயல்பாக ஏற்பட்ட உந்தலில் தன் கணவர், பெண் எல்லோரையும் வைத்துக்கொண்டு ''இந்தத் துண்டு நம் வீட்டுதில்லையே,'' என்று கூறி விட்டாள்.

''சலவைக்காரி அழுக்கெடுக்க வரும் போது திருப்பிக் கொடுத்திடு'' என்றார் கோபாலய்யர்.

''அடேயப்பா! நீங்க சொல்லணுமாக்கும்? எனக்குத் தெரியாதா? ஊரார் பண்டம் நமக்கெதற்கு?'' என்றாள். சற்று நேரம் கழித்துத் தானாகவே ''சலவைக்காரி தானாகவே வந்து கேட்டால் கொடுத்துடுவோம். அவள் அக்கறையா வந்து கேக்கறாளான்னு தான் பார்ப்போமே?'' என்று மேலும் கூறினாள். இந்தப் பேச்சுக்கு விசேஷமான அர்த்தம் இருக்கத்தான் இருந்தது.

இந்தச் சம்பவம் ஞாபகம் வந்தவுடன் அவளுக்கு ஏதேதோ உணர்ச்சிகளெல்லாம் ஏற்பட்டன. தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

திரும்பவும் சியாமளியைப் பார்த்தாள். அந்தப் பெண் கண்ணைக் கசக்கிக்கொண்டு நின்றது. இன்னும் இரண்டடி வைத்துவிட்டு பொம்மையை எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்றாள். அங்கிருந்த கள்ளிப் பெட்டிக்குள் பொம்மையை மறைத்து மூடி வைத்துவிட்டு வெளியே வந்தாள். கண்ணைக் கசக்கிக்கொண்டே நின்ற சியாமளிக்கு இதெல்லாம் வியப்பாக இருந்தது. தாயார் உள்ளே சென்ற காரியத்தைப் பின்தொடர்ந்து பார்த்தாள்.

''என்ன பார்வை? பொம்மையைத் தொடு, கையை ஒடிச்சடறேன். ஊரார் வீட்டுக்குப் போரது, கையை நீட்டறது. இதெல்லாம் என்ன வேலை. தரித்திர புத்தி உனக்கேன் வரணும்'' என்று கூறிக் கொண்டே தரதர வென்று அந்தப் பெண்ணையும் கூடத்துக்கு இழுத்து வந்தாள்.

''திருட்டுச் சொத்தை ஒளிக்க வேண்டியதாப் போச்சு. அவாள் யாரானும் வந்து கண்ணுலே பட்டுத் தொலைச்சா பழிதான் வந்து சேரும்'' என்று மேலும் உறுமினாள் சுந்தரியம்மாள் சியாமளியை மேலும் இரண்டடி வைத்துக்கொண்டே.

அந்தப் பெண் கோவென்று கதறினாள். ''என்ன அழுகை? வாயை மூடு'' என்று கூறி அவள் வாயையும் பொத்திவிட்டு ''இங்கே வா, இதோ பாரு. உன்னை அவாத்திலே யாராவது பொம்மையைப் பார்த்தியா, எடுத்தயான்னு கேட்டா ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லிடணும், தெரியுமா? ஏதாவது அசட்டுப் பிசட்டுனு சொல்லி வச்சயோ, தெரியும் சேதி! தலைக்குக் கல்லு கொண்டு வந்து வைக்காதே; ஆமாம். மூணு தடவை சொல்லறேன், சொல்லிடுவையா, சொல்லிடுவையா?'' என்று பாடம் கற்பித்துக்கொண்டே இன்னும் இரண்டடி வைத்தாள்.

அடி பொறுக்காமல் சியாமளி ''இல்லை, இல்லை'' என்று கதறினாள்.

இவ்வளவு கதறலினூடேயும் அவள் சிந்தனை வேலை செய்துகொண்டுதானிருந்தது. தனது தாயாரின் நடத்தை அவளுக்கு விநோதமாகத்தான் பட்டது. உண்மையிலேயே திருடினது தானாக இருந்தாலும் கூடத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடமை இருக்க, ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? தாயாருக்கும் அந்தப் பண்டத்தின் மேல் ஆசை இருக்குமோ என்ற சந்தேகம் எழத்தான் செய்தது.

இவ்வளவு குழப்பத்தினிடையேயும் அவளுக்கு ஒரு இன்பம் ஏற்பட்டது. தாயின் முடிவு தனது ஆசைக்கும் சௌகரியமாக வந்து வாய்த்து விட்டது. இந்த ஆசைப் பூர்த்தி நீடிக்க வேண்டியதற்காகவாவது உண்மையை மறைத்துவிட வேண்டும்—தன் வீட்டில் அந்த அந்நிய சொத்து இருக்கிறது என்ற உண்மையைத் தான்! தனக்குள்ளேயே இவ்வாறு சபதம் செய்து கொண்டாள் சியாமளி. தாயும் தான் விட்டு வந்த காலை வேலைகளைக் கவனிக்க அடுக்களைக்குவிரைந்து சென்றாள்.

தாய் உள்ளே சென்றுவிட்டாளா என்பதை நிச்சயம் செய்து கொண்டு பாவாடையால் கண்களைத் துடைத்துக்கொண்டே பொம்மை ஒளிந்திருந்த அறைக்குச் சென்றாள். மெதுவாகக் கள்ளிப் பெட்டியைத் திறந்து பூனையை எடுத்துப் பார்த்தாள். அதை அணைத்துக் கொண்டாள். பின்னர் வைத்துவிட்டுப் பெட்டியையும் மூடிவிட்டுத் திரும்பி வந்து தனது புஸ்தகங்களை அடுக்கி எடுத்து வைத்துக் கொண்டாள், பள்ளி செல்ல ஆயத்தமாக.

அத்தியாயம் 15

இளைஞர்களிடையேஇருக்கும் 'நட்பு' என்ற நிலைமை விவரிப்பதற்குச் சற்றுக் கடுமையான பொருள். மனிதனது எந்தச் செயலும் சுய நலத்திலிருந்து எழுவது என்ற தத்துவத்தை ஒப்புக்கொள்வது சௌகரியமானது. 'நட்பு' என்ற நிலையும் இந்த அடிப்படையில் கிளம்புவதாகவே வைத்துக் கொள்ளலாம். ஆனால் வெவ்வேறு வித சுயநலங்கள் வெவ்வேறு நட்புகளின் அடிப்படைகளாக அமைந்திருக்கும். சுயநலம் என்று கூறும்போது நட்பு ஏற்படுவதற்குமுன் அதன் அங்கங்களுக்கு அது ஒரு தெளிவான கருத்தாக, லட்சியமாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சுய நலம் என்பது பௌதீக இயல்புக்குள் மறைந்து மானஸீகத்தின் எல்லைக்குள் நுழைய அவசியமில்லாத ஒரு பண்பாகவும் இருக்கலாம்—குறைந்த பட்சம் அதன் சில கோணங்கள் அப்படித்தான் இருக்கின்றன.

இந்த தத்துவ விசாரத்தின் துணைகொண்டு வெங்கிட்டு—சியாமளி உறவைப் பார்க்கும்போது அதுவும் சுய நலத்தால் தான் உந்தப்பட்டிருந்தது எனக் கூறவேண்டும்.

இந்த உறவு ஆரம்பித்த காலத்தில் வெங்கிட்டுவோ, சியாமளியோ ஏதோ சில கருத்துகளை வைத்துக் கொண்டு தான் ஒருவருக்கொருவர் நெருங்கி வந்தார்கள் என்பது பொருளல்ல. இந்த உறவு வளர்ந்ததும், நீடித்ததும், சுலபத்தில் கலைக்க முடியாமல் போனதும் இந்த சுயநலத்தால்தான் என்பதே அர்த்தம்.

வெங்கிட்டு ஒரு ஆண்பிள்ளை. பள்ளிக்கூடத்தில் சிறிய வகுப்பில் படிப்பவன். சற்று சுட்டியான குணம். விஷமம் நிறைய உண்டு. அவனது கோதாத தலையும் அடிப்புறத்தில் மாத்திரம் அழுக்கடைந்த சட்டையும் இயற்கையில்-மண்ணில் —அவனுக்கிருந்த பற்றை வெளிப்படுத்தும். அவனது பெரிய குறை உணர்ச்சிகளால் உயர ஏற்றப்படும் போது அவன் தன்னை இழந்து, தனக்குத்தான் நாயகன் என்ற பாவத்தையும் இழந்து விடுவான். அவனது விசேஷ குணம் ஒரு லட்

சிய ஆண்பிள்ளைக்கு இருக்கவேண்டிய முதல் குணமாக இருந்தது—அதுதான்--பெண்களைச் சீண்டி விஷமம் செய்து அழ வைத்துச் சிரிக்க வைத்து வேடிக்கை பார்க்கும் வேலை.

இந்த லட்சிய ஆண்பிள்ளைத்தனம் தற்காலத்தில் சுலபமாகக் காணக்கூடியதாயில்லை. காரணமென்னவெனில் தற்காலத்தில் 'பால் பேதம்' வெறும் அங்க லட்சணங்களோடு நின்றுவிட்டதுதான். வேறு மானசீக குணபேதங்கள், இயல்புகள் மறைந்து போய்விட்டன என்றே கருதவேண்டும். இதற்குக் காரணம் அந்த "அங்க லட்சண" விஷயம் அதிக முக்கியத்துவம் அடைந்துவிட்டதாகவும் இருக்கலாம்.

வெங்கிட்டுவும் காலத்தால் தற்காலத்தவனுக இருந்தாலும் இயல்பால் அந்தப் பழைய 'புஷ்டி' யான காலத்தைச் சேர்ந்தவனுயிருந்தான். ஒரு கொள்கைக்காக சண்டை போடுவதற்கும் ஒரு கொள்கைக்காக விட்டுக் கொடுப்பதற்கும் உரிய உத்வேகம் அவனது உயிரமைப்பில் இருந்தது.

வெங்கிட்டுவின் குறைகளையும் நிறைகளையும் ஈடு செய்வதற்கு சியாமளி வந்து சேர்ந்தாள். இயற்கையின் "தேவைப் பூர்த்தி சக்தி" இந்த உறவை ஏற்படுத்தியதாகக் கொள்ளலாம்.

சியாமளி ஒரு பெண். பள்ளிக்கூடத்தில் சிறிய வகுப்பில் படிப்பவள். ஆனாலும் அவள் பள்ளிக்கூடத்தில் படிப்பவள் என்பதிலேயே ஒரு விசேஷம் இருக்கிறது. பெண் கல்வி பரவிப் பிரசாரம் செய்யப்பட்டு பண்பாடாக இருக்கும் இந்தக் காலத்திலும் 'ஒரு பெண் பள்ளிக்கூடம் போகிறுள்' என்பதே பெரிய கர்வத்துக்குகந்த காரணமாக இன்னும் இருக்க முடியும். தவிரவும் அவள் வெங்கிட்டுவின் சம வயதிலேயே அவன் வகுப்பில் படிக்கிருள். சியாமளியின் முதல் கர்வம் இது.

ஆனால் இதை அவள் பிரயோகிப்பதில்லை என்பது அவளது தார்மிக பாவத்தைத்தான் காட்ட முடியும்.

விஷமத்தனத்தை தன் சொந்த குணாதிசயங்களில் ஒன்ருகக் கொள்ளாவிட்டாலும், அதை வெளியில் விரும்பிக்கண்டு, ரஸிப்பதில் ஈடு இணையற்றவளாக இருந்தாள் சியாமளி. உண்மையில் தான் மேற்கொள்ளாத இந்த குணம் இல்லாத வெளியிடங்களை அவள் விரும்பியதில்லை—வெறுத்தும் இருக்கிருள்.

சியாமளியின் மற்றொரு குணாதிசயம் அவளது பரிபூர்ணமான தன்மயம்—அகம்பாவம்—தான். அந்த குணாதிசயம் அவளுக்குள் உயிர் போல் இழைந்து போயிருந்தது. எனவே தனிப்பட்ட ஒரு குறியீடாக அது வெளியில் தெரியவில்லை.

லட்சியப் பெண்மையின் மகத்தான பண்பும் அவளிடம் இருந்தது. சிறிய விளையாட்டுகள், ஆசைகள் இவற்றைத் தன்மேல் வெளியிலிருந்து பிரயோகம் செய்ய அனுமதிக்கும் குணமுடைய அவள் முக்கியமான விஷயங்களில் வெளியாரை ஆக்கிரமித்து அடக்கித் தனது ராஜ்பாதிகாரத்துக்குள் வைக்கும் ஆக்கமும், பேராசையும் படைத்திருந்தாள்.

இந்த இரண்டு பத்திரங்களும் தத்தம் குண விசேஷங்களை—இங்கே அலசிக் காட்டியிருப்பது போல—அறிந்திருந்தார்கள் என்பது பொருளல்ல. அவர்கள் அறிந்திருந்தால் அவை சாச்வதத் தன்மை பெற்று உருவமுடையவையாய் இருந்திருக்க முடியாதல்லவா?

நேர் எதிரிடையான இந்த குண விசேஷங்களே சியாமளிக்கும், வெங்கிட்டுவுக்குமிடையில் சுலபத்தில் அழிக்க முடியாத ஒரு பந்தத்தை உண்டாக்கியிருந்தன.

பள்ளிக்குக் கிளம்பும்போது வெங்கிட்டுவின் மனத்தில் பெரிய போராட்டம்தான் நடந்து கொண்

டிருந்தது. எதிர் வீட்டு சியாமளி ஒரு 'திருடி' என்ற நோக்கில் அவன் அவளிடம் கசப்படையவில்லை. அந்த அடாத செயலைச் செய்துவிட்டது அவள்தான் என்றாலும் தான் ஊகித்த அந்த நடவடிக்கையை சியாமளியின் கம்பீர்யத்துடன் சேர்த்துப் பார்க்க முடியவில்லை.

அந்த அழகான பொம்மைகள் இரண்டும் தனது உடமை என்று நம்பி அதன் காரணமாக சியாமளியைவிட உயர்ந்த பதவியில் இருப்பதாக நினைத்ததற்கு அவள் உலை வைத்துவிட்டதுடன், தன்னையும் தன் வீட்டாரையும் ஏமாற்றிவிட்ட அவமானம் சேர்ந்துகொண்டு அவனை வாட்டியது.

இந்த வாட்டத்தை வெளிப்படுத்துவது எப்படி என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. வேறு சந்தர்ப்பங்களில், வேறு நபர் விஷயத்தில் இந்தக் குழப்பமோ, தயக்கமோ அவனுக்கு ஏற்பட்டிருக்காது. வேறு நபர் யாரையாவது அவன் இவ்வாறு சந்தேகித்திருந்தால் உடனே சண்டைக்குப் போயிருப்பான். அடித்து உருட்டியிருப்பான். பழி தீர்த்திருப்பான். யோசித்திருக்க மாட்டான். போர்தொடுத்து அடக்கியிருப்பான். பலாபலன்களைப்பற்றி அக்கறைபட்டிருக்கமாட்டான்.

ஆனால் இது அத்தகைய வேறு நபர் அல்ல, சியாமளியேதான். அவனது தயக்கத்துக்கு சியாமளி ஒரு பெண் என்பதைக் காரணமாக யாராவது கற்பித்திருந்தால் அது முற்றிலும் தவறு. பெண்மையை ஒரு கருணை காட்டப்படவேண்டிய எளிய வஸ்துவாக அவன் மதிக்கவில்லை. அவனுக்கு என்றும் இந்த விபரீத எண்ணம் தோன்றியதில்லை. அதாவது பெண்மையை அவமானப்படுத்தும் நோக்கம் அவனுக்கில்லை.

(தொடரும்)

குறைந்த சார்ஜில் ரூம்கள் வாடகைக்கு விடப்படும்
கப்பல் பிரயாணிகளுக்கும் வெளியூர்வாசிகளுக்கும்
தங்குவதற்கு இடவசதியுண்டு.

சிங்கப்பூர் விடுதி
தி ஸௌத் இண்டியன் லாட்ஜ்
1/8, வானல்ஸ் ரோட்,
எழும்பூர் P. O. மதருஸ்-8.
S. I. R. ஐஸ் பேக்டரி எதிரில் இருக்கிறது.

Prop : **D. VELAYUTHAM PILLAI**
(Passage Broker)

முகலாயர்களும் கலைகளும்

★

முகலாய மன்னர்களும் அவர்கள் வம்சங்களைச் சேர்ந்த ராஜ குமாரர்களும் லளிதக் கலைகளிலும் இலக்கியங்களிலும் ஆழ்ந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். உயர்தர சங்கீதம், காவியம், நாடகம், நாட்டியம் முதலியவற்றை அவர்களே ரசிப்பதோடு இவற்றின் தாரா தரங்களையும் நன்குணர்ந்த விமர்சகர்கள்.

அந்தக் காலத்திலிருந்த பிரபல கவிகளான ஹாபிஸ், ஓமார், ரூமி, ஸாடி, முதலியோர் முகலாய தர்பாரில் மிகவும் கௌரவிக்கப்பட்டு வந்தனர். கலைஞர்கள், விஞ்ஞானிகள், வேதாந்திகள் பூகோள சாஸ்திர விற்பன்னர்கள் அனைவருக்கும் முகலாய அரச சபையில் அமோக வரவேற்பும் செல்வாக்குமிருந்தன.

முகலாய மன்னர்களான பாபரும், ஹுமாயூனும், ஜிஹாங்கீரும் சிறந்த கவிஞர்களாக விளங்கினர். பாபர் துருக்கி பாஷையிலும் பாரஸீக பாஷையிலும் அழகான கவிதைகள் புனைவதில் வல்லவராயிருந்தார். சங்கீதத்திலும் பாண்டித்தியமுண்டு. இவர் கையெழுத்தும் மிகவும் அழகாயிருக்கும். ஹுமாயூனல் இயற்றப்பட்ட காவியங்கள் அக்பர் பாதுஷாவின் அரண்மனை வாசகசாலையில் வைக்கப்பட்டிருந்தன. ஹுமாயூன் ஒரு கவி மட்டுமல்ல; ஜோதிஷம், கணிதம் முதலிய சாஸ்திரங்களிலும் வல்லவர். இவருடைய ஒன்று விட்ட சகோதரனை இளவரசர் கம்ரான் ஒரு ஓவிய நிபுணர். அவர் இயற்றிய கவிதைகளை மக்கள் இன்னும் ஆவலோடு படித்து வருகின்றனர்.

அக்பர் பாதுஷா லளிதக்கலைகளுக்கும் இலக்கியங்களுக்கும் ஒரு போஷகராய் திகழ்ந்தார். தர்பாரில் பல கலை விற்பன்னர்களுக்கும் அளவற்ற ஆதரவளித்தார். அபுல் பாஸலும் நிஜாமுடீனும், படாயுனியும் பாரஸீக பாஷையில் அக்பர் பாதுஷாவின் ஆட்சியைப் பற்றி மிகவும் போற்றி எழுதியுள்ளனர். ஆஸ்தான கவியான பைஸீயின் கணக்கற்ற கவிதைகள் மிகப் பிரசித்திப் பெற்றவை. அபுல் பாஸல் அக்பரின் ரெவின்யூ நிர்வாக முறையைப் பற்றிப் பிரபலமான ''அயினி அக்பாரி'' என்ற நூலை எழுதியுள்ளார். கலைகளும் இலக்கியங்களும் அக்பர் ஆட்சியில் புத்துயிர் பெற்றன.

கலைகளையும் இலக்கியங்களையும் போஷித்து வளர்ப்பதற்காக ஒன்பது பேர் கொண்ட நவரத்தினம் என்ற ஒரு குழுவை நியமித்தார். இந்தக் குழுவிற்கு நிரக்ஷர குட்சியான அக்பரே தான் தலைவர். எழுதவும் படிக்கவும் தனக்குத் தெரியாததைப் பற்றி சிறிதேனும் அக்பர் வெட்கமடையவில்லை.

அபார ஞாபக சக்தியும் விஷயங்களைக் கவனித்து அறிவதில் சூட்சும புத்தியும் படைத்தவராயிருந்ததால் எழுதப் படிக்கத் தெரியாதது அக்பருக்கு யாதொரு விதத்திலும் தடையாக்வில்லை.

உலகத்தின் மிகப் பெரிய ஞானிகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய்த்தானிருந்தார்களென்று அக்பர் அடிக்கடி கூறுவது வழக்கம். புத்தக ஞானமில்லாவிடினும் உலாமாக்களை விடவும், பண்டிதர்களையும்விடவும் ஞானஸ்தராயிருந்தார். மகா ரஸிர்கள் கூட வியக்கும் வண்ணம் கலை நுணுக்கங்களைப் பற்றி விமர்சனம் செய்வார்.

தனக்குஎழுதப்படிக்கத் தெரியாவிட்டாலும் வெகு அழகாய்த் தயாரித்த 24,000 நூல்கள்கொண்ட அரசாங்க வர்சகசாலையை நிருவினர். அக்காலத்தில் சங்கீதத்தில் பிரபலமாயிருந்த தான்சேன் அக்பரால் போற்றப்பட்டவர்.

சங்கீதத்திலும் ஓவியக் கலையிலும் அபார ஞானம் பெற்றிருந்ததோடு ராணுவ உடுப்புகளைத் தயாரிப்பதிலும் சிற்ப சாஸ்திரத்திலும் சிறந்து விளங்கினர். தன் செய்கைகளெல்லாவற்றிலும் இந்து முஸ்லீம் ஒற்றுமை நிலவவேண்டுமென்று ஆர்வங் கொண்டார்.

மகாபாரதம், ராமாயணம் முதலிய இதிஹாஸங்களைப் பாரஸீகப் பாஷையில் மொழி பெயர்த்ததற்கு அக்பர்தான் காரணம். ஜிஹாங்கீரும் ஒரு சிறந்த கவியாவார். சங்கீதத்திலும் இலகியங்களிலும் அலங்காரக் கலைகளிலும் திறமை வாய்ந்தவர். ஆக்ரா அரண்மனையிலுள்ள சில ஓவியங்கள் ஜிஹாங்கீரால் தீட்டப்பட்டவை. தன் தந்தையின் சமாதியான புகழ்பெற்ற சிக்கந்தராவை திட்டமிட்டவரும் ஜிஹாங்கீர் தான். ஜிஹாங்கிரின் புதல்வரான ஷாஜஹானும் சங்கீதம், லளிதக்கலைகள், கவிதைகள் முதலியவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். உலகப் புகழ்பெற்ற இவர் மனைவியின் ஞாபகார்த்தமான தாஜ்மஹால் இவரால் கட்டப்பட்டதுதான். ஷாஜஹானின் புதல்வர் தாரா என்பவர், அரபி, பாரஸீகம், சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் வல்லவராயிருந்தார். சர்வமத சமரசத்தை அடிப்படையாகக்கொண்ட சூபிஸம் என்ற இஸ்லாமியக்

கொள்கையை இவர் கடைப்பிடித்திருந்தார். உபநிஷத்துகள் அனைவற்றையும் நன்கு கற்றுணர்ந்து பார்ஸீக பாஷையில் மொழி பெயர்த்துள்ளார்.

ஔரங்கசீப் மன்னரும் கலைகளிலும், இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அவரது வாழ்க்கை பிரத்தியேகத் தன்மை வாய்ந்ததாக இருந்தது. நாட்டியமும் சங்கீதமும் இவருக்கு அறவே பிடிக்காது. அரண்மனையைச் சேர்ந்த பாடகர்களையும் நடிகர்களையும் இவர் விரட்டிவிடும்பொழுது ஒரு சவத்தைக் கொண்டுபோவதுபோல் இவர்கள் அழுதவாறு சென்றூர்கள். இதைக் கண்ட ஔரங்கசீப் மன்னர் "யார் மாண்டதற்காக அழுகிறீர்கள்" என்று கேட்டார். அரசனுக்குத் தகுந்த பதில் அளிக்கிறூர்களென்று நினைத்து "மாண்டு போனது சங்கிதம் தான்" என்று இவர்கள் கூறியவுடன் "மறுபடி அதை தலைகாட்டாதவாறு மிகஆழமாண குழி தோண்டிப் புதைத்து விடுங்கள்' என்று இவர்களை ஆத்திரத்துடன் மடக்கி விட்டார் ஔரங்கசீப்.

கேளிக்கைகளையும் சங்கீதத்தையும் இவ்வளவு தீவிரமாக வெறுத்த ஔரங்கசீப் நல்லவிவேகியும் சிறந்தஎழுத்தாளருமாயிருந்தார். அவர் மரணத்துடன் அவர் ஆண்டுவந்த முகலாய ராஜயம்அஸ்தமித்ததுபோல் முகலாய மன்னர்கள் போற்றி வந்த லளிதக்கலைகள், இலக்கியங்கள் யாவும் அஸ்தமித்து விட்டன.

—B.U.J.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

ஈசுவர தரிசனம்

●

சிரத்தை உள்ளவனுக்கு எல்லாம் உண்டாகும்; அஃது இல்லாதவனுக்கு ஒன்றுமில்லை.

★

ஸ்ரீராமபிரான் இலங்கை போய்ச் சேருவதற்குச் சமுத்திரத்தில் அணைபோட வேண்டியிருந்தது. ஆனால், அவருடைய பரம பக்தனான ஹநுமான் ஸ்ரீ ராமபிரானிடம் வைத்திருந்த திட பக்தியினால் சமுத்திரத்தை ஒரே தாண்டாய்த் தாண்டி விட்டான். இங்கு எஜமானனைக் காட்டிலும் சேவகனே அதிகமான காரியத்தைச் சாதித்தான். காரணம் விசுவாஸமே.

★

சிக்கி முக்கிக் கல் கற்பகோடி காலம் தண்ணீரில் கிடந்தாலும் தன் உள் நெருப்பை ஒரு போதும் இழப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் அதை இரும்பால் தட்டினால், நெருப்புப்பொறி பறக்கும். அதுபோலவே திடசித்தமுள்ள பக்தனும் அவன் உலக பாசங்களினிடையே கலந்திருந்தாலும் அவனுடைய பக்தியும் பிரேமையும் குறைவுபடாது. ஈசுவரனுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே அவன் தன்னை மறந்தவனாய் விடுகிறான்.

★

பாதரஸம் தடவின கண்ணாடியில் ஒருவனுடைய முகம் பிரதிபலிக்கும். அதுபோல, சக்தியையும் தூய்மையையும் பிரம்மசரியத்தினால் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவனுடைய ஹிருதயத்தில் ஸர்வேசுவரனுடைய திவ்ய ரூபம் பிரதிபலிக்கும்.

★

எவனிடம் அருள் தாகமும் தியானமும் அதிகமாக இருக்கின்றனவோ அவன் ஈசுவரனை வெகு சீக்கிரத்தில் காண்பான்.

★

ஓர் அறையில் அநேக ஆயிரம் வருஷங்களாக இருந்த இருள் ஒரு தீபம் கொண்டுவரப்பட்டவுடன் அகன்று போகின்

றது. அதுபோல அளவில்லாத ஜன்மாந்தரங்கள் தோறும்செய்த பாபத் தொகுதிகள் ஒருதரம் உண்டாகும ஈசுவரனுடைய கிருபா நோக்கத்தினுலேயே மறைந்து போகின்றன.

★

கங்கையில் ஓடும் பெரிய, வலிய நீராவிக் கப்பலொன்று, அதன் பின்னே இணைக்கப்பட்டுள்ள சிறு படகுகளையும் தோணி களையும் இழுத்துக் கொண்டு நீரின்மீது வெகு வேகமாகப் போவதுபோல, லோக ரக்ஷகர் அவதரிக்கும்போது, ஆயிரக் கணக் கான ஜனங்களை, மாயையாகிற ஸமுத்திரத்தைத் தாண்டுவித்து முக்தியாம் கரையைச் சேர்ப்பிக்கிறார்.

★

பழத்தின் மேல்தோல், சதை, கொட்டை ஆகிய எல்லாம், மரத் தின் ஒரே மூல வித்தினின்றும் உண்டாகின்றன. அதுபோல ஒரே ஈசுவரனிடமிருந்து, ஜீவ ஜட, சித்து, அசித்து ஆகிய சர்வ சிருஷ்டிப் பொருள்களும் தோன்றுகின்றன.

★

பட்டணத்துக்குப் புதிதாக வருபவன் இரவு வேளையில் தங்குவதற்குச் சௌகரியமான ஒரு விடுதியை முதன் முதலில் தேடி அங்கு தன் சாமான்களை வைக்க வேண்டும் அப்பால் அவன் ஊர் சுற்றி வேடிக்கை பார்க்கப் போகலாம். இல்லாவிட்டால், இருட்டில் இடம் தேடுவதில் சிரமப்படுவான் அதுபோல இவ்வுல கத்துக்குப் புதிதாக வருபவனும் ஈசுவரனுகிய நித்திய விடுதி யைத் தேடி வைத்துப் விட்டு பயமின்றி இவ்வுலகத்தில் திரிந்து, தான் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யலாம். இல்லாவிட் டால் மரணமாகிய பயங்கரமான அந்தகாரம் வரும்போது மிகுந்த துயரங்களை அவன் அனுபவிக்க நேரும்.

★

சந்தனத்தின் சுகந்தத்தையும் அழுகிய சவத்தின் துர்நாற் றத்தையும் காற்று ஒருங்கே கொண்டு வீசினும், அவற்றுடன் அது கலந்து விடுவதில்லை அம்மாதிரியாகவே முக்தியடைந்த ஜீவ னும் உலகத்தில் வாழ்ந்த போதிலும் அதனுடன் கலந்திருப்ப தில்லை.

★

சூரியன் பூமியைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாயினும் வெகு தூரத்திலிருப்பதால் ஒரு சிறிய தட்டைப் போன்று காணப்

படுகின்றது. அதுபோலவே ஈசுவரன் அளவற்ற மகத்துவமுடையவனாய் இருந்தும் நமக்கும் அவனுக்குமிடையே உள்ள தூரத்தினால் நாம் அவனுடைய உண்மையான மகத்துவத்தை அறியச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.

★

அவிழ்த்து விடப்பட்ட யானையானது மரங்களையும் செடிகளையும் வேரோடு பிடுங்கிக் கொண்டு போகிறது. ஆனால், அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தினதும் அது சாந்தமாகி விடுகிறது. அதுபோல, அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகின்றது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது சாந்தமாக அமைகின்றது.

—கங்காபாய், மதுரை



மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும்,
சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதராஸ்-18

மேவாரின் வீழ்ச்சி

[மூலம்: த்விஜேந்திரலால் ராயால் இயற்றப்பட்ட
மிகப் புகழ்பெற்ற வங்க நாடகம்]

தமிழாக்கம்:

"பைங்கா நாடு"

★

மானஸி: ஆனால், அதில் கொஞ்சம் சிநேகம், தயை இவற்றின் அம்சம் கூட உள்ளன. இது யாருடைய படம்?

படக்காரி: மகாராஜா மானசிம்மருடையது,

கல்யாணீ. இவருடைய முகத்தில் சிறிது வருத்தமும், நிராசையும் தென்படுகின்றன.

மானஸி: ஆம், கொஞ்சம் கவலையுடன் காணப்படுகிறார். ஆனால், அத்துடன்கூட சிறிது சுயமரியாதையும் கலந்திருக்கிறது. இது யாருடையது?

படக்காரி: பாத்சா ஜஹாங்கீருடையது.

கல்யாணீ: முகத்தில் எவ்வளவு கர்வம்!

மானஸி: அத்துடன் உறுதியும் சேர்ந்துள்ளது, இது யாருடையது

படக்காரி: ஸேனாதிபதி மகாபத்கான்.

மானஸி: ஸேனாபதி மகாபத்கான்! பார்ப்போம். (சிறிது நேரம் படத்தைப் பார்த்து) இயற்கை வீரனின் முகம். எவ்வளவு உயர்ந்த நெற்றி. உக்ரமான பார்வை, இவ்வளவு தேஜஸ், இவ்வளவு உறுதி. இவ்வளவு தாராளம், இவ்வளவு தன்னம்பிக்கை, இந்த எல்லா குணங்களும் அநேகமாக ஒரே மனிதனிடத்தில் கிடைக்காது. ஏன் கல்யாணீ, இவ்வளவு கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

கல்யாணீ: (தலை குனிந்து) ஒன்றுமில்லை.

மானஸி: இந்தப் படங்கள் யார் யாருடையது?

படக்காரி: பாத்சா உமருடையது.

மானஸி: நல்லது. நான் இந்த அக்பர், ஜஹாங்கீர், மானசிம்மர், மகாபத்கான் இவர்களுடைய படங்களை எடுத்துக்கொள்கிறேன். இதன் விலை என்ன?

படக்காரி: தாங்கள் கொடுத்ததைக் கொடுங்கள்.

மானஸி: (நான்கு தங்க நாணயங்கள் கொடுத்து) இதை எடுத்துக் கொள்,

படக்காரி: இந்த நாணயத்தில் ராணு அமரசிம்மருடைய முத்திரை யிடப்பட்டிருக்கிறதா?

மானஸி: ஆம்.

படக்காரி: உங்கள் படம் ஏதாவது இருக்கிறதா?

மா: என் படமா? இல்லை. எதற்காக?

படக்காரி: நான் இவ்வளவு கருணை ததும்பும் முகத்தைப் பார்த்ததே யில்லை. என்ருல் தங்களைப் போன்ற அழகியின் படத்தை எழுத முடியாது. இருந்தாலும் முடிந்த வரை எழுதிக் கொடுக்கிறேன்.

மா: இல்லை. இப்பொழுது தேவையில்லை.

படக்காரி: இதில் உங்களுக்கு என்ன தடை?

மானஸி: ஆம், இப்பொழுது தடையாயிருக்கிறது. சரி நீ போய் வா.

படக்காரி: நல்லது யஜமானி! நான் சென்று வருகிறேன்.

மானஸி: சரி போ.

(படக்காரி செல்கிருள்)

மானஸி: கல்யாணீ, இவ்வளவு கவனமாக யாருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிருய்?

கல்யாணி: ஒருவருடையதுமல்ல.

மானஸி: இதில் என்ன கல்யாணீ! அந்தப் படத்தை நான் எடுத்துத் தருகிறேன். இதுதானே! எடுத்துக்கொள். கல்யாணி, நீ ஏன் வெட்கப் படுகிருய்? இவர் உன் கணவனல்லவா?

கல்யாணீ: (தலையைத் தொங்கவிட்டு) ஆனல் தர்மம் மாறினவர்.

மானஸி: என்ன பேச்சு பேசுகின்ருய்? தர்மம்! எல்லோரும் ஒரே கடவுள் சந்ததிகள் போல் எல்லா தர்மமும் ஒரே தர்மத்தின் பிரிவுகள் இருந் தும் ஏன் பரஸ்பர விரோதம் என்று எனக்குப் புரியவில்லை. உலகில் தர் மத்தின் பெயரால் ரத்தப் பெருக்கு நடைபெற்றதைப்போல் வேறென்றும் நடந்ததில்லை.

கல்யாணீ: அவர்மீது அன்பு செலுத்துவது பாபமல்லவா?

மானஸி: அன்பைச் செலுத்துவது பாபமா? வெறுத்தவர்களிட மும் அன்பைச் செலுத்துவது புண்யம்தான். ஒருவன் எவ்வளவு அருவருப் புள்ளவனே அவ்வளவு கருணைக்குப் பாத்திரமானவன். உலகம் முழுவதும் அதே ஒரு அனுதி ஸௌந்தர்யத்தின் கிரணம் பிரகாசித்துக்கொண்டிருக் கிறது. அந்த கிரணத்தின் ஒரு ரேகைகூட இல்லாத இதயம் படைத்தவன் கூட இருக்கமாட்டான். மகாபத்கான் தர்மம் மாறியவனல்ல. அவன் ஒரு முஸல்மான். அவன் கடவுளைப் பிரும்மம் என்று சொல்லாமல் அல்லா என்ற பெயரால் அழைக்கிருன். இந்த மொழி மாறுபாட்டினுல் பாபியாகி விடுவானு?

கல்யாணீ: இன்றிலிருந்து தாங்கள் என் குரு.

மானஸி: அன்பின் ராஜ்யத்தில் அழகு, விவகாரம், நல்லது, கெட் டது. இவை பற்றிய சிந்தனை கிடையாது. அதில் ஜாதி வேற்றுமை கிடையாது. அன்பு ஒருவிதக் கட்டுப்பாட்டையும் சட்டை செய்யாது. அது

ஒரு பரிசுத்தமான, தானே மலர்ச்சியடைந்த அழகு...........மரணத்திற்கு மேல் ஒரு அழியாத ஆத்மாவைப் போல், பிரும்மாண்டத்தின் பரப்பில் மகாகாலத்தைப்போல் அது அமரத் தன்மையுடையது. கல்யாணி! என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

கல்யாணி: தங்கள் இதயமும் இன்பமயம். தயவு செய்து விடையளியுங்கள். உத்திரவு கொடுத்தால் நாளை நான் வருகிறேன்.

மானஸி: வா கல்யாணி, ஆனால், நாளை நிச்சயம் வரவேண்டும். ஆஜயனையும் வரச்சொல்.

(கல்யாணி போகிறாள். மானஸி பாடுகிறாள். ராணி வருகிறாள்.)

ராணி: மானஸி!

மானஸி: ஏன் அம்மா?

ராணி: உன் தகப்பனார் உன்னைக் கூப்பிடுகிறார்.

மானஸி: ஏன் எதற்காக?

ராணி: உன் கலியாணத்திற்கு தேதி குறிப்பிட வேண்டும். இதனால் உன்னிடம் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறார். என் வார்த்தையை அவர் ஒப்புக் கொள்ளவேயில்லை.

மானஸி: என் கல்யாணமா?

ராணி: ஆம், ஜோதிபுரி இளவரசன் யஸ்வந்த சிம்மனுடன் உனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கிறது. கலியாண நாள் குறிப்பிடுவதற்காக ஜோதிபுரியின் மகாராஜாவிடம் தூதன் அனுப்பப்பட்டிருக்கிறான்.

(மானஸி அழுகிறாள்)

ராணி: ஏன்? இது என்ன? ஏன் அழுகிறாய்?

மானஸி: இல்லை. அழவேயில்லை. நான் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்.

ராணி: கலியாணம் செய்துகொள்ள மாட்டாய? ஏன்?

மானஸி: நான் திருமணம் என்னும் தளையில் என் வாழ்க்கையைப் பிணைத்து வைக்கமாட்டேன். என் அன்பின் எல்லை அதைக் காட்டிலும் எவ்வளவோ பெரியது.

ராணி: அப்படி எங்காவது நடக்குமா பெண்ணே! கன்னியாகவே வாழ்க்கையை நடத்த முடியுமா?

மானஸி: ஏன் நடத்த முடியாது? இளம் விதவைகள் பிரும்மசர்ய விரதத்துடன் தன் வாழ்க்கையைக் கழிக்க முடியும்—இளம் கன்னிகைகளால் முடியாதா? பிரும்மசாரிணியாகவே இருப்பேன். நான் தகப்பனாரிடம் சென்று சொல்லிவிட்டு வருகிறேன்.

(மானஸி செல்கிறாள்)

ராணி: இது என்ன? இந்தப் பெண்ணிற்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? பைத்தியமில்லாமல் என்ன? அவரோ ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறார். அதோ அவரே வருகிறார். இன்று நான் அவரிடம் இரண்டு மூன்று விஷயங்கள் சொல்லப் போகிறேன்.

(ராணா வருகிறார்)

ராணா: மானஸி எங்கே?

ராணி: அவள் தங்களிடம் வரவில்லையா? அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது என்று தோன்றுகிறது.

ராணா: பைத்தியம் பிடித்து விட்டதா?

ராணி: வேறு என்ன? அவள் கல்யாணம் செய்து கொள்ளாமல் பிரும்மசாரிணியாகவே இருக்கப் போகிறேன் என்று சொல்கிருள்.

ராணா: ரொம்ப சரி. தெரிந்தது.

ராணி: நான், பெண்ணைக் கொஞ்சம் அதட்டி வையுங்கள் என்று சொன்னேன். நீங்கள் அதைக் கேட்கவில்லை. அதன் பயன் தான் இது.

ராணா: உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. சொன்னாலும் புரிந்து கொள்வதில்லை.

ராணி: நான் நன்ருக அறிவேன். அவள் பைத்தியமாகிவிட்டாள்.

ராணா: உனக்கு அம்மாதிரிப் பைத்தியம் பிடித்தால் நான் உன்னை தங்க சிம்மாசனத்தில் அமர்த்தியிருப்பேன்.

ராணி: கேளுங்கள், தகப்பனுக்கும் பெண்ணிற்கும் ஒரே நிலைமை.

ராணா: ராணி! நானே அவளை நன்ருகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவள் ஒரு தேவலோகப் பெண் என்பது மட்டும் நிச்சயம்.

ராணி: அவள் இப்படி............

ராணா: இல்லை. அவளைப்பற்றி நீ ஒன்றும் சொல்லாதே. பேசாமல் பார்த்துக்கொண்டே இரு.

(ராணா செல்கிருர்)

ராணி: புரிந்தது, மானஸியைப் பிடித்திருக்கும் பைத்தியம் பரம்பரையைச் சேர்ந்தது போலும். என் வருங்காலம் நல்லதாகத்தான் தோன்றவில்லை.

(ராணி செல்கிருள்.)

காட்சி 6

இடம்: கோவிந்த சிம்மனின் வீடு.

நேரம்: மத்தியானம்.

[சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டிருக்கிறது. சிறிது தூரத்தில் கல்யாணி கையில் மாலையுடன் படத்தை உற்று நோக்கிக்கொண்டிருக்கிருள்.]

கல்யாணி: அன்பே! என் இளமையாகும் பூஞ்சோலையின் குயிலே, என் தூக்கத்தின் இனிய நினைவே! என் விழிப்பின் இன்பக் கனவே! என் வாழ்க்கையை புது மெருகிட்டிருக்கிருய். என் எளிய வாழ்க்கையை ரகஸ்யமயமாக்கினீர். நீர் காலைக் கதிரவன். நீர் என் இருளடைந்த இதயத்தில் நுழைந்திருக்கிறீர். என் இதயத்தின் அரசன். நீர் என் இதய பீடத்தில் ஆட்சி செலுத்துகிறீர். நீரே என் நம்பிக்கை. நீரே வாழ்க்கையின் வெறுப்பை நிமிர்ந்து பார்க்கக் கற்றுக் கொடுத்திருக்கிறீர். நீர் ரசிகர், புத்தம் புதியவர், என் தெய்வம், என் தெய்வப்பயன் நீர்தான்,

(மாலையைப் படத்திற்குப் போடுகிறாள். இதற்குள் கோவிந்த சிம்மர் வந்து அதைப் பார்க்கிறார்.)

கோவிந்த : (உரத்த குரலில்) கல்யாணி!

கல்யாணி : (திரும்பி) அப்பா!

கோ : இது யாருடைய படம்?

கல்யாணி : (தலை வணங்கி) என் கணவருடையது,

கோ : உன் கணவன் யார்? மகாபத்கானா?

கல் : ஆம்.

கோ : இந்தப் படம் இங்கே எப்படி வந்தது?

கல் : பூஜை செய்வதற்காக இதை இன்று இங்கு கொண்டு வந்து மாட்டியிருக்கிறேன்.

கோ : பூஜை செய்வதற்கா?

கல் : ஆம், பூஜை செய்வதற்குத்தான். கோபப்படாதீர்கள், இது ஒரு குற்றமா?

(கோவிந்தசிம்மனின் காலில் விழுகிறாள்.)

கோ. மகாபத்கான் உனக்கு என்ன வேண்டும்?

கல் : (எழுந்து) அவர் என் கணவர்.

கோ : உனக்கு கணவனே கிடையாது என்று நான் உன்னிடம் எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன்?

கல் : முதலில் நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன். இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. என் கணவர் அவர்தான்.

கோ : கணவனா? மதம் விட்டுப் போனவன், மதத் துரோகி உன் கணவனா?

கல் : அப்பா! நான் தர்மம் அறியமாட்டேன். ஆசாரம் எனக்குத் தெரியாது. எனக்கு ஒன்றுதான் தெரியும். எனக்கு அவருடன் திருமணம் நடந்தது. அந்தத் திருமணப் பிணைப்பினால் கடவுளைச் சாட்சியாகக் கொண்டு நாங்களிருவரும் ஒன்றாகி விட்டோம். யாரால் அந்தப் பிணைப்பை அவிழ்க்க முடியும்?

(தொடரும்)

ASOKA SCENTED BETELNUT POWDER

எதிர்ப்பொருள்கொண்ட பழமொழிகள்

●

ஆயிரம் வார்த்தைகள் மூலம் சொல்லும் பேர்தனைகளை இரண்டே வார்த்தைகளில் பளிச்சென்று எடுத்துக் கூறுகின்றன பழமொர்ழிகள்.

பழமொழிகள் பெரும்பாலும் மகான்கள் கண்ணில்பட்ட சந்தர்ப்பங்களை யொட்டி தோன்றியவை. ஆதலால் பழமொழிகள் ஒன்றுக்கொன்று முரணாகப் பொருள்படவும் நேரிடுகின்றன.

இம்மாதிரிப் பழமொழிகள் ஆங்கில இலக்கியங்களைப் பற்றிய ஒரு விசேஷமான உண்மையாகும். இதற்கு உதாரணங்களாகும் கீழ்வரும் சில பழமொழிகள் :—

மகான்களும் முட்டாள்களும்

மகான்கள் யாவரும் ஒன்றுபோல் சிந்திப்பார்கள்.
ஒன்று போல் சிந்திப்பவர்களனைவரும் முட்டர்ள்கள்.

★

விருப்பும் வெறுப்பும்

ஒருவன் விரும்புவதை மற்றொருவன் வெறுப்பான்.
ஒருவருக்கு ஏற்றதாய் இருப்பது மற்றொருவருக்கு ஏன் ஏற்றதாய் இருக்கக் கூடாது?

★

ஊர் சுற்றியா? கட்டுப் பெட்டியா?

ஊரைச் சுற்றுபவன் ஒன்றும் சேமிக்க மாட்டான்.
ஒன்றுக்கும் உபயோகமில்லாதவனே ஊரை விட்டுச் செல்ல மாட்டான்.

★

முதியோரும் இளையோரும்

வயதின் விளைவே விவேகம்.
பச்சிளங் குழந்தையின் வாயிலேதான் விவேகம்.

★

நிறைவும், குறைவும்

சமையல்காரர்கள் அதிகமானல் சமையல் மோசமாகும்.
உதவி ஆட்கள் அதிகமாயிருந்தால் எவ்வேலையும் எளிதாகும்.

ஆண்டவனும் மனிதனும்

சுயசக்தி பெற்றவருக்கே ஆண்டவனும் உதவுவார்.
ஒருவருக்கொருவர் உதவுவதே மனித தர்மம்.

★

தேடவா? தேடாமலிருப்பதா?

தேடினால் தான் தேவையானது கிடைக்கும்.
ஆவலால் ஆவது ஆபத்தே!

★

துணிச்சலும் நிதானமும்

துணிவில்லாதவனுக்குப் பலனில்லை.
துணிச்சல் உள்ளவர்கள் முட்டாள்கள்; விவேகிகளுக்கே நிதானம்.

★

இன்றும் நாளையும்

நாளைக்குச் சேமித்துக் கொள்பவனே அறிவாளி.
நாளையைப் பற்றி இன்று கவலைப்படுபவன் முட்டாள்,

★

வினையும் விதியும்

நம் கையால் அமைக்கப்படுவதே நமது வாழ்க்கை.
மனிதன் தலையில் எழுதியதை எவராலும் மாற்ற முடியாது.

At Madurai Convenient Place to Stay:

CENTRAL LODGE

48, West Perumal Maistri St.,

(Near Thangam Theatre)

MADURAI.

தூதுப் பிரபந்தம்

ச. மு. பிள்ளை.

தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் தூதுப் பிரபந்தம் ஒன்ருகும். இது தமிழிற் பெரும்பாலும் கலி வெண்பாவால் செய்யப்படுகிறது. மற்றும் இத்தூது, கலம்பகம், அந்தாதி முதலியவற்றில் இடையிடையே வருவதுமுண்டு.

தூதுப் பிரபந்தங்கள் இயற்றிய ஆசிரியர்களின் புலமையைப் புலப்படுத்துவதன்றி, தமிழ்ப் பயிற்சியுடையவர்களின் மனத்தை வேருென்றிற் செல்லாதபடி கவர்ந்து தமிழ்ச் சுவையை ஊட்டி நிற்கும்.

தமிழ் விடு தூதென்று ஒரு பிரபந்தமுளது. சோமசுந்தரர் பால் காதல் கொண்ட தலைவி விரகத்தால் துன்புற்று தமிழைத் தூதாக விடுத்தாள். இது முற்றும் கலி வெண்பாவால் ஆக்கப்பெற்றது.

..............................“ஒண் கமலத்
தன்னந்தனை விடுப்பே னன்னந்தா னங்கவரை
இன்னந்தான் கண்டறியா தென்பரே—மன்னெங்காய்
அப்பாலோர் வண்டை அனுப்பினவர் காமம்
செப்பாதே யென்றற் றிகைக்குமே—தப்பாது
மானைப் போய்த் தூதுசொல்லி வாவென்பேன்—வல்லியப்பூந்
தானைப் பரமற்பாற் சாராதே—ஏனைப்பூங்
கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும்—காக்கையினம்
ஆகி வலியானுக் கஞ்சுமே........................”

என வரும் அடிகளால் மானும், குயிலும்கூட தூதனுப்பதற்குறியன என்று விளங்குகிறதல்லவா?

மேலும் கீழ்க் காணும் பொருள்கள் சிலவற்றைத் தூது விட்டதாகப் பாடிய பிரபந்தங்களும் உள. அவை துகில் விடு தூது முதலியன; பின்னும் சண்பகம், பாரிஜாதம், குவளை முதலிய மலர்கள், நாசணவாய்ப் புள், பொன் முதலியனவும் தூதுக்குரித்தாகத் தத்தம் நூல்களில் புலவர்கள் புலப்படுத்திருக்கிருர்கள்.

198762

அன்னத்தைத் தூதாக விடுதல் பெரும்பாலும் எந்தக் கலம்பகத்திலும் இல்லையென்றாலும், அதுவும் தூதனுப்பதற்குரியதே. இத்தூதை எல்லோரும் நளவெண்பாவிலோ, நைடதத்திலோ வாசித்திருக்கலாம். இங்கு தனிப்பாட்டொன்றைக் கவனிப்போம்.

"குருகை விடுத்தாள் எனக்குறுகே! கூறாய்,
சுகத்தை விடுத்தாளென்
றருகு வளரும் சுகமே சென்றறையாய்,
நிறை நீர் தெரிந்து பால்
பருகுமனமே யனம் விடுத்தபடி சென்றுரையாய்,
படி வருளத்
துருகுபசுப் பொன்மதிற் கரசி யுடையார்
விரித்தோ லுடையார்க்கே"

புலித்தோலுடையோராய் பசும் பொன் மதில்களால் சூழப்பட்ட காசி நகரில் வீற்றிருக்கும் விஸ்வேஸ்வரருக்குத் தூதனுப்புகிறாள் தலைவி.

"குருகே! நான் குருகை விடுத்ததைப் பற்றிக் கூறாயோ
சுகமே! நான் சுகத்தை விடுத்ததைப் பற்றி கூறாயோ
அன்னமே! நான் சோறுண்ணாதிருத்தலைப்பற்றி கூறாயோ".

எனத் தலைவி, இப்பாட்டில் நாரை, கிளி, அன்னம் இவற்றைத் தூதாக விடுக்கிறாள். இந்தப்பாட்டில் நாம் கவனிக்க வேண்டிய இடம் ஒன்று. ஒவ்வொரு பதம் இரு அர்த்தங்களை கொண்டுள்ளது! (குருகு—இளமை, நாரை; சுகம்—கிளி, தேகசுகம்; அன்னம்—ஒரு பறவை, சோறு)

ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய வண்டுவிடு தூதில்...—.........'செம்பொன்னைச் சேர்ப்பினவை செல்லா'' என்று கூறியிருப்பதால், பசும் பொன்னும் தூதனுப்பதற்குறியது என்று விளங்குகிறதல்லவா?

தேவார முதலிய திருமுறைகளிலும், திவ்யப் பிரபந்த சாரம் முதலியவற்றிலும் தூதின் வகைகள் பல ஆங்காங்கு உள்ளன. அனைத்தும் படித்து இன்புறத்தக்கன.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

எப்பொழுது வருவார்?

சி. டி. சஞ்சீவி.

★

டாக்டர் பரமசிவம் எங்கள் ஊருக்கு வந்த புதிதில் அவரை வரவேற்று, உபசரித்து ஊர்ப் பிரமுகரையெல்லாம் கூட்டி அறிமுகம் செய்து வைத்த பெருமை பெரியசாமிக்குத் தான் உரியது. ஆதாயமில்லாத எந்தச் செயலுக்கும் முனைந்து நிற்பவரல்ல அவர், என்பதும் உண்மைதான். ஆனால், டாக்டர் விஷயத்தில்—

நகருக்குப் பதினெட்டாவது கல்லில் எங்கள் ஊர், ஏரிக்கும் மலைக்கும் மத்தியில் அமைந்திருந்தது. இயற்கை அளித்த நன்மைகளைத் தவிர சுகாதாரத்தை ஒட்டிய எந்தச் சாதனங்களையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை. வியாதியை விருத்தி செய்து வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் நாட்டு வைத்தியர் ஒருவரும், இனி எங்களை ஏமாற்ற முடியாதென்றறிந்து நகரத்திற்குக் குடியேறி விட்டிருந்தார். அதனால், சாதாரண சொறி சிரங்கு, கண்வலி, வயிற்றுவலி முதலானவற்றிற்கு, ஏற்கனவே பரிச்சயமான மருத்துவ முறைகளைப் பயன்படுத்திக் கொண்டும், காலரா அம்மை போன்ற கொள்ளை நோய்கள் வருகிறபோது, அம்மன் கோயிலில் முறையிட்டுக் கொள்வதும், எங்களுக்கு வழக்கமாகி விட்டிருந்தது.

நல்லதொரு வைத்தியர் இல்லாத குறையால் இதுவரை, நேர்ந்து வந்த உயிரிழப்பைப் பற்றி ஊர் மக்களிடையே விரசம் நிறைந்த அபிப்பிராயங்கள் வளர்ந்து வந்ததும் உண்மைதான். இதில் பெரியசாமிக்கும் பெரும் பங்குண்டு.

அவருடைய தலை மகள் பொன்னி, நோயுடன் உறவு பூண்டு, வைத்தியத்துடன் பேரம் பேசிக் கொண்டிருந்தாள் ஆண்டு இரண்டாகியும் அந்த பேரம் முடியாமலிருந்தது. மேலும், அவளது உடலுறுப்புக்களில் நோய்க்கிருமிகள் குடியேறி எழிலைக்குலைத்து எலும்புக் கூடாக்கி பெற்றோர்க்குத் தீராத கவலையை உண்டு பண்ணி விட்டிருந்தது.

கன்னிப் பெண் பொன்னி, காலன் வசமாக காலம் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதும், ஊராரின் ஒருமித்த அபிப்பிராயமாக வளர்ந்து வந்தது. பெரியசாமியும் தன் மகள்மீது நம்பிக்கையற்றிருந்தார். இந்த நிலையில் டாக்டரின் கிராமப் பிரவேசம் அவருக்கு ஓரளவு ஆறுதலளித்திருக்கவேண்டும். அதனால்தான் டாக்டருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தாமாகவே முன் வந்து செய்து முடித்திருந்தார்.

டாக்டர் பரமசிவம் நாஸ்திகரல்லவென்பது உண்மையானாலும், வியாதிகள் சம்பந்தப்பட்ட மருத்துவ முறைக்குப் புறம்

பான குருட்டு நம்பிக்கைகளால், மக்கள் எவ்வளவு எளிதில் நோய்க்கு அடிமையாகி விடுகிறார்கள் என்பதை யெல்லாம், கிராம மக்களுக்கு விளக்கிக் கூறுவதில் அதிக கவனம் செலுத்தி வந்தார். இந்தவகை பிரசாரத்தால் கிராம இளைஞர்கள் பலரும், டாக்டருக்குத் தொண்டர்களாயினர். அந்தத் திருக்கூட்டத்தில் நானும் ஒருவன் என்பதிலிருந்து தான் கதை ஆரம்பமாகிறது.

★

டாக்டர் பரமசிவத்தின் அரிய மருந்துகள் பொன்னியை நாளடைவில் குணப்படுத்தி வந்ததும் உண்மைதான். ஆனால், அதே சமயம், அவருடைய அன்புப் பார்வையும், இனியஸ்பரிசமும் அவளுக்குப் புத்துயிரளித்து வந்தன வென்பதும் பரம ரகசியமாக இருந்து வந்தது.

ஒரு நாள் டாக்டருக்குப் பதிலாக நானே மருந்துகளை எடுத்துக் கொண்டு பொன்னியை அணுகினேன். நான் தனிமையில் வந்திருப்பதை அறிந்த அவள் :

"அவர் வரவில்லையா? ஏன், உடம்புக்கு என்னவாவது—"

"அப்படி யொன்றுமில்லை. யாரோ ஒருவன் மரத்தினின்றும் விழுந்து விட்டதாகக்கூறி, அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அவர் வர நேரமாகும் என்பதால் தான் மருந்தை நானே கொண்டு வந்தேன்—"

"தம்பி, உன்னிடம் ஒன்றைக் கேட்கிறேன். மறுக்காமல் பதில் சொல்லவேண்டும்—"

பொன்னி என்னை தம்பி உறவில் அழைத்ததற்காக சந்தோஷப்பட்டுக் கொண்டு, 'சரி அக்கா' என்றேன். அவள் முதல் கேள்வியாக, "டாக்டருக்குக் கலியாணமாகி விட்டதா?" என்றாள். இந்தக் கேள்விக்குச் சற்றுத் தாமதித்துத் தான் என்னால் பதில் கூற முடிந்தது.

டாக்டருக்குக் கலியாணமாகி விட்டதா இல்லையா என்பதில் பொன்னிக்கு எழுந்த சிரத்தை, அவள் அவரை விரும்புகிறாள் என்பதைத்தவிர வேறு விளக்கத்திற்கு இடமில்லை. பொன்னியைப் பற்றிய என் சிந்தனை வளர்ந்தது.

அவள் என்னுடன் ஐந்தாம் வகுப்புவரை படித்தவள். ஆனால் வயதில் என்னிலும் மூத்தவள். அவள் பருவமடைந்து விட்டாள் என்பதனாலே தொடர்ந்து படிப்பதை அவள் தந்தை தடுத்து விட்டார். சுமார் ஏழாண்டு காலமாக அவளும் கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்தும் வருகிறாள்.

திருவாளர் பெரியசாமி அவர்கள், கிராமத்திலே குறிப்பிடத்தக்க தனவான். 'நல்ல மனிதர்' என்ற கீர்த்தியும் உண்டு. அந்தஸ்தில் அவருக்குக் குறைந்தவர்களாயிருந்த அவர் தம் உறவினரும் அச்சத்தால் பெண் கேட்க முன் வந்தார்களில்லை. இதனால், பொன்னியின் கன்னிப் பருவம் வளர்ந்தது. அத்துடன் அவளுடைய மனச் சோர்வும் வளர்ந்து, தீராத நோயாகப் பரிணமித்து, அவளை படுக்கையில் கிடத்திவிட்டது என்பதும் ஊர் பிரசித்தமான செய்திகள்.

நான் பதில் சொல்லத் தயங்கிக் கொண்டிருப்பதை அறிந்த பொன்னி, மீண்டும், அதே கேள்வியைத் தன் பார்வையின் மூலம் விடுத்தாள். எனக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பட்டமரம் தளிர்விட்டு, பகலவனின் ஒளியிலே மினு மினுக்கும் பசுமையின் நேர்த்தி அவள் வனப்பிலே மாற்றுருக் கொண்டிருந்தது. அவளின் இமைக்காத கண்களிலே புதையுண்டிருந்த எண்ணற்ற தாப உணர்ச்சிகள் தலைகாட்டி என் மூலம் யாருக்கோ தூதுவிட வேண்டிக் கொண்டன. பசியேப்பக்காரன் அறுசுவையுண்டியைப்பற்றி எண்ணி ஏங்கி அள்ளூறும் உதட்டை மென்று கொள்வதைப்போன்று அவளும், அடிக்கடி தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

பொன்னி என் சிநேகிதி இல்லை. அவள் கூற்றுப்படி 'என் அக்கா.' அக்காவின் நலனில் தம்பிககு அக்கரையிருக்க வேண்டுமென்பது நியதி. இதை நினைத்ததும் என்னுள் கடமை உணர்ச்சித் தலைகாட்டி அவளுக்கு விரைவில் பதில் கூற உறுத்திற்று. வளர்ந்து வரும் நினைவுகளை தடுத்து நிறுத்தி விட்டு, "இல்லை என்று தான் நினைக்கிறேன் அக்கா. அப்படியிருந்தால் அவர் மனைவியுடன் வந்திருக்க வேண்டுமல்லவா?"

"அப்படியெல்லாம் நீயாக முடிவிற்கு வந்து விடாதே. பக்குவமாக அவரையே கலந்து பேசித் தெரிந்து கொள். அப்படி அவர் கலியாணமாகாதவர் எனத் தெரிந்தால், நான், அவரைத் தனிமையில் பார்த்துப் பேசப் பிரியப்படுவதாகச் சொல்லிவை—"

இதைச் சொல்லி முடித்ததும், அவள் நெஞ்சை ஏதோ அடைத்துக் கொண்டதைப் போல இருமினாள். நானும், காலம் கடப்பதை உணர்ந்து மருந்தைக் கொடுத்து விட்டு விடை பெற்றுக் கொண்டேன்.

★

டாக்டர் பரமசிவம் சுறுசுறுப்பு மிக்கவர். ஆனால் அவசரக்காரர் அல்ல. எதையும் அமைதியாக சிந்தித்து முடிவுக்குவருபவர். அது மட்டுமல்ல, அவர் மருத்துவத்துடன் மனோதத்துவமும் பயின்றிருப்பவர் என்பதை, நோயாளிகளுடன் பழகுவதிலிருந்தே கண்டு கொள்ளலாம். பொன்னிக்கு அவர் சிகிச்சை செய்யத் தொடங்கிய நாளிலிருந்து, அவளிடம் அவர் எவ்வாறெல்லாம் உரையாடியிருக்கிறார் என்பதை நான் நேரில் கண்டிருப்பவன். ஒரு நாள் பெரியசாமியிடம்; "பொன்னிக்கு சீக்கிரமாக கலியாணத்தை முடித்து விடுங்கள்." என்று கூறியதையும் கேட்டிருக்கிறேன். எனவே, பொன்னியை டாக்டர் புரிந்துக் கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. ஆனால் டாக்டரைப் பொன்னிக்குப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருந்தது.

அன்று மாலை நானும் டாக்டரும் ஏரிக்கரையில் உலாவி விட்டு; மலைக்குச் சென்றிருந்தோம். அங்கு ஒரு பாறையின் மேல் உட்கார்ந்ததும்,

வானத்தை அண்ணாந்துபார்த்த படி பெருமூச்சு விட்டுக் கொண்டே, "எனக்குச் சில நினைவுகள் வருகின்றன. உன்னிடம் சொன்னால்தான் மனக் குறைகள் நீங்கும் போலிருக்கிறது—" என்று கூறி, என்னைப் பார்த்தார் டாக்டர்.

நான் தலையசைத்து விட்டு, அவர் கூறுவதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டேன். டாக்டர் பேச்சின் இடையிடையே பெருமூச்செறிந்தார். அவரது கண்களிலும் நீர் துளும்பிற்று. முகத்திலும் வாட்டம் கண்டிருந்தது. சோகத்தின் உருவமாயினார் டாக்டர். அப்போதைய நிலையில் அவரைச் சிறந்த தைரியசாலி என்றே சொல்லிக் கொள்ள முடியாது.

டாக்டர் பரமசிவம் பிறப்பில் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். தியாக உள்ளம் படைத்த ஓர் கிறித்துவப் பாதிரியாரால் படித்து முன் நிலைக்கு வந்தவர். பாதிரியாரும் தம் மதத்தில் சேரும்படி பரமசிவத்தைக் கட்டாயப் படுத்தாதிலிருந்தே அவருடைய பெருந்தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

பாதிரியாரின் வளர்ப்பு மகள் ஒருத்தி, மரமசிவத்துடன் 'பி' ஏ' வகுப்புவரை படித்து வந்தாள். அவளுக்குப் பரமசிவத்தின் பால் மாறாத்·பாசமும் பணிவன்பும் உண்டு. அந்த அன்பு பரமசிவத்தைக் காதலிக்கச் செய்துவிட்டதென்பதை சொல்லத் தேவையில்லை!

பரமசிவம் 'டாக்டர்' பட்டம் பெற்ற முதல் ஆண்டிலேயே; பாதிரியாரின் விருப்பப்படி அவருடைய வளர்ப்பு மகளும், பரமசிவமும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். ஆனால், தம்பதிகளின் இன்ப வாழ்க்கை தொடங்கி ஓராண்டு முடிவதற்குள்ளாகவே காலன் குறுக்கிட்டு, டாக்டரின் அருமந்த மனைவியை உடன் அழைத்துச் சென்றது எதிர்பாராத அசம்பாவிதம்,

பாதிரியார் வருந்தினார். வளர்ப்பு மகளுக்காகத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை எண்ணி எண்ணி மனம் புழுங்கினார். பிரசவ வேதனையில் உயிர் துறந்த அவள், தனக்கு வாரிசாக ஒரு பெண் மகவைப் பாதிரியாருக்குப் பரிசாக்கி விட்டுச் சென்றிருந்தது அவருக்கு ஒரு விதத்தில் ஆறுதலை அளித்தது.

டாக்டர் பரமசிவமும் தன் மனைவியின் பால் கொண்டிருந்த அன்பு, பாசம், வேட்கை அனைத்தையும், இடம் மாற்றி அந்தக் குழந்தையின் பால் செலுத்துபவரானார். பரமசிவத்தின் நிலைக்கு வருந்திய பாதிரியார்; 'நகர மக்களிடையே வாழ்ந்து போலி நாகரிகத்தால் மனம் குலைந்து விடக்கூடாது' என்றும், கிராமத்திற்குச் சென்று ஏழை எளியவர்களுக்கு மருத்துவத் தொண்டாற்றி உள்ளத்தைப் புனிதமாக்கிக் கொண்டு வாழ்' என்றும் கூறி; பெரியசாமிக்குக் கடிதம் கொடுத்து இக் கிராமத்திற்கு அனுப்பி வைத்தார்.

★

டாக்டரின் வரலாற்றை கேட்டறிந்தபின் பொன்னியைப் பற்

றிப் பிரஸ்தாபிக்க மனமில்லாதவனாய் இருந்தேன். அவரே; 'தம்பி, காலையில் பொன்னிக்கு மருந்து கொண்டுபோனாய் அல்லவா, அவள் உடம்பு முன்னைக்கு இப்பொழுது தேவலையா என்ன? கேட்டுக் கொண்டு தானே வந்தாய்—' என்றார்.

"ஆமாம் சார், உடம்பு குணமாகிவிட்டதென்று அவளுடைய பேச்சிலிருந்தே தெரிந்து கொண்டேன். பொன்னிகூட உங்களை தனிமையில் பார்த்து ஏதோ பேச வேண்டுமென்றாள்—"

"என்னிடம் பேச என்ன இருக்கிறது? அவளுக்கு எங்காவது மாப்பிள்ளை பார்த்துக் கலியாணம் செய்துவிட வேண்டுமென்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். பெரியசாமி மிகவும் நல்லவர். என் பேச்சையும் தட்டமாட்டார் ஆனால், மாப்பிள்ளை கிடைப்பது தான் கஷ்டமாக இருக்கிறது—"

★

மறுநாள் காலையிலும் டாக்டருக்குப் பதிலாக நானே மருந்தைக் கொண்டு சென்றேன். பொன்னியின் அறையினுள் அவளுடைய தந்தையின் பேச்சுக் குரல் கேட்டது. அந்தப் பேச்சில், டாக்டர் பரமசிவத்தின் பெயரும் அடிபட்டதால், சற்று ஒதுங்கி நின்று கேட்டேன்.

பரமசிவத்தின் வாழ்க்கை வரலாற்றைத்தான் அவரும் கூறிக் கொண்டிருந்தார். டாக்டரை, தான் மறு மணம் செய்து கொள்ள விரும்புவதாக பொன்னி கூறினாள். 'அவர் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே என்ற ஐயம் பெரியசாமியை வருத்தியது போலும். அதைக்கூற முடியாமல், 'நீயே அவரிடம் பேசிக் கொள்ளம்மா' என்றார் அவர்.

இந்தச் சமயத்தில் நான் பிரவேசித்ததும், பொன்னி; "டாக்டர் வரவில்லையா...என்ன அவருக்கு?...என்ன அவருக்கு?... என்னைப்பற்றி ஏதேனும் சொன்னாரா?..." என்று தடுமாறிக் கொண்டே வினவினாள்.

கலவரம் அடைந்த பொன்னிக்கு ஆறுதல் கூற முடியாதவனாய் தயக்கத்துடன்; 'உனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்." என்றேன். என்னுடைய பதில் என்ன பாடுபடுத்திற்றோ தெரியவில்லை. படுக்கையில் உட்கார்ந்திருந்த அவள், மயக்கமுற்றுத் திடீரெனக் கீழே சாய்ந்தாள். அவள் நிலை என்னிலும் பெரியசாமியை அதிர்ச்சிக் குள்ளாக்கி விட்டது. 'தம்பி ஓட்டமாக ஓடி டாக்டரைக் கையோடு கூட்டி வா!' என்றார் அவர்.

நான் விரைந்தேன். டாக்டரின் வீடு திறந்துதான் இருந்தது. ஆனால், அவர் அங்கே காணப்படவில்லை. மேசையின் மீது ஒரு தந்தியும், ஒரு கடிதமும் இருந்தன:

தந்தி: குழந்தைக்கு ஜுரவேகம் அதிகரித்து வருகிறது. உடனே புறப்பட்டு வரவும்.

கடிதம்: தம்பிக்கு—நான் அவசரமாக புறப்பட்டுச் செல்கிறேன். காரணம் தந்தி மூலம் அறியவும். மீண்டும் வருகிற

போது பொன்னிக்கு மாப்பிள்ளை கிடைத்து விட்டதென்ற செய்தியைக் கொண்டு வருவேன்.

டாக்டரின் கடிதத்தைப் படிக்கக் கேட்டாள் பொன்னி. அவள் தேகத்தில் ஜுர வேகம் பழைய நிலைக்கு வளர்ந்து விட்டது. ‘டாக்டர் எப்பொழுது வருவார்? டாக்டர் எப்பொர்ழுது வருவார்? என்று ஓயாமல் பிதற்றிக் கொண்டிருந்தாள் அவள்.

அன்று முதல் எங்களூர் மக்களும், ‘டாக்டர் எப்பொழுது வருவார்? என்ற கேள்வியைத் தான் கேட்கத் தொடங்கி விட்டனர்!

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

ஏன் நீரிழிவு?

சைவ உணவாயினும் சரி, மாமிச உணவாயினும் சரி, மனிதன் எதை உண்டாலும் அவற்றிலிருந்து தேகம் பெற்றுக்கொள்வது புரதப் பொருள், கார்போஹைட்ரேட், கொழுப்பு என்ற மூன்று பொருள்கள் மட்டுந்தான்.

வாயிலும், வயிற்றிலும், சிறுகுடலிலும் சில நீர்ப் பொருள்களே இவற்றைத் தேகத்தில் சேரத் தகுதியான பொருள்களாக மாற்றுகின்றன. அரிசி, மற்ற தானியங்கள், இனிப்புப் பொருள்கள்—இவற்றிலுள்ள கார்போஹைட்ரேட் குடலில் சேர்ந்து சர்க்கரையாக மாறி இந்தச் சர்க்கரை பொருளாக ரத்தத்துடன் கலக்கிறது.

இப்படி ஆகாரம் மூலம் ரத்தத்தில் சேரும் சர்க்கரைச் சத்தின் அளவு கூடவோ, குறையாமலோ இருப்பதுதான் மனிதன் ஆரோக்கியத்தின் அறிகுறியாகும், தேகத்தின் அங்கங்கள் ஒழுங்காக வேலை செய்ய சக்தி பெருவதற்குத் தேவையான சர்க்கரைச் சத்து, ஈரலில் சேர்க்கவேண்டிய சர்க்கரைச் சத்து, தசைகளுக்கு வேண்டிய சர்க்கரைச் சத்து இவை யாவும் போக எஞ்சியுள்ள சர்க்கரைச் சத்தே ரத்தத்துடன் கலக்கிறது. தினந்தோறும் தேகத்தில் சேரும் எட்டு அவுன்ஸ் சர்க்கரைச் சத்தில் ஒரு தேக்கரண்டிதான் ரத்தத்தில் சேருகிறது. இந்தத் தேக்கரண்டிச் சர்க்கரைச் சத்து ரத்தத்தில் அதிகமாகாமலிருப்பதற்குக் காரணம். வயிற்றைச் சேர்ந்த ஒரு உறுப்பிலிருந்து சுரக்கும் 'இன்சுலின்' என்ற நீர்தான். இந்த நீர் ஓய்வேயின்றி சதா ஊறிக்கொண்டு சர்க்கரைச் சத்தை ரத்தத்திலும் தசைகளிலும் கலக்கச் செய்து தேகத்திற்கு ஆரோக்கியத்தை யளிக்கிறது.

சில விஷப் பொருள்கள் மேற்கூறிய உறுப்பிலுள்ள சில ஜீவ அணுக்களைப் பாதிப்பதனால் இந்த உறுப்பில் ஊறும் 'இன்சுலி'னும் கெட்டுப்போகிறது. இப்படி 'இன்சுலின்' சுரப்பு நின்று போவதால் தான் நீரிழிவு நோய் மனிதனைப் பாதிககிறது. இவர்களுக்கு 'இன்சுலினை' இன்ஜெக்ஷன் செய்வதால் ரத்தத்தில் சேரும் சர்க்கரைச் சத்தை மிதப்படுத்தி தேக நலம் கெடாமல் பாதுகாக்கலாம்.

மனிதன் தேகத்தில் 'இன்சுலின்' சுரப்பு நின்று போவதன் காரணத்தைப் பற்றி ஒன்றும் திட்டமாய்க் கூறமுடியாவிடினும் நீரிழிவால் பாதிக்கப்பட்ட தேகத்தில் 'இன்சுலின்' சுரப்பு நின்றுவிட்டதென்று திட்டமாய்க் கூறலாம்.

நீரிழிவு என்பது மனிதனை மெள்ள மெள்ள பாதிக்கும் ஒரு நோயாகும். வயிறு நிறைய சாப்பிட்ட பிறகு சிறுநீரைச் சோதித்து அதில் அதிகப்படியான சர்க்கரைச் சத்து இருப்பதாக வெளிப்படும் பொழுது தான் ஒரு மனிதன் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளான் என்பது தெரியவரும். உத்தியோகத்தையும், இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்வதையும் ஒட்டிய வைத்திய சோதனையில் அத்தியாவசியமாக ஏற்படும் சிறுநீர் பரீக்ஷையின்போது தான் திட ஆரோக்கியம் பெற்றவர் என்று பெருமிதங் கொள்பவர் கூட நீரிழிவால் பாதிக்கப்பட்டவரென்பது வெளியாகிறது.

'இன்சுலின்' சுரப்பு நின்று போவதால் ரத்தத்தில் சர்க்கரைச் சத்து சேருவது நின்று போகிறது. இப்படி சர்க்கரைச் சத்து கிடைக்காமற் போகும்போது தேகத்திலுள்ள சில மென்மையான உறுப்புகள் சர்க்கரைச் சத்தை வேறு வழிகளில் பெற முயற்சிக்கின்றன. அப்பொழுது தான் பலவீனம், நரம்புத் தளர்ச்சி முதலியன ஏற்படுகின்றன. தேகத்திலுள்ள நீர் பெரும்பாலும் சர்க்கரைச் சத்துடன் சிறுநீர் ரூபமாக வெளிப்படுவதால் மனிதனுக்குத் தாகம் உண்டாகிறது. எவ்வளவு உணவை உட்கொண்டாலும் பலவீனம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஊளைச் சதை தேகம் படைத்தவர்கள் நீரிழிவால் பாதிக்கப்படுகிறது சகஜம்.

இதைத் தவிர எவராவது இந்த நோயால் பாதிக்கப்பட்டால் அவரது வம்ச பரம்பரையும் இந்த நோய்க்கு ஆளாவதுமுண்டு. ஆகையால் இம்மாதிரி மனிதர்கள் ஆறு மாதத்திற் கொரு தடவையாவது தங்கள் உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். சிறு நீரில் அதிகப்படியாக சர்க்கரைச் சத்து இருப்பதாகச் சந்தேகம் ஏற்படின் 'இன்சுலின்' இன்ஜெக்ஷன் செய்து கொள்ளவேண்டும். ஆகாரத்தையும் தகுந்தவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். பருமனையும் குறைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். திறந்த வெளியிலேயே கூடிய மட்டும் அதிக நேரஞ் செலவிட வேண்டும். தேகப்பயிற்சி செய்து நோய்களை விரட்டவேண்டும்.

இவ்வாறு தேகத்தை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டால் ரத்தக் குழாய்களுக்கேற்படும் கோளாறுகள், நரம்புக் கோளாறுகள், மயக்கம் போன்ற நீரிழிவால் ஏற்படும் உபாதைகளையும் தவிர்க்கலாம். இம்மாதிரி உஷாராயிருப்பது சற்று சிரமம்தான். ஆனால் நீரிழிவை முளையிலேயே கிள்ளி எறிவதாலுள்ள நன்மைகளைக் கருதும்பொழுது இந்தச் சிரமமெல்லாம் ஒரு பொருட்டாகாது.

—From talk by Dr. B. B. Yodh Over AIR Bombay

Courtesy: B.U.J.

THE ARYAVAIDIA PHARMACY [C.B.E.] LTD

H. O. Trichy Road, Coimbatore.

(*Phone No.* **108**)

Branch :—

140, Bazaar Road, Rayapettah Madras-14.

(*Phone No*. **85752**)

Approach for effective and excellent Ayurvedic medicines and treatment

Special treatments like Dhara, Pizhichil etc., undertaken.

Consulting Physician :—

Arya Vaidyan

P. V. RAGHAVA VARIER



ராஜ ஜகத்வீர ராம வெங்கடேசுவர எட்டப்ப மகாராஜர்

★

சகாப்தம் 1821 கி. பி. 1899 விகாரி ஸ்ரீ மார்கழி மீ ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தில் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டார். இவ்வரசர் ஆங்கிலம், தெலுங்கு, தமிழ் முதலியவற்றில நல்ல ஞானமும், வீணை வாசிப்பதில் திறமையும், கழுகுமலைக் கந்தனிடம் பக்தியும், தம்மை அணுகும் அறிவாளிகளுக்கு ஆதரவு அளிக்கும் தன்மையும் மகா சாந்த குணத்தையும் உடையவர். இவர் மனுநீதி தவறாமல் அரசு புரிந்து வருகையில், கழுகுமலை ஸ்ரீ கந்தப் பெருமானின் உத்ஸவ மூர்த்திக்கு சுமார் ரூ.12,000 செலவில் தங்க கவசமும், ரூ.10000 பெறுமானமுள்ள வெள்ளி "கைலாஸ" வாகனமும் செய்து ஸமர்ப்பித்ததுடன் தமிழில் கமாஸ் ராகத்தில் "முருகா தருகிலையா" என்ற கிருதியையும், பைரவி ராகத்தில் "வாவா வாநீ வள்ளி மணாளா" என்ற கிருதியையும் இயற்றியுள்ளார்.

சுமார் கி. பி. 1885 முதல் ஹிந்து ஸங்கீதத்தை ஒரு பாஷையைப் போல் வித்வான்கள் கண்ணால் பார்த்துப் பாடும்படி செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயத்துடன், சின்னஸ்வாமி முதலியார் (M.A), பாலாஜிபேட்டை கிருஷ்ண பாகவதரிடம் 800 தியாகராஜ கீர்த்தனைகளை தாமே (Staff) நொடேஷனில் எழுதிய 40 கீர்த்தனங்கள் வரை அச்சிட்டது மன்றி சில சில்லறை கீர்த்தனங்களை அவரவர்கள் கூறிய லக்ஷணங்களுடன் எழுதி மிகுந்த செலவு செய்து அச்சிட்டார். பிறகு என்னைப் பற்றிக் கேள்வியுற்று, வரவழைத்து, வேங்கடமகி ஸம்பிரதாயத்திலுள்ள ராகாங்க, உபாங்க, பாஷாங்க கீதங்களையும், தீக்ஷிதரின் கீர்த்தனங்களையும் (Staff) நொடேஷனில் எழுதி அச்சிடவேண்டுமென்று கூறினார். கமகங்களின் ஸ்வரூபம் தெரியாமல் கீர்த்தனங்கள் முதலியவற்றை எப்படிப் பாடுவது என்று நான் கூறியது முதல் நான்கு வருஷ காலம் என்னிடமிருந்து கமக ஸ்வரூபங்களை லக்ஷ்ய லக்ஷணங்களுடன் நன்றாக அறிந்து கொண்டு கமகங்களுக்கு அடையாளங்கள் ஏற்படுத்தி வருகையில் இவருக்கு ராஜ பிளவையும் கண் உபத்ரவமும் உண்டாயின. அப்பொழுது நான் எட்டயபுரத்துக்கு வந்த பிறகு சில நாட்களுக்குப் பின் சின்னஸ்வாமி முதலியார் அங்கு

வந்து மகாராஜரைப் பார்த்து நான் எடுத்த காரியத்தை தெலுங்கு பாஷையிலாவது பூர்த்தி செய்ய வேண்டுமென்று கோரியதுடன், இந்த மகாராஜரின் சிறிய தந்தையாரும், தமிழில் ஐம்பெருங் காப்பியங்களும் ஐந்திலக்கணமும் அறிந்த வித்வானும் ஸங்கீத ஸாஹித்ய ரஸிகரும், ஏழைகட்கும் எளியவர்கட்கும் வள்ளலாக விளங்கியவருமான வெங்கடேசுவர எட்ட பாண்டியரைக் கண்டு தம்முடைய கோரிக்கையைத் தெரிவித்துவேண்டினர். சிறிய தந்தையார் மகாராஜரிடம் தெரிவித்த உடனேயே தெலுங்கு அக்ஷரங்களை வரவழைத்து இந்த "ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்சினி"யை அச்சிட உத்திரவிட்டதும் இந்த நூல் முடியும் வரை சுமார் ரூ. 10,000 செலவிட்டனர். 250 வருடங்களுக்கு முன்பிருந்து இன்றுவரையில் வாழ்ந்து வந்த வாக்கேயகாரர்களின் ஸங்கீத ஸாஹித்தியங்கள் நசிக்காமல் சந்திர ஸூர்யர் உள்ளவரை பிரகாசிக்குமாறும், இனி தோன்றப்போகும் வாக்கேயகாரர்கள் தம்முடைய ஸாஹித்யங்களை இப் புத்தகத்தைப் போலவே, பார்த்தவுடனேயே ஞானஸ்தர்கள் அறிந்து கொள்ளும்படி வழியை ஸ்தாபித்த மஹானுபாவராகிய இம் மகாராஜரை இந்தபிரதர்சினியைப் பார்க்கும் ஸகல பண்டிதர்களும் புகழ்ந்து, புத்ர, பௌத்ர, தீர்க்காயுசு, ஆரோக்கியம் ஆகியவை வளருமாறு வாழ்த்துவார்களாக!

இந்த ராஜ ஜகத்வீர ராம வெங்கடேசுவர எட்டப்ப மகாராஜர் ஸமஸ்தானபள்ளியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கையில், இந்தியா சக்ரவர்த்தியாகிய ஏழாம் எட்வர்டின் முடிசூட்டு விழாவைக் கொண்டாடுவதற்காக டெல்லி தர்பாருக்கு வரவேண்டுமென்று கவர்ன்மெண்டாரிடமிருந்து அழைப்பு வந்தது. உடனே 1903 ஆம் ஜனவரி மீ 1உ நடந்த விழாவிற்கு மகாராஜர் டெல்லி சென்ற சமயம் அவருடைய உத்தரவின்படி எட்டயபுரத்தில் ராஜவம்சத்தினர் பட்டாபிஷேக விழாவைக் கொண்டாடி, அப் பட்டாபிஷேக தின ஞாபகம் சாச்வதமாக இருக்கும் பொருட்டு பள்ளியில் மெட்ரிகுலேஷன் வகுப்பு ஏற்படுத்தி அபிவிருத்தி செய்தனர். பள்ளிக்கு எதிரில் உள்ள பந்தலில் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்தமாக Victoria Memorial Athenaeum என்ற மண்டபம் ஏற்படுத்தப்பட்டது. பிறகு சக்ரவர்த்தியின் பட்டாபிஷேக தர்பாருக்குச் சென்று வந்த ஞாபகார்த்தமாக பள்ளியில் உள்ள பெரிய ஹால் ஒன்றுக்கு Coronation Hall என்று பெயரிடப்பட்டது. அதில் சக்கரவர்த்தி, சக்ரவர்த்தினி, இதர அரசர்கள் முதலியவர்களின் படங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்டன. இந்த ஹாலிலேயே மாணவர்களின் உபயோகத்திற்காக புத்தகசாலை யொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு Edward VII Alexandra Library என்று பெயர்.

விஞ்ஞானம் முதலிய பாடங்கள் போதிப்பதற்கு வேண்டிய சாதனங்களை சேகரித்துக்கொண்டு, மகாராஜரின் உத்தரவு பிரகாரம் Recognition கோரி அரசாங்கத்தாருக்கு விண்ணப்பஞ் செய்து

கொண்ட உடனேயே சாசுவதமாக பள்ளியை ஒப்புக்கொண்டு அரசாங்கம் உத்தரவிட்டது. அவ்வருஷமே 10மாணவர்கள்மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கும, 15 பேர் 'லோயர் ஸெகண்டரி' பரீக்ஷைக்கும் ஆஜரானார்கள். இத்துடன் இவ்வூரிலுள்ள சத்திரத்தில் ஏழை மாணவர்களுக்கு உணவு முதலிய வசதிகளைச் செய்து கொடுத்து தர்மத்தை நடத்தி வருகிறார். இதைத் தவிர ஸ்கூலை அநேக விதத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்கிற நோக்கத்துடன் Cricket, Tennis, Football முதலிய மேனாட்டு விளையாட்டுகள் ஆடும் பொருட்டு ஸ்கூலின் வடபாகத்தில் கோவில்பட்டி போகும் ரஸ்தா வரையிலுள்ள நிலத்தை பள்ளிக்கூடத்தோடு சேர்த்து, அங்கு வெளியூரிலிருந்து வரும் பிள்ளைகளின் உபயோகத்திற்காக Hostel Accommodation முதலியவை அமைக்க முயற்சித்து வருகிறார். வர வர ஸ்கூல் அபிவிருத்தியடைந்து மகாராஜருக்குப் பல விதத்திலும் புகழைச் சம்பாதித்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இப்படிச் செய்வதற்காக, முதலிலிருந்தே அந்த ஜில்லாவில் மிக்க பிரசித்தி யடைந்திருந்த (Rev. C. A. Margoschis) துரையவர்களுக்கு கடிதம் எழுதி, முயற்சி, தைர்யம், ஸத்ய வசனம், சாந்தம் முதலிய நற்குணங்களுடன் 20 வருடங்களுக்கு மேலாக பள்ளி கல்லூரி முதலிய ஸ்தாபனங்களின் அபிவிருத்திக்காக உழைத்துவரும் மகாராஜ ராஜ ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணய்யர் B.A. L.T., ஐ அனுப்பவேண்டுமென்று வேண்டவும் அவரும் அனுப்பி வைத்தார். இவரும் தகுந்த பிரயத்தனங்களைச் செய்து வருகிறார். மகாராஜர் வேத சாஸ்திர பாடசாலைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

மூலம் :—ஸ்ரீ ஸுப்பராமதீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல். தமிழாக்கம்: தி. ஸ்ரீ பார்த்தசாரதி.

(Est. 1902)
எங்கும் புகழ்பெற்ற
ஆரோக்கிய திவ்யாமிர்தம்
மூலவியாதி, 9-க்குப் மலச்சிக்கல், உஷ்ணமேகம்,
பித்தவாயுவிற்குப் சிறந்தது.
1 சேர் டின் (48 நாள் மருந்து) 3—6—0
Props : **G. ABRAHAM & SONS,**
G. S. Sadanam
Kundara P. O. T. C. State.
N. B. Wanted Agents in all places on decent commission

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

மேலும்

நஞ்சன்கூடு-பல்பொடி

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

"பொருளின் பொருள்"

ஜி. ராமகிருஷ்ணன்.

பேனு, பேப்பர் சகிதம் உட்கார்ந்து என்ன எழுதலாமென்று யோசித்தும் 'பொருள்' (subject) ஒன்றும் அகப்படவில்லை. மீண்டும் யோசனை செய்தேன். ஏன் "பொருள்" என்பதையே வைத்து ஒரு கட்டுரை எழுதினுல் என்ன என்று மின்வெட்டுப்போல் கற்பனை ஒன்று உதித்தது.

"பொருள்"—என் அகராதியின்படி பார்த்தால், கண்ணுல் காணப்படும் ஒரு திட வஸ்து, பதார்த்தம், அர்த்தம், செல்வம், திரவியம். திரவ வாயு பதார்த்தமும் சொல்லலாம்" என்று கண்டிருந்தது. 'பொருள்' என்ற பதத்திற்கு அர்த்தம் 'அர்த்தம்' என்றிருக்கிறதே என்று, 'அர்த்தம்' என்பதற்கு பொருள் என்னவென்றுல் 'பொருள்' என்றிருக்கிறது. இது என்ன விசித்திர அகராதியாயிருக்கிறதே யென்று ஆராய்ச்சியிலிறங்கினேன், தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு வித புருஷார்த்தங்களைத் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்கிருர்கள். அவற்றுள் இரண்டாவது ஸ்தானத்தை "அர்த்தம்—பொருள்" வகிக்கிறது. பொருளைப் பற்றி விவரமாகவும், விசேஷமாகவும் "பொருட்பாலில்" திருவள்ளுவர் இயற்றிய தமிழ் மறையாகிய திருக்குறளில் சொல்லியிருப்பதால் நான் அதைப்பற்றி மேலும் எழுதப் போவதில்லை, ஆனல் அவற்றில் வரும், கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்—மற்றீண்டு வரா நெறி, "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்—மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற குறட்பாக்களில் காணும் "மெய்ப்பொருளைப்" பற்றி ஆஸ்திக—நாஸ்திகவாதிகள் பலதரப்பட்ட வியாக்யானங்கள் செய்வதால் அதன் 'மெய்யான பொருளே' பலருக்குப் புரியாமல் போய்விடுகிறது.

என் நண்பர் ஒரு வேதாந்தி—அவர் என்னைக் கேட்டார். "பார்க்கக் கூடிய திட வஸ்துதான் 'பொருள்' என்பதாக உமது வியாக்யானமோ—நிழல், புகை, ஒளி—இவற்றையெல்லாம் எந்த வர்க்கப் பொருளில் சேர்ப்பீர்? காற்று கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன் மகத்தான சக்தியை உணருகிறோம். அது எந்தப் பொருளைச் சேர்ந்தது? "இத்தியாதி கேள்விகளைத் தொடுத்தார். அவர் கேட்பதில் அர்த்தமிருந்தாலும் நான் பொருட் படுத்தவில்லை. மேலும் அவர், "சாதாரண மனித சக்திக்குத் தெரியாத, உணரமுடியாத, எளிதில் புரியாத பொருளுமிருக்கிறது. அது என்ன உனக்குத் தெரியுமா" என்றுர். "மின்சார சக்தி"யைத்தான் குறிக்கிருர் என்று நினைத்தேன். அதுதான் 'பரம் பொருள்' என்றுர். "சாதாரண கண்களுக்குத் தெரியும் பொருளைத்தான் நம்பலாமென்று சில விஞ்ஞானிகள் சொல்லுகிருர்கள். "கண்ணுல் பார்ப்பதெல்லாம் பொய்—காணுத நிச்சயமானதொரு சக்தி வாய்ந்த பரம் பொருள்தான் உலகில் சத்தியமானதும், நித்தியமானதும்" என்பது மெய்ஞ்ஞானிகளின் கூற்று. கண்ணுக்குத் தெரிந்த பொருள் இருப்பது உண்மை. நம் கண்

ணுக்கு ஒரு பொருள் தெரியவில்லை என்றால் அது "இல்லை" என்று சொல்லக்கூடாது" என்பது சில தர்க்க சாஸ்திரிகளின் ஒருவித வாதம். சுருங்கக் கூறின், புறக்கண் கொண்டு பார்ப்பது விஞ்ஞானம், அகக்கண் கொண்டு மெய்ப் (பரம்) பொருளை ஆராய்ந்து அறிவது மெய்ஞ்ஞானம்; ஆராயாமல் 'இல்லை' என்று வாதிப்பது அஞ்ஞானம்" என்று ஒரு குட்டி உபன்யாசமே என் நண்பர் செய்து முடித்தார்.

ஜீவராசிகளுக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ, அதுபோல் தற்கால உலகில் மனித வாழ்வுக்குப் 'பொருள்' அத்தியாவசியமானது. அதைத்தான் வள்ளுவர் "அருளில்லார்க் கவ்வுலகமில்லை," என்கிறார். ஏழை வாழ்விலிருந்து அரசியல் சர்வதேசீய நிலைமை வரையிலும் பொருளாதாரம்தான் ஜீவாதாரமாக சமஸ்தமான விவகாரங்களிலும் அடிபடுவதைப் பார்க்கிறோம். பொய்யா மொழிப் புலவர் தன் அருள் பலத்தால் பரமசிவன் மீது கவி பாடி தன் பொருளாசைப் பேய்ப் பிடித்த மனைவிக்குப் "பொருட் செல்வ"த்தை மழைபோல் தருவித்த கதையை நாமறிவோம். கலிகாலத்தில் "கைப்பொருளன்னில் கடைப்பொருளறிது" என்பது "உள்ளங்கை வெள்ளிப் பணம்" போல் தெரிந்த விஷயம். "பொங்கும் கடல் சூழுலகில் பொருள் தேடி புதைத்து வைத்து——" என்று 'மூசிறி' பாடிய அந்தப் பாட்டைக் கேட்டிராத கர்நாடக சங்கீதப் பிரியர்கள் இருக்க முடியாது. அதேபோல் "பொருளே இல்லார்க்குத் தொல்லையாம்——இனி வாழ்வே இல்லையா——" என்ற சினிமாப் பாட்டைக் கேட்காத தமிழ் சினிமா ரஸிகர்களும் இருப்பது அபூர்வம். பொருள் அதிகமாயிருந்தாலும் இந்த நாளில் தொல்லை. இல்லாமலிருந்தாலும் தொல்லைக்கு எல்லை இல்லை! அதாவது பொருளற்றவன் வாழ்வு இருள் என்பதில் சந்தேகமே இல்லை. பெருமையொடு புகழ் வேண்டிற் பொருள் வேண்டும்——" என்று சின்மய தீபிகையில் குறிப்பிடவில்லையா!

ஒரு மொழிக்கு வார்த்தை உடலானால், அந்த வார்த்தைக்குப் பொருள் உயிராகும். அதைத்தான் மஹா கவி காளிதாசன் வாக்கையும் (வார்த்தையையும்) அர்த்தத்தையும், பார்வதி பரமேச்வரனின் சேர்க்கைக்கு ஒப்பிடுகிறார். பொருள்—சக்தியால் இயங்குவதை (Matter & Force) சக்தி—சிவனுக்கு ஒப்பிடுகிறார்கள் சில விஞ்ஞான—தத்வ நிபுணர்கள்.

"பொருளின்" உட்கருத்தை உருவகப்படுத்தி ஏராளமான பொருட் செலவில் "பொருள் காட்சிசாலை" (Exhibition) வைப்பதையும் பார்க்கிறோம்.

இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போது ஒரு புதிய மனிதர் கையில் ஒரு தோல் பையுடன் வந்து அதிலிருந்து 40 பக்கம் நோட்டு, ஒரு டிக்கெட் புஸ்தகம், ஒரு பென்ஸில், சில நோட்டீஸுகள் இவற்றை எடுத்துக்கொண்டு எனக்கு ஒரு கும்பிடு போட்டு "நமஸ்காரம்—ஹி—ஹி—ஹி—நீங்கள்தான் இந்த வீட்டுக்காரரா—" என்றார்.

ஆமாம்—என்ன வேணும்'—நீங்கள் யார்—"

"நான்தான் இந்தக் 'கருணாநிதி' வாலிபர் குழாமின் உபதலைவர். ஏழைகள் துயர நிவாரண நிதிக்காக நம்ப மாஜி பேபி—இப்போது குமாரி

—வருங்கால ஸ்ரீமதி 'லதா' நாட்டியம் ஆடுகிறாள். அதற்காக கொஞ்சம் சிரமத்தைப் 'பொருட்' படுத்தாமல் "பொருளுதவி" எதேனும்—" என்று ஆரம்பித்தார்.

ஏனையா—இதுமாதிரி எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர். முதலில் ஏழை துயர நிவாரணம் செய்வதற்குமுன், எழுத்தாளனான என் துயரத்தை நிவாரணம் செய்ய எனக்குப் பொருளுதவி செய்யும்—" என்றேன். அருகிலிருந்த என் நண்பர் இடைமறித்து "தியாகய்யர்வாள் என்ன சொன்னார் தெரியுமோன்னோ— "நிதி சால சுகமா—ராமுனி—சந்நிதி சேவா சுகமா—" கேவலம் இந்தப் பொருளாகப்பட்ட 'நிதி'யால் என்னடா சுகம்? ராமன் சந்நிதியில் சேவை செய்வதுதான் பரம சுகம்?" என்றார். அதனால் ஸ்வாமி! நீ இங்கிருந்து எழுவாய்—இருந்து பயனில்லை—பொருளை எதிர்பார்த்துச் செய்யப்படும் பொருள் யாது—?" என்று அவரைக் கிளப்பி விட்டு என்னிடம் என் நண்பர் "இப்போதெல்லாம் இந்த 'நிதி'யின் பெயரால் நடக்கும் 'சதி' அனேகம். சமூகத்தின் 'விதி' இந்தக் 'கதி'க்கு வந்துவிட்டது. நிதியின் பெயரால் ஏராளமான பொருள்களைச் சம்பாதித்து நாட்டிய நாடக காரர்களும் கொண்டு போன பிறகு சங்க நிர்வாகச் செலவுகளெல்லாம் போய் இவர்கள் ஏழைகளின் துயரம் துடைக்க எவ்வளவு செலவு செய்துவிடப் போகிறார்கள்? இதையெல்லாம் அந்தக் கருணாநிதிதான் கிருபாநிதியாக இருந்து இவரைப் போலவருக்கு தயாநிதியாகி 'சந்நிதி தந்தருள வேண்டும்' என்று உண்மையை விளக்கினார். இந்த ரீதியில் நான் எவ்வளவோ எழுதினாலும் நீங்கள் வாசிப்பதற்கு நேரத்தைப் பொருட்படுதத மாட்டீர்கள் என்றாலும், இந்தக் கட்டுரைப் 'பொருளை,' 'பொருள்' கட்டுரையை ஆசிரியர் அங்கீகரித்துப் 'பொருளுதவி' செய்பவேண்டுமே---அந்தப் பொருளாசைக்காக நிறுத்திக் கொள்ளுகிறேன். பொருள் வாழ்க! எங்கும் நிலவுக!

M. E. T. A.

Name to remember for

Electrical Installations of every description and Radio Servicing Charges Moderate

Get the Best

Buy from :—

Madras Electric Trades & Agencies

Engineers, Contractors & Dealers

80/3, Lloyds Road, Gopalapuram, Madras-6.

Prop. K. M. ABRAHAM

மாணவர்களுக்கு அழகு......
மடமை!

★

நம் நாட்டுக் கல்லூரி மாணவர்கள் எதற்குப் பேர் போனவர்கள்?

கல்லூரி வகுப்புகளுக்குக் கூடுமான வரையிலும் செல்லாமலிருப்பதற்கும்.

அப்படி ஒரு வேளை சென்றாலும் வகுப்பில் அமளி துமளி செய்வதற்கும்;

அறிவூட்டும் சாதனங்களை வெறுப்பதற்கும்,

வகுப்புப் பாடங்களை அன்றாடம் படிக்காமல் பரீக்ஷைக்குச் சில தினங்கள் முன்பு பரீக்ஷைக்கு வினாக்கள் வரக்கூடிய பாடங்களை மட்டும் படிப்பதற்கும்,

குறிப்பிட்டுள்ள பாடப்புத்தகங்களைப் படிக்காமல் 'நோட்ஸ்'களை (குறிப்புப் புத்தகங்களை) மட்டும் மனப்பாடம் செய்வதற்கும் தான்!

மேற்கூறிய குணாதிசயங்கள் முழுவதும் நிறையப் பெற்றவர்களே மாணவர் பிரபஞ்சத்தில் வீரர்களாய் விளங்க முடியும். பாடங்களை நன்கு கற்று தேர்ச்சி பெறுபவர்களை மாணவர் உலகம் பரிகாசம்தான் செய்கிறது! இவையெல்லாம் மாணவர் உலகத்தைப் பற்றி மிகைபடுத்திக் கூறியுள்ளதெனக் கருதுவது தவறு. கல்லூரிகளைப்பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு கீழ் விவரித்துள்ள சம்பவங்கள் வெகு சகஜமாயிருக்கும்.

ஆசிரியர் வகுப்புக்குள் நுழைகிறார். மாணவர் நிறைந்த வகுப்பில் சத்தமும் நிறைந்துள்ளது. மாணவர்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டுமிருக்கிற பரபரப்பில் ஆசிரியர் வந்ததை சில நிமிஷங்களுக்கு எவருமே கவனிக்கவில்லை. வகுப்புத் தரையில் ஆயிரக் கணக்கான காகித அம்புகள் நிறைந்திருக்கின்றன. இவை யாவும் இதற்கு முன்பு இதே வகுப்பை நடத்திய ஆசிரியர் மீது மாணவர்கள் தொடுத்த பாணங்சளாகும். தான் வகுப்பிற்குள் நுழைந்தாகிவிட்டதென்பது மாணவர்களுக்குத் தெரிந்தவுடன் தன் மீதும் இந்த பாணங்கள் மாணவர்கள் தொடுப்பார்களென்று ஆசிரியருக்கு நிச்சயம் தெரியும்.

ஆசிரியர் இளம் வயதுடையவரும் உலக அனுபவமில்லாதவருமாயிருந்தால், ஆசிரியர் மாணவர்கள் விவேகிகள் என்ற தவறான அபிப்பிராயங் கொண்டவருமாயிருந்தால் அவருக்குக் கிடைக்கும் சன்மானம் கட்டிடத்தையே இடிப்பது போன்றதும் மற்ற வகுப்புகளுக்கு தொந்தரவும், குழப்பமும் விளைவிக்கக்கூடியதான ஆர்ப்பாட்டமும், முழக்கமும் தான். ஆசிரியர் மிகக் கடுமையானவரும், மாணவர் ஒழுங்கீனத்திற்கு உடனடித் தண்டனையளிக்கும் சுபாவம் கொண்டவருமானால் இவர் கூறுவதை எவரும் சட்டை செய்ய மாட்டார்கள்.

வகுப்பில் அமளியும், ஆர்ப்பாட்டமும் புரியும் மாணவர்கள் புத்தகப்

படிப்பைவிட வகுப்புப் பாடங்களுக்குப் புறம்பான விஷயங்களில் அக்கறை கொள்பவர்கள் அல்ல.

வகுப்புப் பாடங்களைப் படிக்காமல் வருஷத்திற்கொரு முறைகூட வகுப்பில் தலை காட்டாமல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் 'கிரிக்கட்' கால் பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் தேர்ச்சி அடைகிறார்களா? அருகேயுள்ள சிற்றுண்டிச் சாலைகளுக்குச் சென்று தேநீர் அருந்துதல், தெருக்கோடியில் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டு தொல்லை விளைவிக்கும் குறும்புகளைப் புரிதல்—இவைதான் பெரும்பாலான மாணவர்கள் ஈடுபடும் புறம்பான வேலைகள். உண்மையாகவே சகல விளையாட்டுகளிலும் ஈடுபட்டு நன்மையடையும் மாணவர்கள் மிகவும் சொற்பம்.

சங்கங்கள் இல்லாத கல்லூரிகளே கிடையாது. இலக்கிய சங்கங்கள், பொருளாதாரக் கழகங்கள், முதலியவற்றைக் கல்லூரிகளில் அமைப்பது, பிரமுகர்களின் பிரசங்கங்கள், விவாதங்கள் மூலம் மாணவர்கள், அறிவு வளர்ச்சி பெறுவதற்காகவே நடைமுறையில் கல்லூரி சங்கங்கள் பெரும்பாலும் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பவை, சில சங்கங்கள் சில கல்லூரி ஆசிரியர்களின் முயற்சியால் மட்டுமே ஜீவனோடு இருக்கின்றன. 'பிக்னிக்', உல்லாச சுற்றுப் பிரயாணங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதே மற்றும் சில சங்கங்கங்களின் முக்கிய குறிக்கோள். விவாதங்கள், கூட்டங்கள் முதலியவற்றிற்குத் தவறாமல் விஜயம் செய்யும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் சொற்பமே. கூட்டங்களில் சொற்பொழிவு செய்வதாக ஒப்புக்கொண்ட மாணவர்கள்கூட கூட்டங்களுக்கு வராமலிருந்து விடுவது மிகவும் சகஜம். அநேக கல்லூரி சங்கங்கள் வருஷத்திற் கொரு முறை கூடாமலிருப்பதுமுண்டு.

ஒவ்வொரு கல்லூரியிலும் தனித் தனியாகச் சங்கங்கள் இருப்பதைத் தவிர பல கல்லூரிகளில் இணைந்த சங்கங்களுமுண்டு. இம்மாதிரி சங்கங்களில்தான் மாணவர் ஆர்ப்பாட்டம் வேறு ரூபங்களில் தோன்றுகின்றன.

விருந்தாளிகளை ஒரு வார்த்தை கூட பேசவொட்டாமல் குழப்பம் விளைவிப்பதில் பிரத்தியேக தேர்ச்சி பெற்றவர்கள் வைத்தியக் கல்லூரி மாணவர்கள். விருந்தினர் சட்டசபை அங்கத்தினராயினும் சரி, கல்லூரி மாணவர்கள எவரையும் லக்ஷியம் செய்பவர்களல்ல. வந்தவரை மண்டையிலடித்து மட்டந் தட்டி வாயை மூடவைப்பதுதான் உத்தம மாணவனின் லக்ஷியம் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவர்கள் நம் நாட்டு கல்லூரி மாணவர்கள். கூட்டத்தில் தலைமை வகிக்கும் கல்லூரி தலைமை ஆசிரியர் மாணவர்களிடம் அமைதியாக இருக்க ஓயாமல் கேட்டுக் கொள்வதிலேயே நாவறண்டுவிடும்.

கலாச்சார விஷயங்களில் 'பற்றுதல்' அற்று இருப்பதும்; அடங்காப் பிடாரிகளாயிருப்பதும், ஆசிரியர்கள் போதனைகளைக் கவனிக்காமலிருப்பதும் தான் கல்லூரி மாணவர்களின் வாழ்க்கையில் முக்கிய அம்சங்கள்.

இன்றைய கல்வி முறைகளும் அவற்றின் பலனும் திருப்தியானவையென்று கல்வி அதிகாரிகளைத் தவிர மற்றெவரும் கூறமாட்டார்கள். நம் நாட்டுச் சர்வகலாசாலைப் பட்டங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மதிப்பு கிடையாது. நம் நாட்டுக் கல்வி முறைகளைப் பற்றிக் குறை கூறுபவர்களும் அவற்றைச் சீர்திருத்த வழி வகுப்பவர்களும் அநேகருண்டு. காந்திஜியால் நடத்தப்பட்ட சட்ட மறுப்பு இயக்கம்தான் மாணவர்

களிடையே அடங்காப் பிடாரித்தனம் வளர்ந்ததற்குக் காரணமென்று கருதுவோர்கள் பலர். இதிலும் உண்மையில்லாமலில்லை. ஆனல் மாணவர்களுக்கிடையே இன்றுள்ள நிலைமைக்கு முக்கிய காரணம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமுள்ள தொடர்பு, மாணவர்களின் தொகை அளவுக்கு மீறியிருப்பதால் அற்றுப் போய் விட்டதேதான். மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமென்ன? அறிவுப் பசி வாலிபர்களிடையே அதிகரித்துள்ளதா? அறிவுப்பசி அதிகரித்திருந்தால் அறிவு பெறுவதில் மாணவர்களுக்கு இவ்வளவு அசட்டையிருக்குமா? மாணவர்களின் மனப்பான்மைகளாலும், செய்கைகளாலும் விளைந்த விளைவே ஆசிரியர்களின் திறமைக்குறைவு.

வகுப்பில் நுழைந்தால் பாடங்களைக் கற்பிப்பதில் தன் முழுக்கவனத்தையும் செலுத்துவதற்குப் பதிலாக கால் பங்கு கவனம் பாடங்களுக்கும் முக்கால் பங்கு கவனம் குறும்பு புரியும் மாணவர்களைக் கண் காணிப்பதற்கும் செலுத்த நேரிடுகிறது. எந்த மாணவன் 'விசில்' அடிக்கிறன்? எவன் காலால் தாளம் போடுகிறன்? எவன் காகித அம்புகளை வீசுகிறன்? இவைதான் வகுப்பிலிருந்து வெளியே செல்லும் வரையிலும் ஆசிரியருக்கு தீராத தலைவலியாயிருக்கிறது! கரும்பலகையருகே சென்று சென்று மாணவர்களுக்குத் தன் முதுகுப்புறம் தெரியும்படியாய் நின்றுகொண்டு பாடங்களை எழுதுவதற்குக்கூட அஞ்சுகின்றனர் சில ஆசிரியர்கள். ஆசிரியருக்குத் தொல்லை தரும் தொந்தரவுகளும், ஆர்ப்பாட்டங்களும் மாணவர்களுக்குப் படிப்பதில் அக்கறையில்லை என்று அர்த்தம் அல்ல. ஆசிரியர்களின் போதனைகள் அவர்களுக்கு விளங்கவில்லை யென்பதே அர்த்தம்; ஆசிரியர்களின் போதனைகளை அவர்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்று அர்த்தம்; அழகான போதனைகளுக்கும் விளங்காத போதனைகளுக்கும் வித்தியாசம் சிறிதுமில்லை. எல்லாவற்றிற்கும் மாணவர்கள் அளிக்கும் ஆதரவு, ஆர்ப்பாட்டமும் சத்தமும்தான்! பெற்றோர்கள் பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை மாதாமாதம் செலுத்தி கல்லூரிக்கு வரும் மாணவர்களே இவ்வாறு நடந்து கொள்ளும் போது, தான் எதற்குப் பாடுபட்டு பாடங்களைப் புரிந்து கொண்டு கற்பிக்க வேண்டுமென்ற மனப்பான்மை ஆசிரியர்களுக்குத் தோன்றுவது சகஜம் தானே.

தன் அறிவை விருத்தி செய்து கொள்வதில் ஆசிரியர்களுக்கு அக்கறை குறைந்து போகிறது. ஜாம்பவான் காலத்து 'நோட்ஸ்'கள்தான் ஆசிரியருக்கு அடைக்கலமாகிறது.

புலமையில்லை; கற்பனையில்லை; ஆர்வமுமில்லை—இக்காலத்து ஆசிரியர்களுக்கு.

ஆசிரியர்கள் இவ்வாறு 'குட்டிச் சுவராய்'ப் போவதற்கு 'நோட்ஸ்' தயாரிப்பாளர்கள் துணை புரிகிறார்கள். மனிதனுக்கு எந்தத் தீய பொருள்கள் தேவையாயிருப்பினும் அவற்றையும் வழங்குவதற்கு வியாபாரிகள் உள்ளதுபோல் ஆசிரியர்

களும், மாணவர்களும் சீரழிய அருந்துணை புரியும் நோட்ஸ் களைத் தயாரிப்பவர்கள் ஏராளமாய் உள்ளார்கள். 'நோட்ஸ்' எழுதும் ஆசிரியர்கள் அநேகர் தங்கள் பெயர்கள் அச்சில் காண்பதற்காக மட்டுமே இவற்றை எழுதுகிறார் கள்!

மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் தொடர்பில்லை யெனக் கூறினேனல்லவா? இது நூற் றுக்கு நூறு உண்மையல்ல. சில ஆசிரியர்களுக்கும், சில மாணவர் களுக்கும் தொடர்புண்டு. அந்தத் தொடர்பு பரீக்ஷைகளுக்கு எந்தப் பாடங்களில் வினாக்கள் வெளிவரும், என்ற தகவல் மாணவர்கள் தெரிந்துக் கொள்வதற்கு மட்டுமே தான். வினாக்களுக்குத் தேவை யான பாடங்களை மட்டுமே மனப் பாடம் செய்துகொள்வதுதான் மாணவனின் புத்திசாலித்தனம்!

வினாக்களுக்குத் தேவையல்லாத பாடங்களைப் படிப்பது பாபச் செய லாகுமல்லவா? பரீக்ஷைகளில் தேர்ச்சி பெறத் தகுதியற்ற மாண வர்கள் பரிசோதகர்களின் தயவி னால் மட்டுமே வெற்றி பெறுவது இந்நாளில் சகஜம்தானே!

மாணவர்கள் பரீக்ஷைகளில் தேறுவதற்காகவே வினாக்களும் விடைகளும் தயாரித்து பணம் சம் பாதிக்கும் ஆசிரியர்களும் அநேக ருண்டு. பரீக்ஷை நடக்கும் ஹாலுக் குள் ஒரு சிறிய ஒலி பெருக்கியை எடுத்துச் சென்று அதன் மூலம் வெளியேயுள்ள நண்பர்களிட மிருந்து விடைகளைப் பெற்று வினாத் தாளுக்குப் பதில் எழுதும் மாணவர் களும் இந்நாட்டிலுண்டு.

கல்விக்கு, மதிப்பில்லா இந் நாட்டில், எந்த விதத்திலாவது ஒரு பட்டத்தைப் பெறுவதே மனிதன் லக்ஷியமாகக் கொண்ட இந் நாட்டில் இத் தீங்குகள் வளர்ந்தோங்குவதில் என்ன அதிசயம்?

இன்றைய சமுதாயத்தின் தேவை கள் இரண்டே. குமாஸ்தா வேலைக்கு எண்ணற்ற ஆட்களைத் தயாரிக்க வேண்டும்! கல்லூரி பயிற்சி பெற்ற ஆட்கள் வேலைக்குத் தகுதியற்றவர்களாயிருப்பதால் புத் தகப் படிப்பைக் குறைத்து அனுப வக் கல்வியை அதிகமாக அளிக்க வேண்டும். பட்டதாரிகளைச் சமுதா யம் அதிகமாக விரும்புவதால் கல்வி யின் தரத்தை குறைத்து பட்டதாரி களின் எண்ணிக்கையை சர்வ கலாசாலைகள் அதிகரிக்கின்றன.

கல்வி மனிதனுக்கு விவேகமளிக் கிறது; உண்மை நாகரிகத்தை யளிக் கிறது; பாசாங்கு, முரட்டுத்தனம், அற்பத்தனம் போன்ற துர்க்குணங் களை விரட்டுவதற்கு மனிதனுக்கு உதவுகிறது. இவ்வளவு புனிதமான கல்வியைக் கற்பிப்பதற்காக அமைத் துள்ள ஸ்தாபனங்கள், போலி சரக் குகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை களாக மாறிவிட்டன.

தாங்கள் பட்டம் பெற்றுள்ள துறைகளைப்பற்றிச் சிறிதுகூட ஞானமில்லாத பட்டதாரிகள்தான் இன்றைய கல்லூரிகளிலிருந்து வெளி வருகின்றனர். கல்லூரிப் படிப்பில்லாதவர் மகான்களாகவும் அறிஞர்களாகவும் தோன்றியுள் ளார்களென்று ஒரு சிலர் பேசுவ துண்டு. அப்படி தோன்றிய மகான் கள் கல்லூரி படிப்பும் பெற்றிருந் தால் அவர்கள் இன்னும் எவ்வளவு பெரிய மனிதர்களாய் இருந்திருப் பார்களென்பதை நாம் யோசிக்க வேண்டும். மேலும் மேதைகளுக் காக அமைக்கப்பட்ட ஸ்தாபனங் கள் அல்ல கல்லூரிகள். இந்திய சர்வ கலாசாலைகள், அரசியல், பொருளாதாரம், முதலிய சக்தி களால் என்று பாதிக்கபடாமலிருக் கிறதோ அன்றைக்குத்தான் அவை விவேகத்தை பரவும் ஸ்தாபனங் களாக விளங்கும். அன்றைக்குத் தான் கல்லூரிப் படிப்பிற்கு இன்றுள்ள சாபக்கேடுகள் மறையும்.

கல்லூரிப் படிப்பிறகு எவர் வேண்டுமென்றாலும் தகுந்தவர்களென்பதை நாம் மறந்துவிட வேண்டும். விரும்புவோர்களுக்கெல்லாம் கல்லூரியில் பிரவேசமளிப்பதனால்தான் கல்லூரிப் பயிற்சியின் தரம் குன்றிப் போகிறது. இன்று கல்லூரிகளை நிரப்பும் மாணவர்கள் உண்மை மாணவர்கள் அல்ல; இவர்கள் கல்வியில் ஆர்வமில்லாத சிருஷ்டிகள். இன்றைய பரீக்ஷா முறைகளை அறவே மாற்றி கல்வியில் ஆர்வங்கொண்ட மாணவர்களுக்கு மட்டுமே கல்லூரிகளில் பிரவேசிக்க அனுமதித்தால் இன்றைய பரிதாபகரமான கல்வி முறை சீர்திருத்த மடையும்.

பரிக்ஷா சஞ்சீவிகளான ‘நோட்ஸ்’ வியாபாரிகள், சோம்பேறித்தனங் கொண்ட ஆசிரியர்கள், ஊழலான பரிசோதகர்கள், கல்வி கற்க விருப்பமேயில்லாத மாணவ மாணவிகள் இவர்கள் யாவரும் மேற் கூறிய சீர்திருத்தங்களை கடுமையாக எதிர்ப்பார்கள். ஆனால் இவர்கள் யாவரையும் ஒழித்தால்தான் நம் நாட்டுக் கல்வியைக் காப்பாற்றலாம். நம் நாட்டுக் கல்வியைக் காப்பது நம் நாட்டு சர்வ கலாசாலைகளின் முக்கிய கடமையாகும்.

‘ஹானர்ஸ்’ பட்ட படிப்பை பிரத்தியேகப் படிப்பாக மாற்றுவது, ‘டிகிரி’ படிப்பை ஒரு வருஷம் குறைத்துப் பள்ளிப் படிப்பு முடியுங் காலத்தை ஒரு வருஷம் நீடிக்கச் செய்வது முதலியன வீடு பற்றி எரியும் போது வீட்டு மரச் சாமான்களை ‘ரிப்பேர்’ செய்வதற்குத்தான் ஒப்பிடலாம்.

இந்நாட்டுக் கல்லூரிகள் குட்டிச் சுவர்களாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆடம்பரங்களுக்கும், தோரணைகளுக்கும் குறைவொன்றுமில்லை. ஆசிரியர் பிரசங்கங்களுக்கு ஓய்ச்சல் ஒழிவில்லை. தேநீர் விருந்துகளும், கூட்டங்களுக்கும் குறைவில்லை. பரீக்ஷைகளும் பட்டமளிப்பு விழாக்களும் அனந்தம்.

பரஸ்பர புகழ்ச்சி மலிந்துவிட்டது. ஆனால் இவை யாவும் உண்மையில் செய்வதென்னவென்றால் புனிதமான கல்வியை சமாதிக்குள் அடக்கம் செய்வதேயாகும். அதிகாரிகளுக்குத் துணிவும், சிந்தனா சக்தியும், தெளிவான திட்டங்களை அமைக்கும் திறமையுமிருந்தால் நாம் சமாதிக்குள் அடைத்துக்கொண்டேயிருக்கும் கல்வியை விடுதலையாக்கி மனிதனுக்குப் பயனுறச் செய்யலாம்.

மேற்கூறிய சக்திகளை இன்றைய கல்வி அதிகாரிகள் பெறுவதற்கு ஆண்டவனே அருள் புரிய வேண்டும்.

—S. Ookerjee in *QUEST*, Bombay.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்

அசோகா உற்சாகம் தரும்

ஹிமாசலப் பிரதேச வாசிகள்

ஹிமாசலப் பிரதேச மக்களைப் பற்றி தென்னிந்தியாவில் அவ்வளவாகத் தெரியாது. இந்த மாகாணம் மிகப் புராதனமான தேவாலயங்களுக்கும் சிறப்புற்ற லளிதக் கலைகளுக்கும் பெயர் பெற்றது.

கிராமிய நடனம் ஹிமாசலப் பிரதேசவாசிகளின் விசேஷ அம்சம். இந்த நடனத்திற்குள்ள பக்க வாத்தியம் எவ்வளவு நீளமாயிருக்கிறது பாருங்கள்!

சங்கீதம் இம்மாகாணத்து மக்கள் பிறப்புடன் ஒட்டியது. இம்மாகாணத்தில் எங்கு சென்றாலும் இவர்களுடைய பிரத்தியேக



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட ஒரு தேவாலயம்.

மான கானத்தை கேட்கலாம். ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூட எப்போதும் கீதங்கள் பாடிக் கொண்டே செல்வார்கள்.

பெரும்பாலும் கானங்கள் சிவன், ராமன், புகழ் பற்றியும், ராதா கிருஷ்ண காதலைப் பற்றியுமே இருக்கும். தேவர்கள்மீதும் தேவிகள் மீதும் கீதங்கள் உண்டு.

இம் மாகாண மக்கள் நாட்டியத்திலும் பற்றுக்கொண்டவர்கள். தினந்தோறும் தங்கள் வீட்டு முற்றங்களிலேயே



புராதன பாணியில் ஆடையலங்காரம் கொண்ட நாட்டிய கோஷ்டி; இந்த நடனங்கள் ஓய்வின்றி நாள் முழுவதும் நடைபெறும்.

இவர்கள் நாட்டியமாடுவது வழக்கம். கிராம தேவதைகளை வணங்குவதும் நாட்டிய, சங்கீத சகிதம்தான். பாரத நாட்டியம் போன்று தனி நடனமும் கோஷ்டி நடனமும், உண்டு. இம்மாதிரி நடன கோஷ்டி ஒன்றுக்குச் சமீபத்தில் குடியரசு தினத்தன்று டெல்லியில் நடைபெற்ற நடனப் போட்டியில் பரிசு கிடைத்தது.

இங்குள்ள தேவாலயங்கள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சில தேவாலயங்கள் மரத்தாலேயே நிர்மாணிக்கப்பட்டவையாம். சிற்ப சாஸ்திரத்தில் கண்டுள்ள சில விசேஷ அம்சங்களை இங்குள்ள தேவாலய சிற்பங்களில் காணலாம்.

—Courtesy: *Spectator*

THE FAMOUS

AROGYA RAKSHAMIRTHAM MEDICINE

For impurities of Blood, general debility, piles of all kinds, Fistula, constipation, Gastric and Breathing troubles, Menstrual complaints, Karappans and other complaints of children etc.

N. B. **(Agency will be given on decent commission)**

Head Office Address

A. R. DEPOT

Prop : (M. PAPPACHAN)

Kundara P. O. T. C. STATE.

"ஞாயிற்றுக்கிழமை"

'கலாபாரதி'

★

ஞாயிற்றுக்கிழமை-பானுவுக்கு எவ்வளவு ராசியாக இருந்தது ஒருகாலத்தில்-பிறகு அதுஎவ்வளவுதிருவிளையாடல்கள் அவன் வாழ்வையே பாதிக்கும் வண்ணம் செய்துவிட்டது! அதன்னியில் அவன் அந்தக் கிழமையை வேண்டா வெறுப்பாக வெறுத்துத் தள்ளினாலும், அது அவனை விட்டகன்றதா? ஞாயிற்றுக்கிழமை அவன் வாழ்வில் இன்றியமையாததாகவும், மறக்க முடியாததாக வும் அவனோடு பிறந்து அவனுள் ஒன்றுகிவிட்டது.

ஞாயிற்றுக்கிழமையையும், தன் வாழ்வையும்—அதற்கும் தனக்கும் ஏற்பட்டுள்ள தெய்வீக பாந்தவ்யத்தையும் பற்றி சிறிது சிந்தனை செய்தான். கடந்தகால நிகழ்ச்சிகள் அவன் மனத்திரை யில் வட்டமிட்டன.

★

ஞாயிற்றுக்கிழமையில் பிறந்ததால்தான் அவனுக்கு 'பானு' என்று நாமகரணம் செய்யப்பட்டது. அவனுக்குப் பூனூல் கல்யா ணம் நிக்ழ்ந்ததும் ஞாயிற்றுக்கிழமைதான். அன்றொருநாள்— ஞாயிற்றுக்கிழமை தன் சொந்த கிராமத்துக்குப் போய்விட்டுக் கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தன் வீட்டிற்கு கையில் பையுடன் நடந்து போய்க்கொண்டிருந்தான். ஏற்கெனவே இருட் டிக் கொண்டிருந்த வானம் இடி மின்னல் முழக்கத்துடனும் பெரும் தூற்றலுடனும் பலத்த மழையைக் கொண்டுவிட்டது. வீதி வழியே பாதி நனைந்துகொண்டே போனவன் இரும்புக் கம்பியால் கிராதி போடப்பட்ட வீடு ஒன்றில் சற்று ஒதுங்கினான். பையி லிருந்த உலர்ந்தஉடைகளைத் தரித்துக்கொண்டு தலையையும் துண் டால் துடைத்துக்கொண்டான். மழை விடும் வழியாக இல்லை. அந்த வீட்டிலிருந்த யுவதி மின்சார விளக்கைப் போட்டு வாசற் பக்கம் வந்தவுடன் புதிய மனிதரைக் கண்டதும் சற்று மிரண்டாள். பிறகு அவனிடம் "எங்க அப்பாவைத் தேடிக்கொண்டு வந்திருக் கிறீர்களா? உட்காருங்கள். அவர் வெளியே போயிருக்கிறார், வரும் சமயம்தான்..." என்றாள் மரியாதையாக.

பானு சங்கோசத்துடன் "இல்லை. மழைக்காக சற்று ஒதுங்கி யிருக்கிறேன். மழை நின்றதும் போய்விடுவேன்..." என்றான்.

"நீங்கள் எந்தத் தெருவோ..."

"மேலக்காவேரி..."—இந்த ரீதியில் சம்பாஷணை தொடங்கி அவளது பெற்றோர்களும் அதில் கலந்துகொண்ட பின், அவன் அன்றிரவு சாப்பாட்டிற்கு அவர்கள் வீட்டு விருந்தாளியானுன். இது மாதிரி மழைக்கு ஒதுங்கியவன் மாப்பிள்ளையாக வரப்போகிருன் என்று தெரிந்தால் அவளுடைய தகப்பனர் மூன்று வருஷ காலமாக பெண்ணுக்குக் கலியாணம் செய்ய பெரு முயற்சி எடுத்திருக்கமாட்டார். பானுவுக்கும், மழைக்குத் தங்கிய மனையில் மனத்திற்கிசைந்த மனைவி கிடைத்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றதை மறந்துவிட முடியுமா? அந்த மழையும், அவன் காதல் உதித்த தினமான ஞாயிற்றுக்கிழமையும் அவன் வாழ்வு சகாப்தத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டதாகும். அவன் விருப்பப்படியே அவனுக்கு அதிருஷ்டகரமான அந்த ஞாயிற்றுக்கிழமையே விவாக தினமாயிற்று.

★

சென்னையிலே ரெயில்வே வேலையிலிருந்துகொண்டு தாம்பரத்தில் விமலாவுடன் ஜாகையில் புதுக்குடித்தனம் நடத்தினுன் பானு. தினம் காலையில் 8-45 மணிக்கு அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு ஓட்டமாக ஓடி மின்சார ரெயிலில் சென்னைக்குப் போய் வேலை பார்த்து மாலை வேலை.முடிந்த பின் பட்டினமெல்லாம் சுற்றி வீட்டுக்குத் திரும்பும்போது இரவு ஏழு மணியாகிவிடும். வீட்டுக்கு வந்ததும் சாப்பிட்டதும் "ரீடிங் ரூம்" போய்விட்டுப் படுக்கப் பத்து மணியாகிவிடும். வாரம் ஆறுநாள் முழுவதும் இயந்திரம்போல் இயங்கும் அவன் இதமாக ஓய்வு எடுத்து இனிமையாகப் பேச ஒரு ஞாயிற்றுக்கிழமை வாராதா என்று விமலாவின் இளம் உள்ளம் எண்ணி ஏங்கி எதிர்பார்ப்பது இயற்கைதானே. ஒரு ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மற்ருென்று வருவதற்குள் ஒரு யுகமாவது போலிருக்கும் விமலாவுக்கு. அத்தினம் வந்தாலோ ஒரு நொடியில் ஓடி விடுவது போன்ற பிரமை-சனிக்கிழமை வந்ததுமே எதற்கெடுத்தாலும் "நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை" என்று குதூகலத்துடன் சொல்லிக்கொண்டேயிருப்பாள். அவளை அவன் விளையாட்டாக "ஞாயிற்றுக்கிழமை பைத்தியம்" என்றுகூட கேலி செய்வான். அதற்கவள் "நான் உங்களை முதன் முதலாக சந்தித்த புனித நாள்...நாம் மணஞ்செய்துகொண்ட நன்னுள்...அதை எப்படி நான் மறப்பேன்... அதை விமரிசையாக ஒவ்வொரு வாரமும் கொண்டாட வேண்டாமா? அதுவுமன்னியில் நீங்கள் பிறந்த கிழமை—வாரத்தின் முதல் நாளாக உங்கள் பெயர் அமைந்திருக்கிறது...இத்தனை மகிமையும், விசேஷமும் கூடிய நாளல்லவா" என்று சொல்லுவாள்.

அவனைப் பொருத்தவரையில் ஞாயிற்றுக்கிழமை (அப்போதெல்லாம்) ஒரு இன்பநாள்—உல்லாசத்துக்கு உகந்த நாள்—சோம்பல் குடிகொண்ட நாள்—ஏன் அன்று—ஒரு வாரமாய் உழைத்த அலுப்பு தாங்காமல் சோம்பல் முறித்தவாறு சூரியன் கூட தாமதமாக உதிக்கிறதே!

ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த தம்பதிகள் சபாக் கச்சேரிகள், நாடகம், சினிமா, நாட்டியம் தவருமல் பார்க்கச் செல்வார்கள். நண்பர்களை அழைத்து வருவதும், அவர்கள் வீட்டிற்குப் போவதும் அன்றுதானே முடியும்!

நல்ல நாளும் ஞாயிற்றுக்கிழமையுமாக சீமந்தம் நடந்த பின் விமலா பிரஸவத்துக்காகப் பிறந்தகம் போனாள்.

★

அன்றொரு சனிக்கிழமை இரவு அவனுக்கு ஒரு தந்தி வந்தது. ''விமலா பிரஸவ வேதனையுடன் அபாயகரமாயிருக்கிருள்—புறப்பட்டு வரவும்'' என்றிருந்தது. அவனுக்கு இறக்கையிருந்தால் பறந்து போயிருப்பான்—அவ்வளவு பொறுமையில்லாமல் இரவு ரெயிலைப் பிடிப்பதற்குள் பதறிப்போனான்—அன்றுவரை இன்ப வாழ்வளித்த அவனுக்கே உகந்த அதிருஷ்டகரமான ஞாயிறு அன்று அப்படியா உதிக்க வேண்டும்?

கும்பகோணம் ஸ்டேஷனிலிறங்கியதும் விடியற்காலையில் காவிரியின் குளிர்ந்த காற்றுடன் லேசாகத் தூறிக்கொண்டிருந்தது சற்று பெரும் தூற்றலாக வலுத்தது. வீட்டையடைந்ததும் ஒரு உயிர் போய் இன்னொரு புது உயிர் நெளிந்து கொண்டிருந்ததைக் காண எப்படி சகிப்பான்? விமலா இறந்ததைப் பற்றிக் கூடப் பதருத அவன் மனத்தை, அவன் அவளுடன் தொடர்பு கொண்ட ஞாயிற்றுக்கிழமையும், மழையும் சேர்ந்துகொண்டு கதறக் கதற அடித்தது. புருஷனை இழந்த இளம் விதவைகூட அப்படிக் கீழே விழுந்து புரண்டு அழுதிருப்பாளா என்பதுகூட சந்தேகம்தான்—அவன் அப்படி உரக்கக் கத்தி அழுதான். அவன் அப்போது இருந்த நிலைமையில் ஈமங்சடங்குகள் நடக்கும்போது உடன்கட்டைகூட ஏறத் தயங்கமாட்டான் போலிருந்தது. விமலாவின் பெற்றோர்கள் மகளை இழந்த துக்கத்தைத் தாங்குவார்களா—அவனை சமாதானப்படுத்துவார்களா என்று தெரியவில்லை. அவள் சென்னையை விட்டுச் சென்ற பிறகு தன்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே—தான் அவளை உயிருடனே பார்க்க முடியவில்லையே என்று திருப்பித் திருப்பிச் சொன்னான்... இந்த மீளாத் துயரத்தை நினைக்க நினைக்க அவன் நெஞ்சு தாளவில்லை.

போதும் போதாதற்கு பிறந்த பிள்ளைக் குழந்தை தாயை உருட்டியதுமன்னியில் சகலவித தோஷங்களையும் கொண்டிருந்தது. அதற்கே ஆயுர்பாவமும், தேக சௌக்கியமும் பாதிக்கப்படுமென்றும், அதற்கு பரிகாரமாக 45 ஞாயிற்றுக்கிழமை சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டுமென்றும் ஜோஸ்யர்கள் சொன்னார்கள். விமலாவே போன பிறகு பானு அந்தக் குழந்தையைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. "அத்தனை தோஷங்களுடன் அது இருந்து இருப்பவர்களுக்கு இன்னும் ஆபத்து உண்டு பண்ணுவதைவிட போவதே மேல்" என்றுகூட எண்ணினான். அதுவும் அதிகக் கவலையை அவனுக்கு வைக்கப் பிரியப்படாமல் ஒரே கவலையாக ஒரு ஞாயிற்றுக்கிழமையாகப் பார்த்துத் தாயார் போன இடத்துக்குச் சென்றுவிட்டது.

★

மூன்று மாத ஓய்வுக்குப் பின் சென்னைக்கு வந்து வேலை ஒப்புக்கொண்டான் பானு. அவன் முகத்தைப் பார்த்தவர்கள் "பெண்டாட்டியைப் பறி கொடுத்தவன்" முகம் இப்படித்தான் இருக்குமென்று நேரிடையாகத் தெரிந்து கொண்டார்கள்.

அவன் சதா விமலாவையே நினைத்து உள்ளம் உருகி உடல் இளைத்துப் போனான். தம்பதிகளாகப் போகிறவர்களைப் பார்த்தால் தன்னுடைய பழைய நினைவுகள் வந்துவிடும். பெருமூச்சு விடுவான். கண்களில் நீர் சுரந்துவிடும். நண்பர்கள் சர்ய்ந்து கொண்டு அழ ஆரம்பித்து விடுவான். அவன் நண்பர்கள் அவனை எவ்வளவோ தேற்றிப் பார்த்தனர். "பெண் போல் இவ்வளவு கோழை மனத்தினனாக இருக்கிறாயே" என்று குத்திக் காட்டுவதுபோலும் சொல்லியும் அவனுக்கு ஒன்றும் படவில்லை. அவனது வெறித்த பார்வையும், உரக்கம் பிடித்த முகமும் பார்ப்பவர்களுக்கு அவன் எங்கேயாவது தற்கொலை செய்துகொண்டு விடப் போகிறானே—பைத்தியம் பிடித்துவிடப் போகிறதே என்று அஞ்சி அவனது மனோ நிலையை விளக்கி அவனது மாமனாருக்குக் கடிதம் எழுதி விட்டனர். அவரும் அடிக்கடி அவனைப் பார்க்க வந்து தேறுதல்கள்—ஆறுதல்கள் சொல்லி வந்தார்.

★

சில மாதங்களுக்குப் பிறகு பானுவின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் பரமேஸ்வரன் என்ற ஒரு ரிடயர்டு உத்தியோகஸ்தர் குடி வந்தார். அவர் நன்றாய்ப் படித்தறிந்த விவேகி. ஆத்மீகத் துறையில் அளவற்ற ஆர்வமுடையவர். சமஸ்கிருதமும், மேனாட்டு மத-மனோ தத்துவங்களும் அறிந்தவர். பானுவின்

சோக்க் கதையைக் கேட்டு தினமும் அவனுக்கு கிருஷ்ணபகவான் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்ததுபோல் சொல்லி அவன் மனதைத் திருப்பினர்.

பானுவுக்கு ஞாயிற்றுக்கிழமை என்ருல் ஒரே வெறுப்பு ஏற்பட்டது. அதை ஒரு சோக தினமாகக் கருதினன். ஒரு நாள் பரமேஸ்வரனிடமே அந்த தினத்தைப் பற்றித் தூற்றினன்.

"என்ன ஞாயிற்றுக்கிழமை ஸார்—ஒரே சூன்ய நாள்—கடை கிடையாது—கடைத்தெரு பக்கம் போனல் விளக்குகூட இல்லாமல் அழுது வடிகிறது—பாங்கி, போஸ்டாபீஸ் கிடையாது. சலூன் என்று சொல்லப்படும் 'ரீடிங் ரூமில்' போய் எல்லாப் பத்திரிகைகளையும் படித்து முடித்தால்கூட வரிசைக் கிரமப்படி நமது முறை வருவதற்கு பகல் 12 மணிக்கு மேலாகிவிடுகிறது. வீட்டிற்கு வந்தால் விருந்தாளிகள் வந்து விடுகின்றனர்.

கறி காய் மார்க்கெட்டுக்குப் போனல் கால் வைக்க இடமில்லாமல் ஒரே கூட்டம். நண்பர்கள் வீட்டிற்குச் சென்ருல் அவர்கள் இருப்பதில்லை. பகலில் சிறிது நேரம் படுத்தாவது தூங்கலாமென்ருல், பள்ளிக்கூடமில்லாததால் இந்தப் பசங்கள் படுத்துகிற பாடும், போடுகிற கூச்சலும் தாங்க முடியவில்லை. எல்லா நாளும் தான் சாயங்காலம் வெளியே கிளம்ப நேரமாகிறதே, அன்ருவது சீக்கிரம் 5 மணிக்குப் புறப்படலாமென்ருல், நமக்கு முன் ராகு காலம் வந்து நிற்கிறது. ஞாயிற்றுக்கிழமை ராகுகாலத்தைப் பற்றி அதிலே காரியம் தொடங்கிப் பார்த்தால் தெரியும். சினிமா-நாடகம்-ஓட்டல்களுக்குப் போனல் 'க்யூ' மயம். எனக்கு என்னவோ இந்த ஞாயிற்றுக்கிழமைதான் என் வாழ்வையே பாழடித்துவிட்டது..." என்று பிரசாரம் செய்யும் பிரசங்கிபோல் பேசியதைக் கேட்டு பரமேஸ்வரனே பிரமித்து விட்டார். அவன் இப்போது இந்த மட்டுமாவது கலகலவென்று பேசுகிருனே என்றிருந்தார்.

அவர் அவனிடம் சுருக்கமாக உபதேசம் செய்தார். "நீ எல்லாவற்றிலுமே ஒரு 'அதி' (extreme) ஆக இருப்பாய் போலிருக்கிறது. துக்கம் வந்தால் 'ஓஹோ...' என்று சோகப் பிரளயத்தில் மூழ்கித் தத்தளிக்கிருய். சந்தோஷம் வந்தால் 'ஆஹா...' என்று பூமிக்கும் ஆகாயத்துக்கும் குதிக்கிருய். ஞாயிற்றுக்கிழமையைப் பற்றி ஒரு காலத்திலே நீயும் உன் மனைவியும் ஒரேயடியாய்ப் புகழ்ந்ததைப் பற்றி நீயே சொல்லியிருக்கிருய். இப்போது ஒரேயடியாய்த் தூற்றுகிருய்...ஞாயிற்றுக்கிழமையாவது... நாளாவது..."நாளென் செயும்-வினைதான் என்செயும்-எனை நாடி வந்த கோள் என் செயும் குமரேசன்...எனக்கு முன்னே வந்து தோன்றிடினே" என்பதைத் தெரிந்துகொள். மனிதனுக்கு

விவேகம் என்ற விலையற்ற பொக்கிஷம் வேண்டும். துக்கம், சுகம் வந்தால் கலங்காத நிதான புத்தி அவசியம்.''

பானுவின் மாறுதலைக் கண்டு அவன் நண்பர்கள் பரமேஸ்வரனின் பெரு முயற்சியைப் பாராட்டினர். அவர் அவனை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒவ்வொரு இடமாக வடபழனி, திருவள்ளூர், மகாபலிபுரம், ஸ்ரீ பெரும்புதூர், காஞ்சிபுரம் என்று அவன் சிந்தனையை மாற்ற அழைத்துக்கொண்டு போவார். மனைவியை இழந்து ஒரு வருஷமானதும், ஒரு ஆவணி ஞாயிற்றுக்கிழமை பானுவும் பக்கத்து வீட்டு பரமேஸ்வரனும் வைத்தீஸ்வரன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தனர். அங்கு சந்நிதியில் பரமேஸ்வரனுக்குத் தெரிந்த ஒருவர், தன் மனைவி, 24 வயதுப் பெண்ணுடனும் தரிசனம் செய்து கொண்டிருந்தனர். பரமேஸ்வரனைக் கண்டதும் அவர் மிகுந்த சந்தோஷத்துடன் பேசினார். அவரைப் பரமேஸ்வரன் பானுவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். "இவர் ஒரு ஆதீனத்தில் மடாதிபதியிடம் வேலையாக இருக்கிறார். இந்தப் பெண் அவருடைய புத்திரி. கல்யாணத்துக்கு இருக்கிறாள்'' என்றும், பானுவின் சோகக் கதையை அவர்களுக்கு சாங்கோபாங்கமாகவும் தெரியப்படுத்தினார். தரிசனம் முடிந்து கோயிலுக்கு வெளியே வந்ததும் பரமேஸ்வரனும், வந்த அவர் நண்பரும் தனியே சிறிது நேரம் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர். சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த அவன் அந்தப் பெண்ணைக் கவனித்தான். கதையிலும்-கவிதையிலும் வர்ணிக்கப்படும் அழகு வெறும் கற்பனைதான் என்று நினைத்துக் கொண்டிருந்த அவனுக்கு அவை உருவெடுத்து வந்ததுபோல் அவளைப் பார்த்ததும் தோன்றிற்று. அந்தப் பெண்ணிடம் ஒரு விசேஷக் கவர்ச்சியும், தன்னடக்கமுமிருப்பதை பானு கவனிக்கத் தவறவில்லை. அவன் சிந்தனையின் இடையே விமலாவும் தோன்றித் தோன்றி குறுக்கிட்டாள். சுப நாளால் இருந்து வந்த ஞாயிற்றுக்கிழமை, தற்போது தன் வாழ்வில் சோக நாளாய் மாறியிருக்கும்போது, இந்த தெய்வ சந்நிதியில் ஒரு அதிதமான சந்திப்பு ஏற்பட்டு, அமைதியை நாடிக்கொண்டிருக்கும் மனத்தில் ஒரு புது உணர்ச்சியைக் கிளறுவதென்றால் தெய்வத்தின் சக்தியைப் பற்றி என்னவென்று சொல்வது என்றவாறு அவன் எண்ணங்கள் அலைந்தன.

★

பரமேஸ்வரன் பானுவென்ற காயை உபதேசமென்பதால் ஊதிப் பழுக்க வைத்துவிட்டார். அவர் வைத்தீஸ்வரன் கோயில் பெண்ணை அவனை மணந்துகொள்ளச் சொல்ல ரொம்பவும் தயங்கி பிரஸ்தாபித்தபோது, அவரே மூர்ச்சையாகிக் கீழே விழும் ஆச்சர்யத்தில் அவன் ஊமையாகித் தன் மௌனத்தால் சம்மதத்தைத் தெரிவித்தான். ஜோஸ்யர்களும், சாஸ்திரிகளும் "வரப்போகும்

ஞாயிற்றுக்கிழமைதான் ஆவணி மாதத்தில் கடைசி முகூர்த்தம். அதை விட்டால் வேறு நாளில்லை'' என்று சொல்லிவிட்டனர். பானு முதலில் அந்த தினத்தை ஆட்சேபித்தும் அதே ஞாயிறு தான் அவனது மறு விவாகத்துக்கும் லபித்தது. ஞாயிறு ஆரம்பத்தில் அவன் வாழ்வில் பிரகாசத்தை உண்டு பண்ணியது. நடுவில் அஸ்தமித்து அவன் வாழ்வில் இருளை விளைவித்தது. மறுபடியும் பிரகாசிக்க உதிக்கிறது. இருந்தபோதிலும் அவனுக்கு மறுபடியும் எங்காவது இருண்டுவிடுமோ என்ற பயமிருந்து கொண்டு தானிருந்தது.

தன் மனம் இவ்வளவு தூரம் மாறினதற்கு காரணம் பரமேஸ்வரன்தான என்பது அவனுக்குத் தெரியாமலில்லை. தன் பழைய மாமனார் அவருடைய வகுப்புத் தோழரும், நெருங்கிய நண்பருமான பரமேஸ்வரன் மூலம், அவன மனத்தை மாற்றியதையும், அவனை இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையும் பானு தெரிந்துகொள்ள நாளாகவில்லை.

★

கல்யாணமானதும், கிராமத்திலேயே வளர்ந்த காமு தன் கணவனுடன் சென்னையில் நடத்தப்போகும் உல்லாச வாழ்க்கையைப் பற்றியும், ஞாயிற்றுக்கிழமையில் பொழுதுபோக்கும் இன்ப சம்பவங்களையும் பற்றி நினைத்து நினைத்து இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள்.

காமுவை ஒரு நல்ல நாள் பார்த்து பானுவிடம் கொண்டு விட்டனர் அவளது பெற்றோர்கள். அன்றும் ஞாயிற்றுக்கிழமையாகவே வாய்த்தது. அவன் இரண்டாம் கல்யாணமானதிலிருந்து அவனுக்கு சென்னையிலிருக்கப் பிடிக்கவில்லை. சில விரதங்களையும் மேற்கொண்டான். அதன்படி அன்றிரவு முதன் முதலாக மனைவி தன் வீடு வந்து சேர்ந்திருக்கும்போது, அவளுடனே, கூட வந்தவர்களுடனே அவன் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. பரமேஸ்வரனுக்குக்கூட ''மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதோ'' என்ற பயம். பானு பேசவேண்டியதை எல்லாம் ஒரு ஸ்லேட் பலகையில் எழுதிக் காட்டினான். காமுவுக்கு பானுவின் ஞாயிற்றுக்கிழமை-மௌன விரதம் நரக வேதனையாகவும், சித்ரவதையாகவும் இருந்தது. முதன் முதலாகப் புக்ககம் வந்ததும் புருஷன் தன்னிடம் பேசவில்லை-வாசலில் போய்ப் படுத்துக்கொள்ளுகிறானே-என்று தெரிந்ததும் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் நெஞ்சுக் குமுறலைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஆனால் அதற்கு மாறாக திங்கள் கிழமை விடிந்ததும், அவன் எல்லாரிடமும் கலகலப்பாகவும், சிரித்தபடி பேசியது எல்லாருக்கும் எல்லையற்ற இன்பத்தை அளித்ததோடு, பரமேஸ்வரனுக்குத்தான் உண்மையில் வெற்றியின் பெருமிதமாக உவகை பொங்கிற்று.

பானுவுக்குப் பரமேஸ்வரன் சிபாரிசில் ஒரு ஆதீனத்தின் நிர்வாகப் பதவி கிடைத்துவிடவே, அவன் விருப்பப்படியே வைத்தீஸ்வரன் கோவில் சமீபம் ஒரு கிராமத்தில் குடியேறி புதுவாழ்வு தொடங்கினான். 200 ரூபாய் சம்பளத்துக்கு அவன் ஒப்புக்கொண்டதுடன், அவன் காமுவின் நச்சரிப்பினால் எஜமானரிடம் ''ஞாயிற்றுக்கிழமை தான் மௌன விரதத்துடன் வேலை பார்க்க அனுமதிக்க வேண்டும், அதற்கு பதில் வாரத்தில் ஒரு நாள் தனக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

சுபநாள், சோக நாளாக மாறிய ஞாயிற்றுக்கிழமை இப்போதெல்லாம் அவன் வாழ்வில் ''சாந்தம் குடிகொண்ட அமைதி நாளாக'' ஆகிவிட்டது. அவன் அன்று பூராவும் மௌன விரதம் அனுஷ்டித்து வந்தான். ஒரு வேளை தான் சாப்பாடு. தெய்வ வழிபாடும் தத்துவப் புத்தகங்களும் படித்துப் பொழுது போக்கினான். மாலை வேலைகளில் கோயிலுக்கும், தெய்வீக—ஆன்மீக உபந்யாசங்கள், பஜனை முதலியவைகளுக்குத் தம்பதி சகிதமாய்ப் போய் வந்தான். ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியூர் போக நேர்ந்தால், பேசவேண்டிய இடங்களில் அவனுக்குப் பதிலாக மனைவி பேசலாம் என்றே அவளை அழைத்துப் போவது அவனுக்கு உறுதுணையாயிருந்தது. காமு அவன் வாழ்க்கைக்கு ஒரு லட்சியத் துணைவியாக அமைந்தது அவ்விருவர்கள் பாக்கியமா, அந்த ஞாயிற்றுக்கிழமையின் திருக்கூத்தா என்று எதைச் சொல்லுவது ?

உலக வியவஹாரிகத் துறையிலிருந்த (Materialistic) அவனது இல்வாழ்க்கையை இப்போது பாரமார்த்திகத் (Spiritualistic) துறையிலும் அதிகம் ஈடுபடச் செய்வித்தது அந்த ஞாயிற்றுக் கிழமையின் மஹிமைதானே !

அசோகா சுகந்த பாக்குத்தூள்

GANZON BROS.

DRESS SPECIALISTS

3. Thope Street

TRIPLICANE, MADRAS - 5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters.

★

In the hands of the Master-Tailors and Cutters of GANZON, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

கர்ப்போ பநிஷத்

மனிதன் கர்ப்பத்தில் சூட்சுமமான ஆத்ம சக்தியாய் பிரவேசித்து சரீரத்துடன் வெளி வருகிற தன்மைய மஹரிஷிகள், ஆராய்ந்து தலைப்பில் கூறியுள்ள உபநிஷத் மூலமாய் தெளிவாய் கூறியிருக்கின்றனர்.

ஐம்புலன்களை அடைந்து, அறுகுணங்களுடன் அமைந்து, ஸப்த நாடிகளையும் கொண்டு, இருவகைத் தன்மையாய், நற்சுவை ஆகாரத்தையும் உட்கொண்ட தன்மையே சரீரத்தின் அமைப்பு. இவ்வைந்தையும் சற்று ஆலோசிப்போமாகில்,

(1) ஐம்புலன்கள் பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு. ஆகாசம் என்பது. எந்த பாகம் கடினமாக இருப்பதோ அதுதான் பிருதிவி. எது திரவமாக இருப்பதோ அதுதான் அப்பு என்பது, அதுதான் தேஜஸ் என்பது. எது காற்று மயமாக காணப்படுகிறதோ அதுதான் வாயு என்பது. எது துவாரங்களாக இருக்கின்றனவோ அவைதான் ஆகாசம் என்பது. இவற்றின் உபயோகம் எவ்வாறு எனில், பிருதிவி சரீரத்தை நிலை நிறுத்துகிறது. அப்பு ஸகலத்தையும் ஒன்று சேர்க்கிறது. தேஜஸ், சரீரத்தைப் பிரகாசிப்பிக்கிறது. வாயு சரீரத்தை சமரஸப் படுத்துகிறது. ஆகாசம் உருவத்தை கொடுக்கிறது. ஆகையால்தான் காதுகளினால் கேட்கிறான் தோலினால் உணருகிறான். கண்களால் ரூபத்தை அறிகிறான். நாக்கினால் சுவைகளை அறிகிறான், மூக்கினால் மோப்பத்தை உணர்கிறான், உபஸ்தத்தினால் சிற்றின்பத்தை அறிகிறான், அபானத்தினால் சரீரம் ஏற்காத அம்சங்களை வெளியேற்றுகிறான்; புத்தியினால் உணருகிறான். மனஸினால் கருமங்களை உத்தேசிக்கின்றான். நாவினால் பகருகின்றான்.

(2) அறுகுணங்களாவது தித்திப்பு, புளிப்பு, உப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு என்பவையாம். சப்த ஸமிக்ஞைகள் ஷட்ஜ ரிஷபம், காந்தாரம், மத்பமம் பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கூறப்படும்.

(3) ஸப்த நாடிகள் யாவை? தம்பதிகள் தேவதத்தனால் கொடுக்கப்பட்ட ஸம்பத்தை குறைவின்றி அனுபவிக்கின்றார்களோ அப்பொழுது அறுசுவையினின்று, நல்ல ரத்தோற்பத்தியும், ரத்தத்திலிருந்து மாமிஸமும் மாமிஸத்தினின்றும் கொழுப்பும், கொழுப்பினின்று நரம்புகளும் நரம்புகளினின்று எலும்புகளும், எலும்புகளினின்று மானிட வீர்யமும். கர்ப்பமும், அதன் ஹிருதயத்தில் பித்தத்(ரத்தம்)த்தோடுகூடிய அக்னியும் உண்டாகிறது.

(4) இருவகைத் தன்மை, ஒரு இரவில் சுக்ரமும் சோணிதமும் கலக்கின்றன. 7 இரவுகளில் குமுழியாகிறான், 15 தினங்களில் ஒரு பிண்டம் ஆகின்றான். ஒரு மாதத்தில் உருவாகிறான். இரண்டு மாதங்களில் தலை உண்டாகிறது. மூன்று மாதங்களில் கால்கள் உண்டாகின்றன. நான்காம் மாதத்தில் முழங்கால்களும் இடுப்பும், வயிறும் உண்டாகின்றன. ஐந்தாவது மாதத்தில் பின் பாகங்கள் ஏற்படுகின்றன. ஆறுவது மாதத்தில் முகம், மூக்கு, கண்கள், காதுகள் ஸம்பவிக்கின்றன. ஏழாவது மாதத்தில் ஜீவனுடன் கூடப்படுகிறான். (ஆதலால் தான் இம் மாதத்திலே ஸீமந்த கலியாணம் செய்யப்படுகின்றன). எட்டாவது மாதத்தில் எல்லாவித லக்ஷணங்களையும் பூர்ணமாய் அடைந்தவனாக ஆகிறான். புருஷவீர்யம் அதிகரித்தால் புருஷனாகவும், ஸ்திரீ வீர்யம் அதிகரித்தால் ஸ்திரீயாகவும், இரண்டும் சமமாக இருக்கும் பக்ஷத்தில் நபும்ஸகத் தன்மையை அடைகிறான். ஸம்போக சமயத்தில் இருவர் மனப்பான்மையும், ஸந்தோஷமின்மையால் தான் கூனனாகவும், ஊமையாகவும், குருடனாகவும், நொண்டியாகவும், குள்ளனாகவும் ஆவிர்பவிக்கிறான்.

ஸ்திரீ புருஷ ரேதசுக்கள் வாயுவினால் சில சமயம் அடிக்கப்பட்டு இரட்டையாக ஆகிறான்.

இப்படி பஞ்சாத்மகனான சமர்த்தன் புத்தி, கந்தம், ரஸம் இவற்றின் துணை கொண்டு பிரணவ ஸ்வரூபியான பகவானை தியானிக்கிறான்.

இவற்றை அடைந்த பிறகு உஷ்ணம், சிலேஷ்மம், வர்தம் என்ற நாடிகளுடன் பிராணனை அடைகிறான்.

பிறகு ஒன்பதாம் மாதத்தில் எல்லா லக்ஷணங்களையும் ஞானத்தையும் சேஷ்டைகளையும் பூரணமாக அடைகிறான்.

பிறகு தன் முன் பிறப்பு இன்னதென்று அறிகிறான். அதன் நலத்தையும் தீங்கையும் உணருகிறான். தான் செய்த பூர்வ கர்மங்கள் அனைத்தும் அவனுக்கு காணப்படுகின்றன. "ஹாஹா, பிறப்பும், இறப்பும், மறுபிறப்பும் இம்மாயா உலகமாகிய துக்க ஸமுத்திரத்தை எப்படித் தாண்டுவது தெரியவில்லையே நான் மாத்திரம் இக் கர்ப்பத்தில் நின்று வெளியேறுவேனாகில் நாராயணனை நமஸ்கரிப்பேன், ஸாங்கியயோக முதலிய யோகங்களை அனுஷ்டித்து நாராயணனை வணங்குவேன், அந்தப் பரம்பொருளை தியானிப்பேன்" என்று தீர்மானிக்கிறான்.

இத்தகைய தீர்மானத்துடன் அவன் வெளியேறிய பின் வைஷ்ணவ வாயுவினால் அவனது மாயை விலகுகிறது.

—Rendered into Tamil by *V. K. V. Acharya*

கொலைகாரக் கணபதி

★ சாலிவாஹனன். ★

யாரங்கே யெனக் கேட்க யாருமிலாக் காரிருளில்
பேரிடிகள் முழங்குதல் போல் பெருஞ்சமரின் களிறொன்று
வீரங்கொள் வேங்கைகளும் விதிர்த்துப் புதரொதுங்கத்
தூரத் தொலை தூரத் தொடுவான மெதிரொலிக்க
பீதி யெழுப்பி விட்டுப் பிளிறிவெருண்டோடிற்று.
ஓடும் திருமகளை ஓடாது வசப்படுத்தித்
தேடும் திரவியத்தைத் தேக்காமல் ஏகவிட்டுக்
கேடும் பசிப்பிணியும் கேளிர் சொலும் ஏளனமும்
கூடும் கவலைகளும் குடியிருப்புத் தொல்லைகளும்
வேடுவர் போல் நாலு திக்கும் வெருட்டி யிவனைத் தொடரப்
பீடழிந்த மேனி பிழிந்தெடுத்த சக்கையென
மேடிட்ட மார்பும் மெலிந்த வுடற் கூறுகளும்
ஆடையெலாங்கந்தல் அவனுளத்தில் நாத்திகமும்
கூடிக் கொலுவிருக்கக் கும்மிருட்டில் வருகின்றான்.
வருகின்றவன் நோக்கில் வழிதுறைகள் ஏதுமில்லை
உருகிக் குலைந்தவுளம் உருக்காகி மரமரத்துக்
கருக்கிருட்டுக் காட்டில் கால்போனபடி நடப்பான்
நடமாடும் விலங்குகளும் நடுக்குங் களிறொலியும்
திடம் குலைந்து தடம் மாறித் திரிபவன்பால் வருகிறது.
வருகின்ற பயங்கரத்தை வறிஞனிவனறிந்தாலும்
துரியங்கடந்தவன் போல் துணிந்து நடந்து சென்றான்
மதம்பிடித்துத் தலைதெறிக்க மாமலைக் குன்றெழுந்ததெனக்
குதித்துவரும் குவலயமும் குலுகி விட்ட திவனருகே!
அருகில் அணுகியெழும் அலைபோலும் நடையானை

வருகின்றதைக் கண்டான் வறிஞன் கலங்கிவிட்டான்!
சரியின்று நமதுயிர்தான் சட்டென்று முடிகிறது
நரி தின்று பசி தீரும் நானில்லா என்னுடலை
சரிநின்று கரியுடனே சமர்புரிந்து பயனென்ன?
வருகின்றது வரட்டும் வணங்குகிறேன் கணபதியைக்
"கரிமுகத்து விநாயகநின் கருணையருள் வேண்டுகிறேன்
வரமளித்துக் காப்பாய் வணக்கங்கள் மலரடியில்!
பலவெடுத்து நீராடி மஞ்சள் கிரட்டி வைத்துத்
நலந்திருத்திக் கோலமிட்டுத் தளிரருகம்புல்லாலே
குலம் விளங்க வழிபடுதல் கூடவில்லை எந்தனுக்கு
பலரெனது திருவுள்ளம் மஞ்சள் மனஒருமை
குலமகளிர் கோலம் கும்பிடுமென் அங்கங்கள்
நலமளிக்கும் தேன் தமிழில் நானுரைக்கும் புன்மொழியாம்
பலகிளையின் அருகம்புல் பாவியிவன் வழிபாடு!
நிலந்தெளிக்கும் நீரெந்தன் நீண்டநாட் கழிவிரக்கம்!
பார்வதியின் செல்வா! பரந்தாமன் திருமருகா!
யாரெதிர்த்து நின்றாலும் யானெதற்கு மஞ்சுகிலேன்!
விண்ணவர்க்குத் தளபதியாம் விளையாடும் திருமுருகன்
அண்ணா உனக்கபயம்! அடியேனை காத்திடுவாய்
எண்ணாமற் செய்த பிழை எத்தனையோ அத்தனையும்
கண்ணாறக் கதறுமெந்தன் கண்ணீர் கழுவட்டும்"
என்று பரவசமாய் ஏழையவன் நின்றிசைத்தான்

★

திசையெல்லாம் திரிந்துவிட்டுத் திமுதிமென வந்தகரி
இசைபாடிக் கும்பிட்டு இறைவணக்கம் செய்பவன்பால்
அசைந்தாடி வந்து அவனை அலக்காகத் துதிக்கையினால்
வசந் தோ தாய்ப்பற்றி வானுயர்த்தி ஓடிற்று
ஓடுகின்ற மதயானை உயர்த்திவைத்த துதிக்கையிலே
பாடும் தமிழ்த் துதியும் பரவசத்து இன்னிசையும்
கூடும்படியிணைத்துக் குலவித்தழுவி நின்றான்
நின்று நிலைக்காமல் நெடுக நடந்தேகுகரி
நன்று நிறைந்தபுனல் நதிவெள்ளத்தின் நடுவில்
தன்துதிக்கை தனையுதறித் தவிதவிக்க வீழ்த்திற்று
"கொன்றுவிட்டாய் என்னைக் கொலைகாரா! கணபதி நீ!"
என்று வசை பாடி எழுந்திருந்தான் என் நண்பன்
"நன்றாகத் தூங்கிவிட்டாய் நண்பா கணபதி! யார்
கொன்றார்கள் உன்னை, கூறெ"ன்றேன் கனவுரைத்தான்!

கர்ம வீரன் அல்லது பீஷ்ம பிரதிக்ஞை

"சிராகி"

★

வாழ்க்கையில் வெற்றியும் உண்டு, தோல்வியும் உண்டு. வெற்றிக்குப் பெயர் இன்பம். தோல்வியின் பெயர் துன்பம். மனிதனை இவைகள் நிலை கலக்குகின்றன. உள்ளத்தின் அன்பை உலக அன்பாக மாற்றுபவன் இன்ப துன்பங்களுக்கு எட்டாமல் உயர்ந்துவிடுகிறான். இதுவே உண்மையான ஜயம்.

"ஒன்றை ஆக்குதல் மாற்றுதல் அழித்திடல் எல்லாம் நின் செயல் அன்று காண்" என்பது பாரதியாரின் அநுபவமல்லவா?

தியாகம் தன்னலமில்லாததானால்—கடமையை நிறைவேற்றத் தன்னையும் ஒருவன் தியாகம் செய்ய முடியுமானால்—வாழ்வு அமரத்துவம் அடைகிறது.

இவ்விதம் செய்பவர் கர்மயோகிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். பயங்கரமான பிரதிக்ஞை செய்ததால் கங்கையின் புதல்வனுக்கு பீஷ்மன் என்று பெயர் உண்டாயிற்று. இக்கர்மயோகியின் உண்மையான வெற்றியை ருசிகரமான சம்பவம் ஒன்று விளக்குகிறது.

பாரதப் போரின் பத்தாம் நாளன்று துரியோதனன் பீஷ்மரிடம் குறைபட்டுக் கொள்கிறான். 'பாண்டவரிடம் அன்பு கொண்டதனால் தளபதியின் கடமையைச் செய்யவில்லை' யென்று அவன் கூறியதும் பீஷ்மர் பிரதிக்ஞை செய்கிறார். "நாளை மாலைக்குள் பாண்டவர் படும் பாட்டைப்பார்" என்று அவரை அறியாமல் வாயிலிருந்து புறப்படுகிறது வார்த்தை: கௌரவ சேனைக்கு இது விருந்தாகிறது. பாண்டவ சேனையிலிருந்த ஒற்றர் மூலம் பாசறைக்காவலாகிய கண்ணனுக்குச் செய்தி கிடைக்கின்றது. பாண்டவர் கண்ணனிடம் தம்மை ஒப்படைத்துவிட்டுப் பாசறையில் நிம்மதியாக உறங்குகின்றனர். கண்ணன் பாஞ்சாலியிடம் இச் செய்தியைக் கூறி, பீஷ்மரின் பிரதிக்ஞைக்குத் தான் பதில் செய்ய முடியாதிருக்கும் அவல நிலையை விளக்கிக் கூறிவிடுகிறான். கண்ணனே கைவிட்டபின், பதிகளுக்கு முன்னதாகவே சிதையில் தன்னை அழித்துக் கொள்ளக் கண்ணனிடமே உதவியை நாடுகிறாள் பாஞ்சாலி. அவ்வாறு உதவி செய்ய முன் வந்த கண்ணனும் 'பெரியோரின் ஆசியைப் பெறவேண்டும்' என்று கூறிப் பாஞ்சாலியை இரவோடு இரவாக, மழையையும் பொருட் படுத்தாமல் பீஷ்மருடைய பாசறையில் கொண்டு சேர்க்கிறான்.

தன்னை வணங்கிய நங்கை யார் என்பதையும் அறியாத பீஷ்மர் வாய்க்கு வழக்கமான முறையில் 'மாங்கலியம் வளர' ஆசி கூறுகிறார்.

'மாங்கலியம் வளர்வதும், பாண்டவர் மடிவதும் முரணாகவிருப்பதை பாஞ்சாலி உணர்த்த, உணர்ந்த பீஷ்மர், தன் எண்ணம், சொல், செயல்களுக்கு காரணம் தான் அல்ல' என்பதை உணர்ந்து கொள்கிறார்—இல்லை—நமக்கு உணர்த்துகிறார். இது கண்ணன் செயல்—கடவுள் செயல்—என்று நிம்மதியடைகிறார்.

கீதையைக்கூறி பார்த்தனுடைய உள்ளத்தைத் தெளிவடையச் செய்து பின் கீதையாகவே யாகிவிட்ட கண்ணன் பீஷ்மருடைய பிரதிக்ஞையாகவும் தோன்றி நமக்குத் தெளிவூட்டுகிறான். இச்சம்பவமே பின்வரும் பாடலில் விளங்க வேண்டுமென முயலப்பட்டுள்ளது :—

‘கண்ணன் எண்ணம் எப்படி அப்படி
எண்ணிலா உலகம் இயங்கும்’ என்பதை
எண்ணிடின், இன்பம் துன்பம் எனுமிவை
எய்துவதில்லை என்பதை அன்(று)அவன்
தோழனுக் காகத் தெள்ளிய முறையில்
கோழைத் தனத்தைக் களைதலுக் காகத்
திருவாய் மலர்ந்தான்; தெளிந்தவர் உய்ந்தார்;
‘தெரிந்து கொள்ளத் திறனொன் றில்லை,
என்செய் வோம் யாம்?’ என்று மயங்கி
இன்னும் இன்னல் அடைவீர் ஆயின்
பின்வரும் செய்தி பிணித்த அவலத்தைப்
பெயர்த் தெறிந்துவிடும்;
பாரதப் போரில்
உயர்த்த புயங்க கேதனன் பத்தாம்
நாளன்று இரவு நலிந்த நெஞ்சொடு
பிதாமகன் வீடுமன் பாசறை வந்தான்;
சதாகாலத்தும் சத்தியம் உணர்ந்து
சத்துவமாகிய சிற் பொருளுக்கே
தன் செயல் எல்லாம் தத்தம் செய்துவிட்(டு)
“என் செயல் அன்(று) இது, யா(ன்) ஒரு கருவி,
காணும் படிக்கே கண்முன் தோன்றிடும்—
கண்ணன் வடிவமாம்—கருத்தும் மொழியும்
காணமுடியாத—கபடம் இல்லா
அன்பர்க்(கு) அடிமையாம்—ஒண்பொரு(ள்) ஒன்(று) எனைச்
செய்யவைக்கின்றது” என்பதை உணர்ந்து
அமைதியுள்ளம் அடைந்த வீடுமனை
அணுகி, அஞ்சலி செய்தனன், அடியிணை
மணிமுடி படியப் பணிந்து வணங்கி,
“பிதாமஹா! நீயலால் பின் எவர் எமக்கு
ஏதாகிலுந் துயர் வரின் ஏற்ற வல்லவர்?
ஐயிரு நாளாய் அமைந்த இவ் வமரில்
ஆட்கள் மடிந்தது அளவிடற் காமோ?
ஐவர்க்கும் அன்பை நீ அளித்தாய் எனினும்,
ஐய! நீ அகத்(து) அவலம் தீர்ப்பதற்(கு)
ஐயம் இல்லை, என்(று) அறிவேன், ஆயினும்,
ஏனோ என்மனம் என்று மிலாவகை
வானோய் பட்டே வெந்தழிகின்றது;
‘சூரர்தம் சொல்லும் செயலும் உலகில்
சூதில’ என்பதை சத்திய மாக்கப்
போதிய வன்மையும், போர் செயுந் திறனும்
யாதொரு குறையுமின் றெய்தி யிருந்தீர்;
தவமே முளைத்துத் தளிர்த்துப் பூத்துக்
குவலயத்தவரும் களிக்கக் காய்த்துக்